
மதுரை நகர விடுதி



புதிய கட்டிடத்
திறப்பு விழா

சிறப்பு மலர்

உ
சிவமயம்

மதுரை நகரவிடுதிக் கட்டிடச்
சிறப்பு மலர்

1994

மதுரை நகரத்தார் சங்கம்

25 வடக்குச் சித்திரை வீதி
மதுரை - 625001.

மதுரை நகரவிடுதிக் கட்டிடச்
சிறப்பு மலர்க்குழு

தலைவர் :

டாக்டர் தமிழண்ணல்

துணைத்தலைவர் :

நட்ராஜ் அண்ணாமலை

செயலாளர் :

RM.M. அண்ணாமலை

உறுப்பினர்கள் :

T. கனகசபை செட்டியார்

செ. செல்லப்ப செட்டியார்

டாக்டர் சுப. அண்ணாமலை

இராம. சிதம்பரம் செட்டியார்

சிக கரு.கண ராம. ரத்தினம் செட்டியார்

PL. சுப்பிரமணியன் செட்டியார்

லெ.மு.மு. முத்துமாணிக்கம்

டாக்டர் ந. மாணிக்கம்

சி.மு.அரு.நா. அரு. முத்தையா

RM.P. RM.P.V. முத்தையா

M. நாகப்பன்

R. சொக்கலிங்கம்

லெ.நா. சண்முகசுந்தரம்

M.CN. மெய்யப்பன்

AR.PL. சுப்பையா

பதிப்புரை

மதுரை நகர விடுதிக் கட்டிடம் புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்று, நெடுநாட்களாகக் கண்டுவந்த கனவு இன்று நனவாகியுள்ளது இப்பொழுது இக்கட்டிடம் இரண்டு மாடிகளையுடையதாய், அழகுறக் கட்டப் பெற்று வானுற ஓங்கித் திகழ்கிறது. மதுரை நகரத்தார் சங்கத் தலைவர் அறநெறியண்ணல் **லெ. நாராயணன் செட்டியார்** தலைமையில் கட்டிட அமைப்புக் குழு அமைந்து, மதுரை நகரத்தார்கள் — பெரியவர்கள், இளைஞர்கள் அனைவரும் அயராது பாடுபட்டு நிதி சேர்த்து, இம்மாளிகை உருவாகியுள்ளது. இதற்கு நிதியுதவிய அனைவரும் நம் நெஞ்சார்ந்த நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள்.

பாகனேரி மாணிக்கம் செட்டியார் அவர்கள் முதற்கண் பெருந் தொகை ஒன்று நல்கி, இவ் அறப்பணியைத் தொடங்கி வைத்தார்கள்

உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் பலருக்கும் கட்டுரை - கவிதை கேட்டு எழுதினோம். பலர் மனமுவந்து உடனுக்குடன் கட்டுரை அனுப்பியுதவினர். வேறுபல காரணங்களால் காலத் தாழ்வானாலும், கட்டிடம் அழகுற அமைந்ததுபோல, இம்மலரும் சிற்ப ஓவியச் சிறப்புடன் வெளிவருகிறது.

இம்மலர் உருவாக்கத்தில் கட்டுரை கவிதை வழங்கியவர்கள்; பொற்குவை நல்கி நற்பெயர் விளங்கிடும் விளம்பரங்கள் நல்கியவர்கள், மலர்க்குழுவில் அமைந்து விளம்பரம் சேர்க்கவும் மலர் உருவாகவும்

மலர்க் குழுவினர்



லெ. நாராயணன் செட்டியார்
தலைவர். நகரத்தார் சங்கம்



டாக்டர். தமிழண்ணல்
மலர்க்குழு தலைவர்



நடராஜ் அண்ணாமலை
துணைத்தலைவர், மலர்க்குழு



RM. M. அண்ணாமலை
செயலாளர். மலர்க்குழு

உதவியவர்கள், அழகுற அச்சிட்டுதவிய விஜயா அச்சகத்தார் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகும். மலர்க் கட்டுரைகள் விளம்பரங்களை அச்சுப்படி திருத்தியும் அழகுற அச்சிட்டும் உதவிய பேராசிரியர் டாக்டர் ந. மாணிக்கம் அவர்கட்கும் மனிதத்தேனீ இரா. சொக்கலிங்கம் அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

'அங்கயற்கண்ணி திருக்கோயிலருகே நகரத்தார் திருப்பணியில் மொட்டைக் கோபுரம் முழுக்கோபுரமான வடக்குவாசல் எதிரே, என்றும் நிலைபெறுமாறு நின்று விளங்கும் நகரத்தார் விடுதிக்கட்டிடம் சமூக நலனுக்குப் பயன்பட்டு, எல்லோரும் வாழ ஆலவாயண்ணலையும் அங்கயற்கண்ணியையும் வணங்கி இறைஞ்சுகிறோம்.

மலர்க்குழுவினர்



சிவ. கரு. கண. ராம.
ரத்தினம் செட்டியார்



PL. சுப்பிரமணியன் செட்டியார்



லெ. மு. மு. முத்துமாணிக்கம்



டாக்டர். ந. மாணிக்கம்




சி. அரு. நா. அரு. முத்தையா



RM. P. RM. P. V. முத்தையா


மலர்க்குழு உறுப்பினர்கள்


பொற்கிழிக்கவிஞர் சொ. சொ. மீ.சுந்தரம்


M. CN. மாணிக்கம்


T. கனகசபை செட்டியார்


செ. செல்லப்ப செட்டியார்


டாக்டர் சுப. அண்ணாமலை


இராம. சிதம்பரம் செட்டியார்



M. நாகப்பன்



R. சொக்கலிங்கம்



லெ. நா. சண்முகசுந்தரம்



M. CN. மெய்யப்பன்



AR. PL. சுப்பையா



AN. மெய்யப்பன்
முன்னாள் மேலாளர், நகரத்தார்சங்கம்

உ

சிவமயம்

30-1

லெ. நாராயணன் செட்டியார்
தலைவர்
நகரத்தார் சங்கம், மதுரை.

வாழ்த்தும் நன்றியும்

திருவால வாயென்று கேட்டவரே அறம்பெறுவர் செல்வமோங்கும்
திருவால வாயென்று நினைத்தவரே பொருளடைவர் தேவ தேவைத்
திருவால வாயிடத்துக் கண்டவரே இன்பநலம் சேர்வர் என்றும்
திருவால வாயிடத்து வதிந்தவரே வீட்டுநெறி சேர்வர் அன்றே

என்பது பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம். ஆரூரில் பிறக்க முத்தி, அருணை நினைக்க முத்தி, தில்லை தரிசிக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, மதுரையில் வசிக்க முத்தி. இதை உணர்ந்த நம் நகரத்தார் பெருமக்கள் ''பக்கத் துணையிருப்பான் சொக்கலிங்கப் பெருமான்'' என்று சொக்கலிங்கப் பெருமானையும், ''மதுரைப்பதி தழையத் தழையும் கொடி — மலயத்துவசன் வளர்த்த பசுங்கிளி'' என்று மீனாட்சியம்மையையும் ''இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'' என்று விடாமல் பற்றிக் கொண்டு வழிபட்டு வருகிறார்கள். செட்டி நாட்டுப் பகுதிக்குப் பக்கத்தில் உள்ள பெரிய நகரம் மதுரை. வழிபாட்டிற்காகவும், கல்யாணங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காகவும், மருத்துவ உதவிக்காகவும் ஆண்டு தோறும் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் மதுரைக்கு வருகிறார்கள். சில சமயங்களில் பெண்கள் மட்டும் தனியாக மதுரைக்கு வந்து இரண்டொரு நாட்கள் தங்கித் தங்கள் வேலைகளை முடித்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தப் பெருமக்கள் தங்கள் வீடுகளில் இருப்பது போன்ற உணர்வுடன், பாதுகாப்புக்காகத் தங்கிச் செல்ல காசி முதல் குமரி வரை சத்திரம் கட்டிச் சமூகப் பணியாற்றிய நகரத்தார் பெருமக்கள், மதுரையில் நகர விடுதியை ஏற்படுத்தினார்கள். வயிநாகரம் நாகப்பையா அவர்கள் கட்டிய மொட்டைக் கோபுரத்திற்கு எதிரில் நகர விடுதி அமைந்தது. மணியடித்ததும் விடுதியிலிருந்து புறப்பட்டுப் போனால் தீபாராதனை பார்க்கச் சொக்கநாதர் சந்நிதிக்குச் செல்ல முடியும். இந்த விடுதி 1956 ஆம் ஆண்டு முதல் நம் மதுரை நகரத்தார் சங்கத்தின் நிர்வாகத்திற்குட்பட்டு இயங்கி வருகிறது. ஊருணி நீர் நிறைந்தாற் போன்ற பெருஞ் செல்வரும், உலகம் தழுவிய பேரறிவாளரும், ஆலைகளும் கல்விச் சாலைகளும் வைத்து மதுரைக்கு ஏற்றமளித்த ஆலை அரசரும், என் மதிப்பிற்குரிய மாமனாரும் ஆகிய கலைத் தந்தை திரு. கருமுத்து தியாகராசச் செட்டியாரவர்கள் மதுரை நகரத்தார் சங்கத்தின் முதல் தலைவராகப் பொறுப்பேற்று நகரத்தார் உயர்வு பெறப் பெரும்பணியாற்றினார்கள். நகரத்தார் மாணவர்களுக்குக் கல்வி பெறும்

வாய்ப்பளித்தும், ஆலைகளில் பணியாற்ற உதவி செய்தும், தொழில் துறையில் பலர் உயர வாழ்வு தந்தும் அவர்கள் ஆற்றிய பணி நகரத்தார் வரலாற்றில் பொன்னேடுகளில் பொறிக்கத்தக்கதாகும். கலைத் தந்தை அவர்களுக்குப் பிறகு, நம் தன வணிகர் திருமரபின் புகழ் விளக்கும் தலைவராகத் திகழ்ந்த என் தமையனார் திரு லெ. அழகுசுந்தரம் செட்டியாரவர்கள் நம் சங்கத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். எதையும் தாங்கும் இதயம் பெற்றவரும், இன்முகத்தோடு எல்லோரையும் வரவேற்கும் நல்ல மனம் படைத்தவரும் ஆகிய அழகுசுந்தரனாரவர்கள் நகர விடுதியைப் புதிதாகக் கட்ட வேண்டுமென்ற சிந்தனையை உருவாக்கினார்கள். காரைக்குடியில் நிகழ்ந்த நகரத்தார் நல உரிமை மாநாட்டில் பெரும் பங்கேற்றார்கள். பல மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்கினார்கள்

நம் சங்கத்தின் மூன்றாவது தலைவராக வந்த தொழிலதிபர், பனையப்பட்டி திரு சுப. அ. நடராசன் செட்டியாரவர்கள், காட்சிக்கு எளியராய், கவலைகளை மாற்றும் கற்பகமாய் நகரத்தார்களுக்குப் பணியாற்றினார்கள். அவர்கள் பதவிக் காலத்தில், மதுரை நகர விடுதிப் புதுக் கட்டிடப் பணிக்காக, திரைப்பட நடிகர் எஸ். வி. சேகர் குழுவினரின் நாடகம் நடத்தி சுமார் ரூ. 76,000 மிச்சப்படுத்தி, வங்கியில் போட்டார்கள். ஆண்டுதோறும் ஆவணிக் கார்த்திகையில் நம் நகர விடுதியிலிருந்து திருப்பரங்குன்றத்துக்குப் பால் குடம் காவடி செலுத்தவும், திருப்பரங்குன்றம் நகர விடுதியில் அன்னம் பாலிப்புச் செய்யவும் 1983ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்தார்கள். அந்தப் பணி இன்று வரை மேன்மேலும் வளர்ந்து வர முருகப் பெருமான் திருவருள் செய்திருக்கிறான். சங்கத்தில் மாதக் கூட்டங்களும் இலக்கியப் பேருரைகளும் நடைபெற்றன; தங்குபவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது.

பனையப்பட்டி திரு சுப. அ. நடராசன் செட்டியாரவர்கள் மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை 10—3—1985ல் என்னிடம் ஒப்படைத்தார்கள். புதிய நகர விடுதிக் கட்டிடம் கட்டுவது அவசியமான மிக அவசரமான பணி என்பது என் மனத்தில் பட்டது. பழைய கட்டிடத்தின் பின் பகுதி பாதுகாப்பற்றதாக மாறிக் கொண்டிருந்தது தண்ணீர்த் தட்டுப்பாடும் இருந்தது. நகரத்தார் பெருமக்கள் பலர் துணையாக இருந்தார்கள். பாகனேரி மாணிக்கம் செட்டியாரவர்கள் சங்கக் கட்டிடத்திற்கு ரூ. 1,11,111 தருவதாக அறிவித்தார்கள். அதன் பிறகு நாங்கள் நிதி வசூலைத் தொடங்கினோம். என்னுடைய நன்கொடையாக ரூ. 1,11,000 கொடுத்து இரண்டாண்டுகள் முயன்று, நகர விடுதிப் புதிய கட்டிடத்தைச் சுமார் 29 லட்ச ரூபாய் செலவு செய்து கட்டி முடித்து, 20—8—1993இல் நம் தமிழக அமைச்சர் மாண்புமிகு இரகுபதி அவர்கள் திறந்து வைத்துப் பாராட்டப் பல பெருமக்கள் ஆசி வழங்க இக்கட்டிடத்தை நகரத்தார் வளர்ச்சிக்குத் துணையாக்கி இருக்கிறோம்.

கீழ்த் தளத்தில் முன் இருந்ததை விட அதிகமான பரப்பளவில் நகரத்தார்கள் தங்கவும் முதல் தளத்தில் 15 அறைகளில் தங்கவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. மொட்டைக் கோபுரத் தெருவில் நம் கட்டிடப் பகுதி தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காக இரண்டு பெரிய கடைகளும், இரண்டு மிகச் சிறிய கடைகளும் கட்டி

வாடகைக்கு விடப்பட்டுள்ளன. கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் இந்தியன் வங்கி அலுவலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ நாற்பதாண்டுகளாக நாம் கண்ட கனவு, என்னுடைய பதவிக் காலத்தில் சிறப்பாக நிறைவேறத் திருவருள் புரிந்த அன்னை மீனாட்சியின் திருவடிகளை நன்றியுடன் வாழ்த்துகிறேன்· நன்கொடை அளித்த பெருமக்களுக்கும், கட்டிடம் கட்டும் பொழுது கைம்மாறு கருதாது உதவிய பெருமக்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர விடுதிப் புதிய கட்டிடத் திறப்பு விழா மலர் இப்பொழுது உங்கள் கைகளில் மலர்ந்து மணம் பரப்புகிறது. இம்மலருக்கு விளம்பரங்கள் தந்த வணிகப் பெரு மக்களுக்கும், கட்டுரைகள், கவிதைகள் தந்த கலைச் செல்வர்களுக்கும், மிகச் சிறப்பாக இம்மலரைத் தயாரித்துள்ள டாக்டர் தமிழண்ணல், டாக்டர் ந. மாணிக்கம் தொழில் அதிபர் திரு. ஆர். எம். எம். அண்ணாமலை, அழகுற அச்சிட்டுள்ள விஜயா பிரிண்டர்ஸ் உரிமையாளர் மனிதத்தேனீ இரா. சொக்கலிங்கம் அனைவரையும் பாராட்டி வாழ்த்து கிறேன்.

இந்தப் புதிய கட்டிடத்தை நல்ல முறையில் பயன்படுத்தவும் தூய்மையாக வைக் கவும் நகரத்தார் பெருமக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை வடக்குச் சித்திரை வீதியில் நகரத்தார் பெருமையை நிலைநாட்டும் வகையில் வடக்குக் கோபுரம் மட்டுமன்று, வளம் பொலியும் நகர விடுதிக் கட்டிடமும் திகழ்கிறது என்று மக்கள் போற்றும் வாய்ப்பைத் தந்த அன்னை மீனாட்சியை மீண்டும் வணங்கி வாழ்த்துகிறேன்.

லெ. நாராயணன்

நமது நன்றி

தமிழ்ச்சங்கம் வளர்த்த மதுரையிலேயே தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்ட நகரத்தார்க்கென ஒரு சங்கம் அமைத்து அந்தச்சங்கத்துக்கு ஒரு புதிய கட்டிடம் மதுரையில் அமைந்துள்ளது சிறப்பாகும்.

அறநெறி அண்ணல் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களுக்கு எப்பொழுதும் ஓர் ராசி உண்டு. அவர்கள் தலைவராக உள்ள சங்கங்களுக்கு அவர்கள் காலத்தில் ஒரு புதிய கட்டிடம் உருவாகி விடும். கட்டிடக்கலையில் தமக்கெனத் தனிப்பாணி வகுத்த ''கலைத் தந்தை'' அவர்கள் பாணியிலேயே அறநெறி அண்ணல் திரு லெ. நாராயணன் செட்டியார் அவர்களும் நகர விடுதிக் கட்டிடத்தை மிக அருமையாக அமைத்துள்ளார்கள். நகரத்தார் சங்கக்கட்டிடங்களிலேயே மதுரை நகர விடுதிக் கட்டிடம்தான் மிகச் சிறப்பாக நவீன முறையில் கட்டப்பட்டுள்ளது என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். இந்த அருமையான கட்டிடத்திறப்பு விழாவிற்கு ஒரு சிறப்பு மலர் வெளியிட வேண்டுமெனத் தீர்மானித்து அதற்கு என்னைச் செயலராக நியமித்த தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும் மதுரை நகரத்தார் பெருமக்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மலர் சிறப்புற அமைவதற்குத் தேவையான கட்டுரைகளைத் தொகுத்துச் செம்மைப்படுத்திய மலர்க்குழுத்தலைவர் டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்கும் டாக்டர் ந. மாணிக்கம் அவர்களுக்கும் என் நன்றி.

மலர் வெளிவராமல் தாமதப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் உயர்திரு. லெ. நா. அவர்கள் தூண்டுதலில் அவர்களுடைய புதல்வர் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் பெரும் முயற்சி எடுத்துப் பெருவாரியான விளம்பரங்களை எங்களுக்குப் பெற்றுத் தந்தார்கள். எனவே திரு லெ. நா. சண்முகசுந்தரம் அவர்களுக்கு என்னுடைய சிறப்பான நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மலருக்காக என்னுடன் சிறந்த முறையில் ஒத்துழைத்த நகரத்தார் சங்கச் செயலர், துடிப்பு மிக்க இளைஞர் திரு மு.சி.நா. மாணிக்கம்

அவர்களுக்கும் பேருதவியாளர் எங்கள் மலர்க்குழுவின் உதவித் தலைவர் திரு. நடராஜ் அண்ணாமலை அவர்களுக்கும், குழிபிறை பழ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கும், கண்டரமாணிக்கம் திரு. மு. சி. நா. மெய்யப்பன் அவர்களுக்கும், காரைக்குடி சோம. அரு. முத்தையா அவர்களுக்கும், நகரத்தார் சங்க உதவித் தலைவர் டாக்டர். சுப. அண்ணாமலை அவர்களுக்கும் தேவகோட்டை திரு லெ. மு. முத்துமாணிக்கம் அவர்களுக்கும் திரு ரெத்தினம் அவர்களுக்கும் நடமாடும் கம்பியூட்டர் என்றுநாங்கள் அன்புடன் அழைக்கும் நகர விடுதியின் முன்னாள் மேலாளர் தேவகோட்டை மெய்யப்பன் அவர்களுக்கும், மலர்க்குழுவின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் கோவை நகருக்கு வசூலுக்குச் சென்றிருந்தபொழுது எங்களை உபசரிப்பில் திக்குமுக்காட வைத்த தேவகோட்டை திரு. காளைராஜா, கண்டனூர் திரு. செல்லகணபதி, திரு. சபா. சிங்காரம், கோவை நகரத்தார் சங்கத்தலைவர் திரு. ராமநாதன் ஆகியோர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய கோவை, திருச்சி, சென்னை நகரத்தார் பெருமக்களுக்கும் மலர்க்குழுவின் சார்பில் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இம்மலர் சிறப்புற அமைவதற்கு எங்களுக்கு மிகுந்த ஒத்துழைப்புக் கொடுத்து அச்சடித்துத் தந்த ''மனிதத்தேனீ'' இரா. சொக்கலிங்கம் அவர்களுக்கும் அச்சடிக்க பொருள்கள் கொடுத்துதவிய பெரிய மனது கொண்ட சில பண்பாளர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றி.

ராம. மு. அண்ணாமலை
செயலர்,
நகர விடுதிக்கட்டிடத் திறப்புவிழா மலர்க்குழு

வாழ்க்கை நெறியில் நகரத்தார்

நகரத்தாரின் பழகும் பண்பாடு (Human Relationship) பெரிதும் அழுத்தமானது; நயமானது.

கணவனும் மனைவியும் பழகும் முறைகள் குறிப்பிடத் தக்கவை. ''ஆச்சியைக் கலந்து சொல்கிறேன். செட்டியாரைக் கேட்டுச் சொல்கிறேன்'' என்பார்கள். வேற்றுமையை மறந்து ஒற்றுமைக்கான கூறுகளைப் போடும் பாங்குகள், கண்ணகி கோவலனிடம் நடந்து கொண்டவை போல்வன.

தாய் தந்தை, பிள்ளைகள் பெற்றோர், உறவினர் எனப் பழகும் பண்பாடுகள் தனித்தனி எண்ணிப் பார்க்கத்தக்கன.

''நகரத்தார்கள் யாரிடமும் முறித்துக் கொள்ள மாட்டார்கள்; முறைத்துக் கொள்ளவும் மாட்டார்கள்'' என்பதாகக் குன்றக்குடி அடிகளார் ஒருமுறை பாராட்டினார்.

குடும்ப அமைப்பு, கூட்டுக்குடும்ப முறை, தனிக்குடும்ப முறை எல்லாம் பெரிதும் ஏற்புடைய பழக்கங்களை உடையன.

மூத்தவர்களை நேரில் பெயர் சொல்லி அழைக்கமாட்டார்கள். அதனால் கணவனையும் எதிரில் நின்று பெயர்சொல்ல மாட்டார்கள்.

பணம், சிக்கனம், சேமிப்பு, வருவாய் தேடுதல என அவர்கள், நன்மை தரும் எல்லைகட்குச் சென்றாலும் சிக்கனத்தையே ஒரு வருவாய் ஆக்கிக் கொள்வதில் அவர்களுக்கு நிகர் வேறு யாருமில்லை எனலாம்.

'ஆறில் ஒன்றை அறத்திற்கு' ஒதுக்கி, நன்கொடை அளித்து, பொதுநலம் பேணித் தருமம் செய்வதில் ஒரு போட்டி வைத்தால், பிறர் எட்ட முடியாத முதலிடத்தை நகரத்தார்களே பெறுவர் என்பதுறுதி. ஏனெனில் அறநெறி, தருமம் செய்தல் அவர்களின் குருதியொடு கலந்த குடியுணர்வாகும்.

இறைவணக்கம்

விநாயகர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை — பதினோராம் திருமுறை

முருகன்

முருகன் செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே! ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான் — திருமுருகாற்றுப்படை

ஆலவாய் அண்ணல்

ஒருமருந்தாகியுள்ளாய் உம்பரோ டுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகி நின்றாய் பேரமுதின் சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாய் ஆளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந்து ஆலவாயில் அப்பனே அருள்செயாயே — திருநாவுக்கரசர்

அங்கயற்கண்ணி

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் ப்யனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எரிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலயத்துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே! — குமரகுருபரர்

திருமகள்

காடுவெட்டிப் போட்டுக் கடியநிலந் திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் — வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா! இலக்குமியே!
என்றைக்கும் நீங்காதிரு! —பாடுவார் முத்தப்பர்

நகரத்தார் நன்மையை வேண்டிச்
செயங்கொண்ட சோழீசர்மேல்

பாடுவார் முத்தப்பர் பாடிய
பஞ்சாட்சரமாலை

நன்றேபெருக! நவிலும் குபேர நகர்வணிகர்
என்றேஉலகம் புகழ அவர்க்கு ஈண்டு இருநிதியம்
நின்றே நிலவ அறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றேசோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே

மன்னும் பெருமை பெருகிக் குபேர நகர்வணிகர்
என்னும் மகிமையுறவும் வறியவர்க்கு ஈந்திடவும்
பொன்னும் பொருளும் புவியுமுப் போகம் பொருந்திடவும்
துன்னும்சோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே

சிவனாலயமும் திருமால் பணியும் சிறப்புறத்தான்
நவமாய்ப் புதுக்கியும் ஆக்கியும் மேலோர் நவிலும் நல்ல
தவமா மிதெனத் தரணியிலோங்கவும் தாங்குமகத்
துவமாசோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே

வந்தோர்க் குதவும் வணிகர் குபேரன் வளமையர்க்கும்
பிந்தார் தனத்தில் இவரே உலகிற் பெரியரெனச்
சிந்தார்புரம் இளையாற்றங் குடியார் சிறப்புறவும்
சொந்தார்சோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே!

யவனம் கலிங்கம் தமிழகம் சிங்களம் யாண்டுமுள்ள
புவனமெலாம் இவர்வர்த்தகம் ஓங்கவும் புண்ணியம்சேர்
தவமும் தருமமும் தங்க வணிகர் தரம்பெறவும்
துவசசோழீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே!

மதுரை மீனாட்சி

கவிச்செம்மல் டாக்டர். ரெ. முத்துக்கணேசன்

கண்ணொளிச் சோதி யாளைக்
கருதுவார் உருவத் தாளைப்
பண்ணொளிர் தேவா ரத்தைப்
பரவுவார் நெஞ்சத் தாளை
உண்ணினைந் துயிரைக் காக்கும்
மீனாட்சி நாமத் தாளை
தண்மதுரை ஆளும் ஆதித்
தலைவிதாள் வழுத்து வோமே !

ஆயிரம் மறைக ளாலும்
அறிவொணாத் தேவி யாளைத்
தாய்தமிழ்ச் சங்கம் தோற்றும்
தமிழணி பூணு வாளை;
தேய்பிறை சூடும் பெம்மான்
திருமேனி பாதி கொண்ட
மாயவன் தங்கை யாளை
மனத்தினால் சிந்திப் போமே !

உலகினில் கமலம் பூக்க
ஒளிக்கதிர் உதவு மாபோல்
உலகுயிர் உய்ய நோக்கும்
ஒளிர் மீனக் கண்ணியாவாள்;
திலகமாம் நகரத்தார் தம்
திருவளர் செல்வ மாகும்
கலைசெறி மரகதத்தின்
கழலடி காப்புத்தானே !

இராமேஸ்வரா காசிவிஸ்வேஸ்வரா

(''பொற்கிழிக் கவிஞர்' ''காசிஸ்ரீ''' அரு. சோமசுந்தரன்)

இராமேஸ்வரா காசிவிஸ்வேஸ்வரா
இராமேஸ்வரா காசிவிஸ்வேஸ்வரா
பர்வத வர்த்தினி இராமேஸ்வரா
பாராளும் விசாலாட்சி விஸ்வேஸ்வரா (இரா)

உப்பூரின் வெயிலுகந்த விக்னேஸ்வரா
உளமார ஸ்ரீ ராமர் தொழுதேஸ்வரா
ஒப்பில்லாச் செந்தூரின் முருகேஸ்வரா
ஓங்கார நாயகனே விஸ்வேஸ்வரா (இரா)

உயிர்தேவி பட்டினத்துத் திலகேஸ்வரா
உன்பாதம் பணிகின்றோம் பரமேஸ்வரா
அயராமல் நடக்கின்றோம் ராமேஸ்வரா
அஞ்சாமல் காப்பாயே விஸ்வேஸ்வரா (இரா)

கருநாட கம்தாண்டிக் கங்கேஸ்வரா
காலார நடக்கின்றோம் விஸ்வேஸ்வரா
ஒருநாடாய் எல்லோரும் உயர்வாகவே
ஒன்றாகப் பூசித்தோம் விஸ்வேஸ்வரா (இரா)

காசிமுதல் குமரிவரை உனதுஎல்லையே
கால்நடந்து வந்தவர்க்குக் கவலைஇல்லையே (இரா)

(இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்குப் பாதயாத்திரை புறப்பட்ட பொழுது உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோவிலில் 1983 மே மாதம் பாடியது)

ஒன்பது கோயில் நகரத்தார்

இளையாதகுடி, மாற்றூர், இரணியூர், சூரர்குடி,
களையாத நன் நேமம், கருது இலுப்பை,
வேலர்குடி,
வளையாத பிள்ளையார், வாழ் மருதூர்
வயிர வழனூர்
திளையா ஒன்பது கோவில் திருவணிக
மண்டலமே!

— பாடுவார் முத்தப்பர்
வணிக மண்டல சதகம்

நகரத்தார்களின் இதழியல் பணி

பதிப்புச்செம்மல்
ச. மெய்யப்பன்

செட்டி நாடு செந்தமிழ் வழங்கும் நாடு. செந்தமிழ் செழிக்கும் நாடு. சொல்லேர் உழவர் உழாமலே தமிழ் வளம் கொழிக்கும் நாடு. நகரத்தார்களின் நற்றமிழ்ப்பணி பெரியது, விரிந்தது, ஆழமானது. துறைதொறும் தமிழ் வளர்ச்சிக்கு நகரத்தார்கள் செய்த தொண்டு பெருநூல் அளவுக்கு விரியும் களங்களை உடையது. இதழியல் துறைக்கு அவர்கள் அரும் பெரும் பணிகள் ஆற்றியுள்ளார்கள். எழுபத்து ஐந்து ஆண்டுகட்கு முன்னே சிவநேசன் என்னும் திங்கள் இதழை நடத்தியுள்ளார்கள். சைவசமயம் பற்றிய பல அரிய நுண்ணாய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட பெருமை அதனைச் சாரும். இராய சொக்கலிங்கம் தேசிய எழுச்சியை வளர்க்கும் 'ஊழியன்' இதழைப் பல்லாண்டு சிறப்பாக நடத்தினார்கள். விடுதலை வேள்வியில் பங்கு பெற்ற பல அறிஞர்களின் நல்ல கட்டுரைகளைத் தாங்கி நாடும் மொழியும் சிறக்க அந்த இதழ் உழைத்தது. செட்டி நாட்டு ராஜாராம் மோகன்ராய் என்னும் சொ. முருகப்பா 'குமரன்' இதழை நடத்தினார். சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார். செட்டி நாட்டுக்கு மட்டுமன்றித் தமிழ் நாட்டின் சீர்திருத்த இயக்கங்களுக்கு அது ஊற்றுக்கண்ணாய் அமைந்தது. புதுமைக் கருத்துக்களைச் சீர்திருத்த விதைகளை விதைத்த பெருமை இதற்கு உண்டு. இவ்விரு பெருமக்களும் தேசிய இயக்கமும் தன்மான இயக்கமும் தமிழகத்தில் தழைக்கத் தங்கள் பத்திரிக்கைகள் மூலம் அரிய பெரிய பணிகளைச் செய்தவர்கள். பின்னாளில் சிறந்து விளங்கிய எழுத்தாளர் பெருமக்கள் பலர் இவ்விதழில் எழுதிப் பழகியவர்கள். ஊதிய நோக்கைக் கருதாமல் நல்ல பத்திரிக்கை நடத்தியவர்கள் நகரத்தார்கள்.

கோனாப்பட்டு முருகு. சுப்பிரமணியன், ஆத்தங்குடி பெரியண்ணன், பாகனேரி நாராயணன் சேர்ந்து நடத்திய 'பொன்னி' இலக்கிய இதழ் மறுமலர்ச்சித் தமிழுக்குப் புதிய பெரிய களம் அமைத்துக் கொடுத்தது. பேச்சு வழக்கும், கொச்சை வழக்கும் கலந்த அம்மாமித் தமிழ்நடையில் இருந்து முற்றிலும் மாறுபட்டு உணர்ச்சி மிக்க, எழுச்சி மிக்க நடையினைத் தமிழில் உருவாக்கிய பெருமை பொன்னியைச் சாரும். பிராமணர்களே மிகுதியாக எழுதிப் புகழ் பெற்ற நாளில் தமிழர்களைப் பத்திரிக்கை உலகில் அறிமுகப்படுத்திய பெருமை பொன்னியின் தனி உரிமை. தீபாவளி மலர்களை மற்ற பத்திரிக்கைகள் வெளியிட்ட காலத்தில் பொங்கல் மலர்களை வெளியிட்டுப் புதுமை புகுத்தியது. பாரதிதாசன் கவிதைகளைப் பரப்பிய சிறப்பு பொன்னிக்கு அமைந்த தனிச் சிறப்பு. பாரதிதாசன் பரம்பரையைத் தோற்றுவித்து உருவாக்கி வளர்த்த சாதனை மிகப் பெரிய சாதனை. பாரதிதாசன் இலக்கியக் கொடையும் வாழையடி வாழையென வளர்ந்து வருகிறது.

தமிழ்ப் பத்திரிக்கை உலகில் தனிப்பெரும் சாதனை நிகழ்த்தியவர் சக்தி வை. கோவிந்தன்

அவர்கள். பிரிட்டிஷ் பத்திரிக்கைகளுக்குச் சமமாகப் பத்திரிக்கை நடத்தியவர். ஆங்கில இதழ் டயம்ஸ்போலத் தமிழில் மிகச் சிறந்த திங்கள் இதழை நடத்தினார். மிக உயர்ந்த தாளில் சிறந்த அச்சு முறையில் அழகிய படங்களுடன் கண்ணைக் கவரும் வண்ணங்களில் சக்தி இதழ் பட்டொளி வீசியது. தேர்ந்த கல்வியும் தெளிந்த ஞானமும் செயல்திறனும் மிக்க இவர் நடத்திய சக்தி இதழ் தமிழ்ப் பத்திரிக்கை உலகின் விடிவெள்ளி. சாமிநாத சர்மா, ஏ.கே. செட்டியார், தி.ஜ.ர., அழகிரிசாமி, ரகுநாதன் முதலிய பல எழுத்தாளர்கள் இதன் மூலமே தமிழ் உலகுக்கு அறிமுகமாயினர். மிக நல்ல பத்திரிக்கைக்கு உவமை சொல்ல எல்லோரும் சக்தி இதழையே எடுத்துக் காட்டுகின்றனர். பத்திரிக்கைக்காகப் பெரும்பொருள் இழந்து குறிக்கோளிற்காகவும் இலட்சியத்திற்காகவும் வாழ்ந்த சான்றோர் வை. கோவிந்தன்.

வை. கோவிந்தன் மகளிருக்காக 'மங்கை' என்னும் திங்கள் இதழைப் பலர் பாராட்டும்படி நடத்தினார். குழந்தைகளுக்காக மிகப் பெரிய அளவில் 'அணில்' என்னும் வார இதழைப் படங்களுடன் வனப்புடன் வெளியிட்டார். தமிழ்வாணன் அதில் பயிற்சி பெற்றவர்.

கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் தனித் தமிழில் 'தமிழ்நாடு என்னும் பெயரில் ஒரு நாளிதழை நடத்திக் காட்டினார். நடுநிலையுடன் எல்லாக் கட்சிச் செய்திகளையும், நாட்டு நடப்புக்களையும் வெளியிட்டு இதழியலில் புதியதொரு வழிவகுத்தார். பெயருக்கு ஏற்பத் தமிழ்நாடு, தமிழ்-தமிழர்-தமிழ்நாட்டு உயர்விற்குப் பலவழிகளில் உழைத்து, பல துறைகளில் வெற்றிகண்டது. பெரும் பேராசிரியர்களான பண்டிதமணி, இராசமாணிக்கனார், அவ்வை துரைசாமிப்பிள்ளை, அ. கி. பரந்தாமனார், சி. இலக்குவனார் எழுத்துக்களை வெளியிட்டுத் தமிழ்றிஞர்களைப் போற்றிப் பாராட்டுவதற்கு வழிவகுத்தது. ஆசிரியர் உரையில் நாள்தோறும் குறள் ஒன்றினை வெளியிட்டது (இன்றைய தினமணி செய்து வருகிறது). 67-இல் எழுந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மொழிக்குப் போராடிய மறவர்களை, வாழ்வளித்த வல்லுநர்களை, கொடிபிடித்த தொண்டர்களை, உயிர் கொடுத்த தியாகிகளை ஊர் அறிய உலகறிய எழுதிக்காட்டியது. திராவிட இன மான உணர்ச்சியை வளர்த்தது. மொழி, இலக்கியம், நாகரிகம், பண்பாட்டை வளர்க்கும் தமிழ்ப் பண்ணையாய்த் தமிழ்நாடு நாளிதழ் திகழ்ந்தது. தமிழ்மக்கள் விழிப்புணர்வு பெறாத காரணத்தால் கலைத் தந்தை தியாகராசர் பல இலட்ச ரூபாய்களைப் பத்திரிக்கைக்காக இழந்தார்.

இன்று இதழ்களில் வழங்கும் பலநூறு நல்ல தூயதமிழ்ச் சொற்களை உருவாக்கிக் கொணர்ந்த பெருமை தமிழ்நாடு இதழின் தனிச்சிறப்பு.

கண்ணதாசன் 'தென்றல்' தினசரி, வார இதழ் மூலம் செய்த மொழிப்பணி காலத்தால் அழிக்க முடியாதது. தென்றலில் அவர்

நடத்திய வெண்பாப் போட்டி நூற்றுக்கணக்கான மரபுக் கவிஞர்களைத் தமிழுக்கு அளித்துள்ளது. இளைஞர்கள் இலக்கியத்தரமிக்க இணையற்ற வெண்பாக்களைப் படைத்தனர் தமிழ்ப்பாக்களைப் பத்திரிக்கைகள் படிக்கும் மக்களுக்குப் பழக்கப்படுத்தினார்கள்.

கண்ணதாசன் - 'கண்ணதாசன்' என்னும் பெயரில் நடத்திய திங்கள் இதழ், திறனாய்வு நெறிமுறைகளை வளர்த்தது. சிற்றிதழ் வரிசையில் பெரும்பணி செய்தது. கணையாழி, தீபம், எழுத்து, சாந்தி, செம்மலர் போலத் தனித் தன்மையுடன் இல்க்கிய விளக்காக ஒளி வீசிற்று.

கண்ணதாசன் நிரம்ப எழுதவும் 'தென்றலும் கண்ணதாசன் இதழும்' இதழில் கவிதை நடை மூலம் செய்திகள் சொல்லவும் கலை இலக்கியத் துறைகளில் புது மரபுகள் உருவாக விழுதுகளாக அமைந்தன.

ஏ. கே. செட்டியார் குமரி மலர் திங்கள் இதழை 40 ஆண்டுகள் நலமுடன் நடத்தினார். தேசிய இயக்கம் விழுதுவிட, வீறுகொள்ளப் பல நூறு கட்டுரைகளை வெளியிட்டார். 100 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த நல்ல கட்டுரைகளை மறுபதிப்புச் செய்து அவற்றுக்கு நிலைபேறு கிடைக்கும்படி செய்தார். இதழியலில் தொண்டுள்ளத்தோடு தொடர்ந்து பணியாற்றினார். ஒவ்வோர் இதழிலும் 30க்கும் மேற்பட்ட அனைத்துலக மொழிகளின் பொன்மொழிகளை 40 ஆண்டுகளும் வெளியிட்டார். அவை பொன் மொழிக் களஞ்சியமாய்த் திகழ்கின்றன.

கண்டனூரைச் சேர்ந்த அரு.இராமனாதன் 'காதல்' என்னும் திங்கள் இதழைச் சிறப்புற நடத்தினார். பாலியல் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தாமல் நனிநாகரிகமாக வெளியிட்டார். அரபுக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள். வாக்ஸாயனின் காமசூத்திரம், சங்க அகப்பாடல்கள், திருக்குறள் காமத்துப்பால் ஆகியவற்றின் நெறியினைப் பாமரர்களும் புரிந்து கொள்ளும்படி எளிமையாக வெளிவரச் செய்தார். மணமக்களுக்கு உடலுறவு பற்றி அறிவியல் முறைப்படி விளக்கிய பெருமை காதல் இதழைச் சாரும்.

ஆசியாவிலேயே அதிகமாக விற்பனையாகும் தாய்மொழிப் பத்திரிக்கை குமுதம். இதன் ஆசிரியர் எஸ். ஏ. பி. அண்ணாமலை. இதன் கௌரவ ஆசிரியர் கோடி கொடுத்த கொடைஞன் வள்ளல் அழகப்பர். குமுதம் வாரந்தோறும் புதுமை புகுத்தும் இதழ். அது நாளும் செய்துவரும் நல்ல புதுமைகளை நாடறியும். கல்கிக்குப் பின் மிகப்பெரிய தொடர்கதைகளைத் தொடர்ந்து வெளியிட்டுச் சாதனை செய்து வருகிறது. தமிழ்ப்பத்திரிக்கை விற்பனையில் இமய உயர்வினை எட்டிய குமுதத்தின் சாதனை உலகச்சாதனை ஆகும். அரசியல் விமர்சனங்களும் அரசுவின் கேள்வி பதில்களும் அண்ணாமலை போல் உயர்ந்துள்ளன. அகில உலகச் சாதனை செய்த அண்ணாமலையாரை இதழியல் என்றும் மறக்காது, மறக்க முடியாது.

குமுதம் நிறுவனம் நடத்தும் கல்கண்டு, இளைஞர் இதழ். சுயமுன்னேற்றத்திற்கு வழி

கூறும் இதழ். கேள்வி பதில் அமைப்பில் புது நெறி படைத்துப் புதுயுகம் படைத்த பெருமை தமிழ்வாணனைச் சாரும். 35 ஆண்டுகளில் தாம் ஒருவரே 32 பக்கங்களிலும் எழுதி இதழ் முழுவதும் சுவை நிரம்பச் செய்தவர். குமுதமும் கல்கண்டும் பிறர் பின்பற்ற முடியாத தனித் தன்மை சான்ற வார இதழ்கள்.

கடல் கடந்த நாடுகளிலும் நகரத்தார்கள் தமிழ்நேசன், வீரகேசரி முதலிய புகழ் மிக்க தினசரி இதழ்களை நடத்தி அலை கடலுக்கு அப்பாலும் தமிழ் வளர்த்துத் தமிழ் பரப்பித் தமிழ் நெறி காத்துத் தமிழ்ப் பண்பாட்டுத் தூதுவர்களாக விளங்கியிருக்கிறார்கள். கடியாப் பட்டியைச் சார்ந்த இராம. சாத்தப்பன் என்பவர் சன்டே டைம்ஸ் (Sunday Times) என்னும் ஆங்கில இதழையும் சென்னையில் சிறப்புற நடத்தினார். அது தொடர்ந்திருந்தால் தமிழருக்கென, ஓர் ஆங்கில ஏடு நிலைத்திருக்கும். அவருடைய முயற்சி தொடராதது தமிழரின் தவக்குறைவே.

கல்வி புகட்டுதல், செய்தி அறிவித்தல், பொழுது போக்கு முதலிய மூன்று கூறுகளிலும் நகரத்தார்கள் நடத்திய இதழ்களின் பணி வானுயர ஓங்கி வளர்ந்துள்ளது. நகரத்தார் இதழ்கள் தரத்தாலும், பண்பாலும், அமைப்பாலும், அறிவாலும், தமிழ் இதழ் உலகில் மிகப் பெரிய கொடையினை அளித்துள்ளன. நகரத்தார். இப்பணியைத் தொழிலாகச் செய்யாமல் தொண்டாகச் செய்தவர்கள்.



* பட்டினத்தாரின் சிந்தனைகள்

டாக்டர் சுப. அண்ணாமலை,
முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் + முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

எது செல்வம்? நம்மைக் கேட்டால், பணம் காசு, மாடு, மனை ; நில புலம் தாம் செல்வம் என்போம். ஆனால், 'இவை எல்லாம் செல்வம் அல்ல ; 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்கிறார் குமர குருபரர். நிறையப் பொருள் சேர்த்தால் மட்டும் இன்பம் வந்து விடாது ; அதைச் சேர்ப்பது பிரச்சினைகளை உண்டாக்கலாம். ஏன்? அந்தச் செல்வமே. பிறகு பிரச்சினையாக நிற்கலாம் !

வாழ்வதற்குப் பொருள் தேவை. அதைச் சம்பாதிக்கும் வழி முறையால், பொருளைப் பற்றிய மனப்போக்கினால், எவ்வளவோ துன்பம் உண்டாகலாம். தூக்கம் வராமல் போகலாம். அமைதி கெடலாம். மகிழ்ச்சி மருந்திற்கும் கிடைக்காமல் போகலாம். இந்த நிலை வராமல், சம்பாதிக்கும் வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்கிறார் பட்டினத்தார்.

அவர் மிகப் பெரிய செல்வராக வாழ்ந்தவர். கடல் வாணிகம் செய்தவர். பல தொழிலாளர்களை வைத்து, கப்பல் ஓட்டியும், வாணிகம் செய்தும் வந்தவர். பிறகு, 'செல்வ வாழ்வினால் பயன் இல்லை' என்று உணர்ந்து, அத்தனை செல்வத்தையும் துறந்து ஆண்டியானவர்.

ஆனால், தம்மைப் போல, மற்றவரையும் துறவு கொள்ளும்படி அவர் சொல்லவில்லை. இல்லற வாழ்வில் இருந்துகொண்டே, அளவோடு சம்பாதித்து, வளமாக வாழ வழி கூறினார். அவரது சிந்தனை ஒன்றை நோக்குவோம்.

நமக்குத் தேவையான பணத்தை, உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். குறைந்த காலத்தில், நிறைந்த செல்வம் சேர்க்க வேண்டும் என்று, குறுக்குவழி தேடக்கூடாது. இராப்பகலாகக் கடுமையாக உழைக்கக் கூடாது. வேலையில் பதற்றமோ, அவசரமோ காட்டக் கூடாது. ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, அதிலேயே முழுக் கவனமும் செலுத்த வேண்டும். அதைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அதை முடிக்கும் முன்பே, அதைவிட அதிகமாக, மற்றொரு வேலையில் பணம் கிடைக்கலாம் என்று, அதை அரை குறையாக விட்டுச் செல்லக் கூடாது. செய்யும் தொழிலை, ஒரு தவமாகச் செய்ய வேண்டும்.

அடுத்தது: நாம் உழைப்பதால், நமக்கோ, மற்றவருக்கோ பயன் உண்டா? நமக்கு, உழைத்த ஊதியம் கிடைக்குமா? என்று தெளிந்த பிறகுதான், வேலையில் ஈடுபடவேண்டும். கரடுமுரடான நிலத்திற்குத் தண்ணீர் இறைத்தும் பாயச்சுவதால் பயன் என்ன?

பலர் கூடிப் பணி செய்யும் தொழிற் சாலையில், அதன் உரிமையாளர், தொழிலாளர், அலுவலர் - ஆகியோரிடையே சுமுகமான உறவு நிலவ வேண்டும். அப்போது தான், தொழிலுக்கு ஏற்ற சூழ்நிலை அங்கு இருக்கும். இதற்கு, தொழில் பற்றிய சிக்கல்களை, இம்மூன்று சாராரும் நடுநிலைமையோடு எண்ணிப்பார்த்துத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். ஒரு சாராருக்கு நன்மையும், மற்றவர்களுக்குப் பாதகமும் ஏற்படும் வகையில், ஒரு தலைப் பக்கமாகப் பேசுபவர்

---

* மதுரை வானொலியில் நிகழ்த்திய பேச்சு. வானொலியினர் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

இருப்பர். அவர்களுடன் மற்றவர்கள் சேரக்கூடாது. அவர்கள் ஆசை காட்டுவதற்காக, நல்லவர் கூட்டத்தை விட்டு விலகக் கூடாது.

பிரச்சினைகளைச் சந்திக்கும்போது, உணர்ச்சி வசப்படக்கூடாது. கோபப்பட்டு, ஆத்திரப் பட்டு, சண்டை சச்சரவில் இறங்கக் கூடாது. வன்முறையால், எத்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

இறுதியாக: நம்முடைய தேவைக்குச் சம்பாதித்தால் போதும். அடுத்த தலைமுறைக்கும் சேர்த்துவைக்க ஆசைப்படக்கூடாது. செல்வம் சேர்ந்தால், பெருகினால், அதுவே பிரச்சினை யாக முளைக்கலாம். இப்போது, பட்டினத்தாரின் பாடலைக் கேளுங்கள்.

''ஓடாமல், பாழுக்கு உழையாமல், ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல், நல்லவர் கூட்டம் விடாமல், வெங்கோபம் நெஞ்சில்
நாடாமல், நன்மை வழுவாமல், இன்றைக்கு நாளைக்கு என்று
தேடாமல், செல்வம் தருவாய், சிதம்பர தேசிகனே''.

பாட்டை நன்றாகக் கவனியுங்கள். சம்பாதிக்கும் பொருளைச் 'செல்வம்' என்று சொல்லவில்லை பட்டினத்தார். இத்தகைய எச்சரிக்கையுடன், மக்கள் எல்லோருக்கும் நன்மை உண்டாக்கும் அறவழியில், பொருளைச் சம்பாதிக்கும் மனப்பக்குவத்தைத் தான் செல்வம் என்று கூறுகிறார்.

ஒவ்வொன்றுக்கும் ஓர் அடையாளம் உண்டு. 'இரண்டு கையும் கூப்புதல், வணக்கத்தின் அடையாளம். மலர்ந்த முகம், மகிழ்ச்சியின் அடையாளம். இதுபோலக் குணங்களுக்கும் அடையாளம் உண்டு. வளம், வசதி ஆகியவற்றுக்கும் அடையாளம் உண்டு. ஆனால், இந்த அடையாளங்கள் எப்போதும் காணப்படமாட்டா. சில நேரத்தில், சில இடங்களில் மட்டுமே காணப்படும். இவற்றைப் பற்றிப் பட்டினத்தார் சிந்திக்கின்றார்.

கருணை உள்ளவர்களைப் பற்றி, முதலில், அவர் சிந்திக்கிறார். துன்பப்படுபவர்களிடம் அவர்கள் காட்டும் பரிவும், இரக்கமும், கருணையும் அவர்களின் அற்புதமான ஒரு குணத்தின் அடையாளமாக, அவருக்குத் தோன்றுகின்றன. வெளியிலே புகையைப் பார்த்து, உள்ளே தீ இருப்பதைத் தெரிந்து கொள்வதைப் போல், கருணையும், பரிவும் இரக்கமும் ஒருவரிடம் இருப் பதை, வெளிப்படுவதைப் பார்த்து, அவருக்கு,'அருள் என்ற அற்புதமான ஆற்றல், ஒரு குண மாக வாய்த்திருப்பதைப் பட்டினத்தார் தெரிந்து கொள்கிறார். இந்த அருள், இறைவனால் மனிதருக்கு, ஒரு வரம் போல வழங்கப்படுவதாகும்.

கருணை, மனிதரின் குணம். அருள், இறைவனின் குணம்; இறைவனின் ஆற்றல். மக்களிடம் கருணையும், இறைவனிடம் அன்பும் காட்டும் மனிதருக்கு இறைவன் அருளை வழங்குகின்றான். அவர்கள் அருளாளர் ஆகிறார்கள்.

அருளைப் பெறுவதும் ஓர் உடைமைதான்; செல்வம்தான் அந்தச் செல்வம், பிற செல்வங்கள் போலத் தனியான பொருளாக நில்லாமல், மக்களின் குணத்தோடு, சக்தியோடு சேர்ந்துவிடுகிறது. அவர்களின் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் வெளிப்படுகிறது. எனவே, இந்தச் சொல்லும் செயலும் அடையாளமாக நின்று, அவர்கள் (அருள் உடையோர்) என்று காட்டும்.

அந்த அடையாளங்கள் யாவை? அவர்களின் தவம் ஓர் அடையாளம். 'வாராது வந்த மாமணி போலக் கிடைத்த அருளை, மேலும் வளர்த்துக் கொள்ள, அவர்கள் செய்யும் ஒரு மனப்பட்ட முயற்சி, தவம். அடுத்த அடையாளம், அவர்களின் உயர்ந்த குணம். மனிதருக்கு உயர்ந்த குணம் எது? எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு செல்லும் குணம் தான். 'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க' என்று எண்ணுவது, இந்தக் குணம். அவர்களிடம் இயற்கையாக உள்ள கருணை ஓர் அடையாளம். இது இருந்தால்தான், அவர்கள் இறைவன் அருளைப் பெற்றார்கள். அவர்கள், யாவரிடமும், அன்பாகப் பழகுவதும், அன்பைச் செயலில் காட்டுவதும் மற்றொரு அடையாளம். அவர்களின் சொல், மற்றவர்க்கு அறியாமையை நீக்கும். நல்வழி காட்டும், அது ஓர் அடையாளம்.

> ''அருள் உடையோரை, தவத்தில், குணத்தில், அருளில், அன்பில்
> இருள் அறு சொல்லினும் காணத்தகும்''

என்பார் பட்டினத்தார். இது, எதுபோல என்று, அவர் சில உவமைகளைச் சொல்லுகிறார்.

செல்வம் வைத்திருப்பவர்க்கு அடையாளம், ஆடம்பரமான வாழ்வு அன்று. அறத்திற்கு வாரி வழங்கும் செயல் இருந்தால்தான், அவர் உண்மையான செல்வர். உண்மையான வீரனைப் போர்க்களத்தில் அடையாளம் காணலாம். வீட்டில், கோயிலில், சமுதாய மன்றத்தில், சாதுவாக இருப்பான் அவன். ஆனால், பகைவரை எதிர்த்துக் களத்தில் இறங்கிவிட்டால், பிடரி சிலிர்த்து, முழக்கமிடும் சிங்கத்தைப் போல ஆண்மை காட்டுவான். ஞானியை, அவன் முகம் காட்டிக் கொடுக்கும். உலகம் முழுவதும், நடுநிசியில் உள்ள அமைதி, அந்த முகத்தில் எழுதியிருக்கும், அது ஞானத்தின் முகவரி. மனத் தெளிவின் கனத்த அடையாளம். இதோ அந்தப் பாடல்.

> ''பொருள் உடையோரைச் செயலிலும், வீரரைப் போர்க்களத்தும்,
> தெருள்உடையோரை முகத்திலும் தேர்ந்து தெளிவதுபோல்,
> அருள் உடையோரை, தவத்தில், குணத்தில், அருளில், அன்பில்
> இருளறு சொல்லினும் காணத்தகும் கச்சி ஏகம்பனே.''

வாழ்க்கை என்ற வண்டிக்கு இரண்டு சக்கரங்கள். அவை, அன்பு, அறம் என்ற அச்சாணிகளில் சுழல்கின்றன. நாகரிகம், பண்பாடு, சமயம், தத்துவம் முதலிய, எல்லாத் துறைகளிலும், அன்பும் அறமும் அடிப்படையாக இருக்க வேண்டும். அறநெறி தவறி. பிறரை ஏமாற்றி, பிறரைப் பயன்படுத்தி, பொருள் ஈட்டுபவனும், மனைவி மக்களிடமும், உறவினரிடமும் அன்பு இல்லாத சுயநலக்காரனும் இறைவனிடம் உண்மையாக அன்பு கொள்ள முடியாது. அன்பு என்பது பரிணாம வளர்ச்சி, மக்களிடம் காட்டும் அன்புதான் இறையன்பாக வளர்ச்சி அடைய வேண்டும். ''அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார், அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே'' என்பார் திருமூலர்.

பட்டினத்தார், 'இறைவனிடம் உண்மையான அன்பு இல்லாதவர் செய்யும் வழிபாடும், மேற்கொள்ளும் சிவக்கோலமும், தவக்கோலமும், அவர்கள் சாத்திரம் படிப்பதும், மற்றவர்களை ஏமாற்றுவதற்குத்தான்' என்கிறார்.

> ''நேமங்கள், நிட்டைகள், வேதங்கள், ஆகம நீதிநெறி,
> ஓமங்கள் தர்ப்பணம், சந்தி, செபமந்திர யோகநிலை
> நாமங்கள், சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
> சாமங்கள் தோறும் இவர் செய்யும் பூசைகள் சர்ப்பனையே.''

என்பது அவர் பாடல். சர்ப்பனை என்பது வஞ்சனை.

இந்தப் புறக் கோலமும், புறச் செயல்களும் ஆன்மாவை மேல் நிலைக்கு அழைத்துச் செல்லமாட்டா. பிறவியை வென்று, பிறவாமையை அடைந்து, மேல்நிலை அனுபவம் பெற வேண்டும் என்றால், அன்பும், அறமும் தேவை. அவற்றைக் கடைப்பிடிக்க, ஒரு புது மனிதனாக மாறவேண்டும் என்கிறார் பட்டினத்தார்.'' நீற்றைப் புனைந்தென்ன, நீராடப் போயென்ன, நீ மனமே, மாற்றிப் பிறக்க வகை அறிந்தாயில்லை'' என்பது அவர் கூற்று. 'மாற்றிப் பிறப்பது' என்றால் புதுவாழ்க்கை அமைத்துக் கொள்வது, நம் குணங்களின் போக்கைத் திருத்திக் கொண்டு வாழும் முயற்சியில் இறங்குவது-என்று பொருள் ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' என்று எண்ணிக்கொள்ளும்படி பாரதியும் கூறுவார். நற்குணங்களே நன்னெறியில் வாழ நமக்குத் துணை செய்யும்.

உண்மையான இறையன்பு இல்லாதவர், துறவு மேற்கொண்டு, வீட்டை நீங்கிக் காடுகளில் திரிந்தாலும், யோகம் செய்கின்றேன் என்று மூச்சுக் காற்றை வசப்படுத்தினாலும், கந்தலாடை அணிந்து, பிச்சை எடுத்து உண்டாலும் பயன் இல்லை என்கிறார் பட்டினத்தார். அதே சமயம், உண்மையிலேயே இறைவனை நினைத்து உருகும் அன்புடையவர், இல்லற வாழ்வில் இருந்து இன்பங்கள் எல்லாம் அனுபவித்தாலும், அவர்கள் இறுதியாக, மெய்ஞானம் பெற்று, வீடு பேறு அடைவர் என்கிறார்.

காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்பு இலாதவர்; ஓங்கு விண்ணோர்
நாடே, இடை மருதீசர்க்கு மெய்யன்பர், நாரியர்பால்
வீடே இருப்பினும், மெய்ஞ்ஞானம் வீட்டின்பம் மேவுவரே.

இதற்குக் காரணம், துறவி கடுமையான வாழ்க்கை வாழ்ந்தாலும், உண்மையில் இறையன்பு இல்லாதவனாயின், 'எல்லாம் தனது மன வலிமையால் செய்வது' என்று எண்ணுகிறான். அதனால், அவனிடம் அகந்தை இருக்கிறது. ஆனால், இல்லறத்தான், உண்மை இறையன்புடையவனாயின், தான் எல்லா இன்பமும் அனுபவித்தாலும், அவை எல்லாம் இறைவன் தந்தவை என்று எண்ணுகின்றான். அவனிடம் அகந்தை இல்லை.

எனவே, இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா என்று பட்டினத்தாரைக் கேட்டால், எத்தகைய வாழ்வாக இருந்தாலும், அறமும், உண்மையான அன்பும் வேண்டும் என்பது அவர் கூறும் விடை.

அது ஒரு காலம்

இரங்கூனில் தைப்பூசம்

ஜூலை 1960

தனவணிக மக்கள் தைப்பூசத்தன்று சிவக்கோலம் பூண்டு பவனியுடன் வந்தார்கள். ஆறறையிலிருந்து கீழே இறங்கித் திரு வீதிக்கு எழுந்தருளும்போது அவர்கள் இறைவனுக்குச் செய்த உபசாரத்தை என்னென்று சொல்வேன்! முருகன் நேரே எழுந்தருளி வந்து நின்றால் எவ்வாறு மனம் உருகி வழிபடுவார்களோ அப்படி வழிபட்டார்கள்.

— வாகீசகலாநிதி கி.வா. ஜகந்நாதன்

உ

மதுரை நகர விடுதி புதிய கட்டிடத்தை
ஓயாத உழைப்பால் உன்னதமாக

கட்டி அதன் அழகுமிகு அடித்தளத்தை
பாகனேரி **மாணிக்கம் உண்ணாமலை** அரங்கம்
என பெயர் சூட்டித் தந்த
மதுரை நகரத்தார் சங்கத்திற்கு



என்றென்றும் எங்கள் குடும்பத்தாரின்

நன்றியும் வணக்கமும் வாழ்த்தும்

பாகனேரி **மாணிக்கம் உண்ணாமலை**

குமரகுருபர அடிகள் காட்டும் வழி

டாக்டர் ந. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை

முன்னுரை :

''அறங்கினர் கல்வியானும் அணிகிளர் ஒழுக்கினானும்
நிறங்கினர் உண்மையானும் நிகரிலாப் பெருமையாளர்'' என்றும்,

''நடைகெழு கல்வியும் நயக்கும் ஞானமும்
தடையற எழுபிர சங்க வாய்மையும்
மடையுடைந் தெனக்கவி வடிக்கும் வாக்குமிக்கு
உடைமையின் நோக்கிஆங் குளர்வி யந்தனர்'' என்றும்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் மதிப்பிடப்பெறும் குமரகுருபர அடிகள், சைவமும் தமிழும் தழைக்கத் தோன்றிய தகையாளர் ஆவர். கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நன்னாட்டில் தண்பொருநை ஆற்றின் வடகரையில், ஸ்ரீவைகுண்டம் என்று வழங்கும் ஊரின் வடபால் உள்ள கைலாசபுரத்தில் தோன்றி. வடநாட்டில் கங்கைக்கரை வரையில் தம் தெய்வத்தமிழ் ஆற்றல் மேம்பட்டு விளங்கச் சைவப்பணியாற்றிய தவச்சான்றோராய்த் தனிச் சிறப்புடன் திகழ்கின்றார். அடிகள் அருளிய பாடல்களும், காசியில் நிறுவிய குமாரசாமி மடமும் இன்றும் நின்று நிலவித் தமிழின் பெருமையையும், சைவத்தின் மாண்பையும் உணர்த்தி வருகின்றன. அடிகளின் வழிவந்தோர்களால் கி. பி. 1720-ஆம் ஆண்டளவில் திருப்பனந்தாளில் தோற்றுவிக்கப்பெற்ற திருப்பனந்தாள் காசிமடமும் அடிகளைப்பின்பற்றித் தொடர்ந்து நற்பணியாற்றி வருகின்றது.

''இம்மை வாழ்வுக்கு அப்பால் உள்ள பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டுவதாய், மேம்பட்ட அனுபவம் வாய்ந்த சான்றோர் வாழ்வின் விலைமதிப்பரிய உயிரோட்டக் கருவூலமாய், என்றும் நின்று நிலவுவதே சிறந்த நூலாகும்'' என்று மில்டன் அழகுறக் கூறுவதை டபிள்யூ. எச். அட்சன் நன்கு எடுத்துக்காட்டுவதோடு, அத்தகைய மேலோர்தம் தாக்கம் நம்மிடம் விரைந்து பதியுமாறு - அவர் தம் உணர்வோட்டம் நம்மிடம் ஆழமாக நிலவுமாறு - நூற்பயன் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். மேலும். எவற்றிலும் ஆன்மீகப் பொருளையும் அழகையும் கண்டு அனுபவித்து, அவ்வனுபவ நிலைகளை நாமும் எய்துமாறு சொல்லும் திறனுடையவரே மெய்ப்புலவர் என்றும் தெளிவாக்குகிறார். (An introduction to the study of Literature).

சுந்தரர் தேவாரத்தை ஆராய்ந்த டாக்டர் மொ.அ. துரையரங்கனார், ''இறையடியவர்கள் ஒருவகையில், நமக்கு வழிகாட்டும் துணைவர்களாக உள்ளவர்கள்'' என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

தம் அனுபவத்தில் கண்ட நிலையான உண்மைகளைப் பிறரும் அறிந்து உய்யும் பொருட்டுக் கூறி வழிகாட்டும் ஒளிவிளக்குகளாக இறையடியவர்கள் திகழ்கின்றனர் எனலாம்.

''எரிந்திலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந்தன்று''

(புறப்பொருள் வெண்பாமாலை)

என்று பொருள்மொழிக்காஞ்சித்துறை கூறப்படுவதற்கேற்ப இறையடியவர்கள் தாம் விரும்பிக்கண்ட நிலையான உண்மைகளை, உயிர்கள் உய்யும் பொருட்டு உணர்த்தி வழிப் படுத்துகின்றனர் என்பது தகும். உயிர்ப்பயணத்தை நெறிப்படுத்தும் வகையில் அடியவர் கூற்றுக்கள் அரிய பயன்தந்து நிற்கின்றன; இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் போல் உதவு கின்றன. இறையடியவர்களுடைய பெருமையாலும், தலைமைச்சிறப்பாலும் அவர்கள் காட்டும் வழியில் உலகம் செல்லுதல் இயற்கை. அவர்கள் உலகை நல்வழியில் செல்லுமாறு வழிப் படுத்தும் தகுதி கருதியே, ''அகில காரணர் தாள் பணிவார்கள் தாம், அகில லோகமும் ஆளற்குரியர்'' என்று சேக்கிழார் பெருமான் சிறப்பிக்கின்றனர் எனலாம்.

குமரகுருபர அடிகள் தம் துறவு நிலையாலும், இறையனுபவங்களையும் சமயக் கருத்துக்களையும் தமிழ் நலம் கனிய உணர்த்தியுள்ள பாடல்களாலும் மக்களை இறைநாட்டம் கொள்ளச் செய்து, நிலையான சிறந்த வழியில் செல்லுமாறு அறிவுறுத்துகின்றனர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் திருமூலர் கருத்துக்கிணங்கத் தாம் அனுபவித்த இறை நலங்களையெல்லாம் உலகமும் பெற்று இன்புறுமாறு அதற்குரிய வழிகளில் செலுத்தும் மேன்மையராக அடிகள் விளங்குகின்றனர். துறவியர் இயல்பைக் கூறும்போது இவ்வாறு மக்களை நல்வழிப்படுத்துவதே துறவியர் கடமை என்பதை அடிகள் குறிப்பாக உணர்த்தக் காண்கிறோம்.

''பரபரப்பி னோடே பல பல செய்தாங்கு
இரவுபகல் பாழுக் கிறைப்ப — ஒருவாற்றான்
நல்லாற்றின் ஊக்கின் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றான் உய்வார் இவர்''

(நீதிநெறி விளக்கம் — 89)

என்று துறவோர் இயல்பு கூறும்பொழுது, 'நல்லாற்றின் ஊக்குதல்' துறவோர் இயல்பாக உணரப்படுதல் தெளிவு. இவ்வகையில் அடிகளும், நெறிதவறிப் பயனின்றிக் கழிக்கும் மக்களை நல்லாற்றின் ஊக்கியுள்ளமை — வழிகாட்டியுள்ளமை — அறியத்தகும். அடிகள் காட்டும் வழி அவர்தம் தகுதியையும், சிறப்பையும் புலப்படுத்துவதோடு, விரிந்த மன மாண்பையும் தெரிவிப்பதாக நோக்கத்தகும்.

ஆற்றுப்படுத்தும் அருங்குணம் :

பாடாண்திணைக்குரிய ஆற்றுப்படைத்துறை வழிப்படுத்தும் சிறப்புடையதாகும். அடிகள் பாணாற்றுப்படையாகப் பாடியுள்ள ஒரு பாடல் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத்தகும். வறுமைப் பாணனிடம், சிவனருளால் நலம் பெற்ற பாணன் ஒருவன், தான் பெற்ற பெருவளத்தைக் கூறி இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் முறையில் அடிகள் அமைத்துள்ள அப்பாடலில்,

''மழுவலன் உயர்த்த அழனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி இன்னிசை பாடலும்
அந்நிலைக் கண்ணே அகல்விசும்பு ஒரீஇச்
சுரபியும் தருவும் பெருவளம் சுரப்ப

இருமையும் பெற்றனன் யானே நீயும் அத்
திருநகர் வளமைபாடி இருநிலத்து
இருநிதிக் கிழவன் ஏக்கறுப்பத்
திருவொடும் பொலிக பெருமகிழ் சிறந்தே'' (காசிக்கலம்பகம்-58)

என்று குறுப்பிடுகின்றார் இருமையும் பெற்றுப் பொலிய இறைவன் பொன்னடி வணங்கி அவன் வீற்றிருக்கும் திருநகர் வளமை பாடுதல் வேண்டும் என்று யாவர்க்கும் வழிகாட்டியிருத்தல் உணரத்தகும். அடிகள் தம் ஞானாசிரியராகிய மாசிலாமணிதேசிகர் மீது பாமாலை தொடுத்தது சரியை என்றும், அதனை அவர் தரிக்கும்படி சாற்றியது கிரியை என்றும், அவர் ஏற்றுக்கொண்ட போது இன்னருள் புரிந்தது சிவயோகம் என்றும், அடிகளுக்கு அவர் வழங்கியது ஞானம் என்றும் கூறியிருப்பதும் அடியவர்களை அவ்வகையில் ஆற்றுப்படுத்தும் குறிப்புடையதாக எண்ணத்தகும்.

சிவனே குருவாய் வருதல் :

உடம்போடு கூடி விளங்கும் பக்குவப்பட்ட உயிர்களுக்கு இறைவன் மானிடவடிவில் குருவாய்த் தோன்றி அருள்வான் என்பது சைவ மரபு. அடிகள் தம் ஞானாசிரியரைச் சிவனாகவே கண்டு காட்டியுள்ளார். சிவன் மானிட உருவம் தாங்கிக் குருவாகத் தோன்றி வீடளிப்பதை,

''எம்மனோர் போல இனிதெழுந்தருளிக்
கைம்மா றற்ற கணக்கில் பேரின்ப
மோன வாழ்வளிக்கும் ஞானதேசிகன்''

(பண்டார மும்மணிக்கோவை–2)

என்று அடிகள் காட்டுகிறார். சிவனே குருவாய் வந்திருப்பதை அணிநலம்பட நிலைநாட்டுகிறார் அடிகள். சிவன் தலையில் கலைகளையுடைய மதியாகிய நிலவைத் தாங்கி விளங்குபவன். குருவாய் வரும்போது கலை மதியாகிய நிலவைத் தாங்காமல், கலை மதியாகிய சிறந்த சாத்திர அறிவைத்தாங்கி விளங்குகிறான். அஃதாவது இருநிலையிலும் ''தலைப்படு கலைமதி தாங்கும்'' இயல்பு அமைந்தே உள்ளது. உமையம்மையாகிய மானை இடப்பக்கத்தில் உடையவன் இறைவன் ; குருவாய் வரும் இப்பொழுது மானை இடப்பக்கம் (மானிடம்) கொள்ளாமல் மனிதப்பிறவியாகிய — மானிடனாகிய — வடிவுகொண்டு விளங்குகிறான். இருநிலையிலும் இறைவன் 'மானிடனாக' விளங்கும் ஒருமையை உணரவைக்கிறார் அடிகள். எலும்பாகிய அணிய்ப் (என்புஅணி—எற்பணி) பூண்பவன் இறைவன் ; இப்போது எற்பணி பூணாமல், அடிகளைப் பணிபூண்டு — தொண்டுகொண்டு (எற்பணி — என்னைப் பணிபூண்டு) விளங்கு கிறான். பூதகணங்களாகிய 'பாரிடம்' சூழ்தர விளங்கும் சிவன் இப்போது அவ்வாறு வாராமல் பூமியாகிய 'பாரிடம்' சூழ்தர வந்துள்ளான்.

''தலைப்படு கலைமதி தாங்காது ஆங்குஅத்
தலைப்படு கலைமதி தாங்கி, நிலைப்படு
மானிடனாய வடிவுகொண்டருளாது
மானிடனாய வடிவுகொண்டருளி
எற்பணி பூணாது எற்பணி பூண்டு
பாரிடம் சூழாது பாரிடம் சுழ்தர''

(பண்டார மும்மணிக்கோவை-14)

என்று கூறும் பகுதியில் குமரகுருபர அடிகள் சிவனுக்குரிய கோலங்களைக்கூறி, அவை யில்லாமல் வருவதாகக் கூறினாலும், குருவாக விளங்கும் நிலையில், அவை மற்றொரு வகையில் இருப்பதாகப் புலப்படுத்தும் திறத்தால் குருவாக வந்திருப்பவன் இறைவனே என்பதை நன்கு

வலியுறுத்தியுள்ளார் எனலாம். அடிகள் குருவருளால் தாம் பெற்ற பேற்றையும், இன்பத்தையும் விளக்கிக் காட்டியுள்ளார். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் குருவின் புகழை நினைத்தும், சொல்லியும், இறைஞ்சியும் இன்புற்றன ஆதலால் அவை அவகரணங்களாக இல்லாமல் சிவகரணங்களாகத் திரிந்தன என்கிறார். தமது குருவின் ஊரைக் குறுகியதால், ஒரு மாத்திரை அளவு தம் பேரில் குறுகியதாகக் (சீவன்—சிவன்) கூறுகிறார்.

தக்க ஞானாசிரியரைத் தேடியடைந்து பிறவிப்பயன் பெற முயலவேண்டும் என்பதை அடிகள் இவ்வகையில் ஐயந்திரிபறத் தெளிவுபடுத்தி வழிகாட்டியுள்ளார் என்பது உணரத்தகும்.

மாந்தர் கடமை :

பேரறிவுப் பொருளாகிய இறைவன் உண்மையை உணர்ந்து, அவனைத் தலைவனாகவும் தன்னை அடிமையாகவும் தெளிந்து, அவன் நற்றான் தொழுதலே கற்றதனாலாய பயன் என்று திருவள்ளுவர் உணர்த்துவார். இறைவனை வாழ்த்துதலும், நினைத்தலும், வணங்குதலும், தீநெறியில் செல்லாது அறநெறியில் நின்று ஒழுகுதலும் மக்கட்குக் கடமை என்று அறிவுறுத்தி வழிகாட்டுகிறார் அடிகள்.

''வாழ்த்துமின் தில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு — வீழ்த்த
புறநெறி யாற்றாது அறநெறி போற்றி
நெறிநின்று ஒழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கடன் இதுவே''

(சிதம்பரச் செய்யுட்கோவை—84)

இவ்வாறு செவியறிவுறுத்தும் சீர்மை அறிகின்றோம். செவியறிவுறூஉவினை விளக்கும் பேராசிரியர், ''முன்னிலைக்கே உரித்தாயினும் செவியறிவுறூஉவினை ஈற்றுக்கண் வைத்தான், பயம் பெறுவானையே நீ இன்ன குணத்தையாவாய் என்று புகழ்பட வாழ்த்திச் சொல்லப்படுதல் வேறுபாடுடைமையினென்பது'' என்று குறிப்பிடுகிறார். இக்கருத்துக்கேற்ப அடிகள் மக்கள் பயன்பெறுதல் கருதியே திரிகரணத்தாலும் இறைவனை வழிபட்டு நிற்றலைக் கடமையாகச் செவியறிவுறுத்துகிறார் என்பது தெளிவு.

''வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ் கேட்டவார் செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்''

(சிதம்பரச் செய்யுட்கோவை—10)

என்று, வாழ்த்தப்பெறுவற்குரிய செயல் இவையே என்று வழிகாட்டியுள்ளமை ஈண்டு உணரப்பட வேண்டுவதாகும்.

''.......................முழுநலம் கொடுக்கும்
செந்நெறி வினவுதிராயின் இன்னிசைப்
பாத்தொடுத்து அடுத்த பரஞ்சுடரை
நாத்தழும்பு இருக்க ஏத்துமின் நீரே''

(காசிக்கலம்பகம்—101)

என்று செந்நாப்புலவர்களை வழிப்படுத்துகிறார் அடிகள்.

தொண்டரைச் சார்ந்தொழுகுதல் :

இறையடிவர்களையும், அவர்தம் திருவேடங்களையும் இறைவன் என்றே தொழுது இறைஞ்சுதல் சைவமரபாகும்.

''மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்''

(பெரிய புராணம்)

என்று சேக்கிழார், அடியவர்தம் அளப்பரும் பெருமையைக் கூறுகிறார்.

இறையடியவர்களின் பெருமையும் சிறப்பும் அடிகளால் நன்கு உணர்த்தப்பெற்றுள்ளன. மக்கள் அவர்களைச் சார்ந்து ஒழுகுதற்குரியவர்கள் என்பதை அடிகள் காட்டியுள்ளனர். தொண்டரொடு பயில்வதால் அவர்கள் பன்னாள் நோக்கிய நிலையில் அவர்தம் பாவனை முற்றி அப்பாவனைப் பயனைத் தந்து நிற்கும் என்றும்,

''நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே''

(சிதம்பர மும்மணிக்கோவை-11)

என்றும் தெளிவுறுத்துகிறார்.

தன்னை இழத்தல் :

தான் என்ற செருக்கு உடையவர்களுக்கு முன் இறைவன் ஒளித்தோடுபவன்; தன்னை இழந்தவர்களுக்கு முன் யான் என்று சென்று அருள்பவன் என்கிறார்.

''தானென்றவர்முன் ஒளித்தோடித் தன்னை – இழந்தவர்முன்
யானென்று சென்றிடும் காசிப்பிரான்''

(காசிக்கலம்பகம் - 84)

இவ்வாறு, யான், எனது என்னும் செருக்கின்றித் தம்மை இழந்தவர்களிடம் இறைவன் வருவான் என்று உணர்த்துவதன் மூலம் அவ்வகையில் மக்கள் விளங்கவேண்டும் என்று வழி காட்டக் காண்கிறோம்.

அவா நீக்குதல் :

''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே''

(சிதம்பர மும்மணிக் கோவை - 26)

என்று தெளிவாக்கும் அடிகள், பல்லுயிர்த் தொகுதியும் பிறவிக்கடலுள் அழுந்துமாறு அல்லல் செய்யும் அவாவாகிய வறுமையைப் போக்க வேண்டுகிறார். அவாவே பிறப்புக்குக் காரணம் என்பதை உணர்ந்து பற்றற நிற்கும் இயல்பை வளர்ப்பதே இறைவனை அடையும் வழி என்பதை அடிகள் தெளிவுறுத்துகின்றனர் எனலாம். அடிகள், துறவியர் இயல்பைக் கூறும் முறையில், பித்தர்கள் சுவையறியாமல் உணவு உட்கொள்தல் போல் துறவியரும் உண்பர் என்கிறார். பற்றற்ற தன்மை இங்ஙனம் புலப்படுத்தப்படுகிறது எனலாம். அடிகள் தமது வேண்டுகோளாகக் கேட்கும் பாடல் ஒன்றிலும், தமக்கு ஒரேஒரு கிழிந்து தைத்த துணியும்,

படுக்கக்கடைப்புறத் திண்ணையும், கடும் பசிக்கு உப்பின்றி அட்ட புற்கை உணவும் அல்லது பிறிதொன்றும் வேண்டாதவராகக் காணப்படுகிறார். இவ்வகையில் அவாவினை நீக்கி விளங்க வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

உணவு வழங்குதல் :

உலக வாழ்வில் உடன் விளங்கும் மக்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு விளங்குதல் மேலான ஒழுக்கமாகும். பசிப்பிணி தீர்க்க உணவு வழங்கி அடியவர்களையும் எளியவர்களையும் உயிர் வாழச்செய்தல் சிறந்த அறமாகும். அன்னதானம் சமய ஒழுக்கப் பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். அடிகள் காசியில் அமைத்த மடத்தில் திருமலை மன்னன் பெயரால் அன்னதானச் சத்திரம் அமைத்து, அன்னதானம் புரிந்து வந்தமை அடிகளின் வரலாற்றில் அறியப்படுகிறது. இப்பணியை அடிகள் சமய ஒழுக்கமாக வற்புறுத்தியுள்ளனர் எனலாம். அரசனுக்குக் குறிப்பாக நீதி கூறும் அடிகள் பசிபோக்கும் பணியை ஒட்டணி முறையில் அரசனுக்குப் பொருந்துமாறு குறிப்பிடக் காண்கிறோம். யானை உண்ணும் கவளத்தில் ஒரு சிறிது வாயினின்று தவறி விழுமாயின் அதனால் யானைக்குத் துன்பம் ஏற்பட்டுவிடாது; ஆனால் அவ்வாறு விழுந்த கவளத்தை ஒருகோடி எறும்புகள் கிளையோடு உண்டு பசியிலிருந்து உய்யும் என்கிறார் அடிகள்.

''வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கது கொண்
டுரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோ டயின்று'' (நீதிநெறி விளக்கம்-37)

மன்னனுக்குச் சிறிது வருவாய் குறைந்தாலும் அதனால் அவனுக்குத் துன்பம் உண்டாகி விடாது; ஆனால் அப்பொருளால் பலர் பிழைப்பர் என்ற நீதி இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. மன்னவன் வரியைச் சிறிது குறைத்துக்கொண்டால் அது பலருக்கு நன்மை அளிக்கும் என்பது குறிப்பாகும். யானையின் ஒரு கவளம் ஒரு கோடி உயிர்கள் உய்வதற்கு உதவுவதை இங்குச் சுட்டும் அடிகள் அவ்வாறு பசிப்பிணி தீர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளமை அறியத்தகும்.

உறுதிகூறி உய்வழி காட்டல் :

அடிகள் ஆணையிட்டு உறுதிகூறி மக்கள் உய்வதற்கு உரிய வழியை உணர்த்துகின்றமையும் காண்கிறோம்.

''வம்மின் நமரங்காள் மன்றுடையான் வார்கழல் கண்டு
உய்ம்மின் உறுதி பிறிதில்லை—மெய்ம்மொழி மற்று
என்மொழி பிழையாதாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் தருமே''

(சிதம்பரச் செய்யுட்கோவை-83)

என்கிறார். நம்மவர்களே வம்மின் என்று உலகோர் மாட்டுக் கருணைகொண்டு விளித்து, இறைவன் வார்கழல் கண்டு உய்யுமாறும், இதைவிட உறுதி பிறிதில்லை இதுவே உண்மையான மொழி என்றும், இம்மொழி தவறாது என்றும், பின்னர்ப் பெரிய நன்மை உண்டாக்கும் என்றும் அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகிறார் அடிகள். இது வாயுறை வாழ்த்துக்குரியதாக அடிகளால் காட்டப்பட்டுள்ளது. வாயுறை வாழ்த்தினைப் பேராசிரியர் விளக்கும்போது, ''வாய்-வாய்

மொழி; உறை-மருந்து; வாயுறை என்பது சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம்; இனி, வாய்க்கண் தோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம்; மருந்து போறலின் மருந் தாயிற்று'' என்று குறிக்கின்றார். வழிநனி பயக்கும் என்று, வேம்பும் கடுவும் போன்ற வெஞ் சொற்களையும் தடையின்றி வழங்கி அறிவுறுத்துவது வாயுறை வாழ்த்து என்று தொல்காப்பியம் விளக்கும். எனவே பிற்பயன் பயத்தலைக் கருதி மருந்து போலக்கூறி அறிவுறுத்தும் வாயுறை வாழ்த்து முறையில் அடிகள் மக்கட்கு வழிகாட்டியிருத்தல் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். 'மெய்ம்மொழி மற்று என்மொழி பிழையாதாகும்' என்று நம்பிக்கையோடு கூறியிருத்தல் அடிகளின் இறையருள் பெற்ற தகுதி நிலையை உணர்த்துவதாக உள்ளது.

முடிவுரை :

''இடைக்காலத்தில் வாழ்ந்த அனுபூதியாளர் ஒருவர் கூறியதைப்போல, வெவ்வேறு விளக்குகளில் வெவ்வேறு வகையான எண்ணெய் ஊற்றப்பட்டிருந்தாலும், வெவ்வேறுவகைத் திரிகள் இடப்பட்டிருந்தாலும், விளக்குகள் எரியத்தொடங்கும்பொழுது நமக்கு ஒரே நெருப்புத் தான் கிடைக்கிறது. ஒளியும் ஒன்றாகத்தான் இருக்கிறது'' என்று டாக்டர் எஸ். இராதா கிருட்டினன் எடுத்துக்காட்டுகின்றார். சமயங்களின் பயன் ஒன்றே என்பது இவ்வாறு குறிப் பிடப்படக் காண்கிறோம். குமரகுருபர அடிகள் தாம் மேற்கொண்ட சைவசித்தாந்த மரபில் மக்களுக்கு வழிகாட்டியுள்ளார். வறிதே அறிவுரையாகக் கூறாமல் பாடல்கள் வாயிலாக மனதில் பதியுமாறு தொண்டாற்றியுள்ளமை என்றும் நிலைத்த பயன் தருவதாகத் திகழ்கின்றது. அடிகளின் பாடல்கள் இறையுணர்வு என்னும் உயிரோட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. கலைநலத்துக்காக மட்டும் கவிதை பாடியவரல்லர் அடிகள். கலை வாழ்க்கைக்காகவே என்று வலியுறுத்தும் முறையில் உயிர்கள் உய்தி பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வாகிய வீடுபேறடை யும் நெறியில் அவற்றைச் செலுத்துவதே அடிகளின் தலையாய குறிக்கோள் என்பது தெளிவு. வாழ்க்கைப் பயணத்தின் முடிந்த நிலையினைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றி வறிதே காலங்கழிக்குமாயின் மக்களினம் எவ்வாறு உய்யும்? இறைவன் வார்கழலைப் பற்றிக்கொள்வதே வழி என்பதை உணரச்செய்வதை அடிகள் தம் பணியாகக்கொண்டு தொண்டாற்றியுள்ளனர். மக்களினம் இறைவனை நினைந்தும், சொல்லியும் இறைஞ்சியும், உய்திபெறவேண்டும் என்பதே அடிகளின் அனுபவ மொழியாக அவர்தம் பாடல்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்பதை உணர்தல் இன்றியமையாததாகும்.

தெய்வத்தமிழ்நலம் தேக்கியே சித்தாந்த உண்மைகளை
மெய்ம்மைக் கவிஞராய் மேதினி உய்வகை காட்டியவர்
வெய்ய வினைப்பயன் மேவாது வீடுபே றெய்தியவர்
செய்ய குமர குருபரர் சீரடி போற்றுவமே.

அலைகடலுக்கு அப்பாலும்

நகரத்தார்களின் ஆலயத் திருப்பணிகள்

திரைகடலோடித் திரவியம் திரட்டிய நகரத்தார்கள் இந்து மதத்தை இலங்கையுள்ளிட்ட தென்கிழக்காசிய நாடுகளில் பரப்பப் பெரும்பணி ஆற்றியுள்ளார்கள். பர்மா, மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா போலும் நாடுகளிலெல்லாம் அவர்களுடைய திருப்பணிகளைக் காணலாம். — சோமலெ

சுந்தரர் காட்டும் சைவ நெறி

டாக்டர். ஆறு. அழகப்பன்
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சைவ சமயாச்சாரியர்கள் நால்வருள் இறைவனின் மறு உருவமாகச் சிறப்புப் பெற்றவர் சுந்தரர், கயிலையில் ஆலால சுந்தரராக இருந்து நிலவுலகில் ஆரூரராக அவதரித்துச் சைவத்தை வாழ்வித்த அருளாளர் இவர்.

சம்பந்தர் மகன்மை நெறியில் இறைவனைப் பாடினார் ; நாவரசர் தொண்டு நெறியில் பாடினார், சுந்தரர். தோழமை நெறியில் பாடித் துதித்தார். இவரது பாடல்கள் ஒரு தனியுரிமையோடு இறைவனை வேண்டுவனவாக அமையும்.

''கத்தூரி கமழ் சாந்து பணித்தருள வேண்டும்'' (1)

''பொறிவிரவு நற்புகர் கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய் சோறு முப்போதும் வேண்டும்'' (2)

என்று இவர் பாடும் பாடல்கள் நட்புரிமை பற்றியன எனலாம்.

சைவம் வாழ்வதற்காக உலகில் வந்து தோன்றிய தவச் செல்வராதலின் இவர் பாடல்களில் சைவத்தின் தனிச் சிறப்பையும், சைவ நெறிகளின் மாண்பையும் காணலாம்.

அம்மையப்பர் :

இவ்வுலகில் பல்வேறு சமயங்கள் நிலவுகின்றன. அவை பல்வேறு நிலைகளில் இறைவனை வழிபடுகின்றன. உருவநிலையிலும், உருவமற்ற அருவ நிலையிலும் எந்த வகையில் வழிபட்டாலும் ஒரே பரம் பொருளைத்தான் நாம் வழிபடுகின்றோம். ஒரே கடவுள் தான் எல்லா வடிவிலும் காட்சி தருகின்றார் என்பது இவர் தம் கோட்பாடு.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' (3)

என்பது திருமூலர் வாக்கு.

பல கடவுட் கோட்பாட்டிற்கும் இடம் கொடுத்து, ''ஒரே பரம் பொருள்தான் பல்வேறு நிலைகளில் உள்ளது'' என்னும் தெளிவான ஞானத்தை அடிப்படையாகக் கொண்டது சைவ சமயமாகும்.

''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே,
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே'' (4)

என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு. சைவத்தின் உயர்ந்த—பரந்த அருள்நெறி இது.

இக்கோட்பாடு சுந்தரருக்கும் பொருந்தும்.

''சோதியாய்த் தோன்றும்
உருவமே அருவாம்
ஒருவனே'' (5)

என இதனை விளக்குவர் மணிவாசகர்.

தொண்டர் குலத்தை ஒரே குலமாகவும், சிவபெருமானை ஒரே தேவனாகவும் போற்றுகின்றார் சுந்தரர்.

''நாற்றானத்து ஒருவனை'' (6)
''பல உருவும் தன் உருவே ஆய பெருமானை'' (7)

என்னும் அவரது கூற்றுகள் இதனைத் தெளிவுறுத்தும்.

அவ்வாறு ஒருவனாக நின்ற ஏக நாயகன் உலகத்து உயிர்கள் மீது கொண்ட கருணையால் அர்த்த, நாரீசுரராக—சிவசக்தியாக—அம்மையப்பராக நின்று அருள்புரிகின்றான் என ஒரே கடவுளின் இருவேறு நிலைகளைச் சைவம் சுட்டிக் காட்டுகிறது.

''அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்'' (8)

என்பது உய்ய வந்த தேவர் அருள்வாக்கு. இக்கோட்பாட்டினை,

''மின்னனை யாள்திருமேனி விளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்'' (9)

எனவும்,

''வண்டார் குழலி உமைநங்கை பங்கா'' (10)

எனவும் வரும் சுந்தரர் பாடல்களால் அறியலாம்.

இக்கூற்றுகள் 'இறைவனது அருளே சத்தியாகும்' என்ற சைவசமய நெறியை வலியுறுத்துகின்றன.

''அருளது சத்தியாகும் அரன் தனக்கு'' (11)

என்பது சிவஞான சித்தியார்.

திருநின்ற செம்மை

'சைவத்தின் மேல் சிறந்த சமயமும் இல்லை: அதன் தெய்வமான சிவத்தைக் காட்டிலும் சிறந்த தெய்வமும் இல்லை' என்பது சைவசமய நெறியாளரின் கொள்கை. இந்நெறியை வலியுறுத்த உலகில் தோன்றியவரன்றோ சுந்தரர்! இதனை.

''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரசன்றன் அடியார்க்கும் அடியேன்'' (12)

என்றவிடத்துத் தெளிவுபடுத்துகின்றார்.

இங்கு திருநின்ற 'செம்மை' என்பது யாது? அதுவே சிவம் பெருக்கும் சைவத்திரு நெறியாகும் என்பது சுந்தரர் உட்கோள். செம்மை என்பது செம்பொருளான சிவத்தைக் குறிக்கும். சிவபரம் பொருளின் பெருமையைப்பேசித் திருத்தொண்டின் வழிநிற்கும் செம்மையே 'திருநின்ற செம்மை' எனப்பட்டது என்க.

இடையறாத இறைவன் நினைப்பு :

இறைவனை எப்போதும் மறக்கக் கூடாது என்பது சைவசமய நெறி.

''நற்றவா உனை நான் மறப்பினும்
சொல்லுநா நமச்சிவாயவே!''

என்பர் நம்பியாரூரர். இவ்வுண்மை நெறியை உலகுக்கு உணர்த்துகின்றன இவர்தம் பாசுரங்கள்!

இறைவனை மறந்தாலும் நாக்கு நமச்சிவாய மந்திரத்தை இடையறாது சொல்லுமாம்.

நமசிவாயத் திருப்பதிகம் என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ள திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகச் செய்யுள் பத்தும் இறைவன் நாமத்தை மறக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றன.

''மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்;
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்.
கற்றவர் தொழு தேத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான் மறப்பினும்
சொல்லும் நா நமச்சிவாயவே!'' (13)

திருவைந்தெழுத்தை மறவாமல் ஓதுதலே சைவ நெறியின் உயிர் நாடியான கொள்கை என்பதை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது.

தொண்டு நெறி :

தோழமை நெறியில் நின்றவராயினும் தொண்டு நெறியின் சிறப்பை மிகுத்துரைக்கின்றார் சுந்தரர். சிவனுக்கு அடிமை செய்தலைக் காட்டிலும் சிவனடியார்க்கு அடித்தொண்டு செய்வதே சிறந்த பேறு ஆகும் என்பதை அவர் வற்புறுத்தினார்.

''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' (14)

என்த் தொடங்கி அத்துணைத் திருத்தொண்டர்களுக்கும் அடியேன், அடியேன் என்று கூறிச் செல்லும் திருத்தொண்டத் தொகைப் பாடல்கள் இவரது கொள்கையைப் புலப்படுத்துவனவாகும்.

பயன் கருதாமல் தொண்டு புரிவதே உண்மையான சைவ நெறி என இவர் கூறுகிறார்.

'பரவ மாட்டேன் மறுமையை நினைய' எனப் பாடுகின்றார்.

''இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன் நான்''

என மற்றோரிடத்தில் கூறுகின்றார்.

பிறவிபற்றிய கருத்து :

பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டேல் இறைவனை மறவாமை வேண்டும் என்று வேண்டுவார் காரைக்கால் அம்மையார். இறைவனது குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போன்ற மேனியில் பூசப்பட்ட பால் வெண்ணீறும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதேயாகும் என்பர் நாவரசர்.

சுந்தரரோ மறுமையை 'நினைய மாட்டேன்' என்கிறார். பிறவிகளை வாராமல் அழித்தொழிக்க வல்லது சிவ வழிபாடேயாகும் என்கிறார்.

'இவ்வாழ்க்கை நிலையில்லாத தன்மையை உடையது. எனவே மானுட வாழ்க்கையை ஒரு பொருளாக நினைத்துச் செருக்கடையேன். ஆகவே இறைவனை வணங்கி மறுமை வேண்டாம் என வேண்டுவன்' எனக் கூறுகிறார். காஞ்சித் திணைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு கடவுள் வழிபாட்டை விளக்கிக் கூறுகின்றார்.

''பிற பாடல்களை மறந்தாலும் இறைவனைப் பற்றிய பாடல்களை மறவாது பாடினால் நமது பாவங்கள் ஓடி விடும்; வழிபாடு செய்யும் போது இன்னிசையோடு தேவாரங்களைப் பாட வேண்டும்' என்பது இவர் காட்டும் வழிபாட்டு நெறி ஆகும்.

அடிக் குறிப்புகள்

1. சுந்தரர் தேவாரம் — காரோணப் பதிகம், 7-46-1,
2. மேலது 7-46-10,
3. திருமந்திரம் — 2104
4. திருநாவுக்கரசர் தேவாரம் 6-38-1.
5. திருவாசகம் — 394
6. சுந். தேவாரம் 7-38-4
7. மேலது 7-40-9
8. திருக்களிற்றுப் படியார் உபதேச இயல்—1
9. சுந். தேவாரம் 7-11-6
10. மேலது 7-52-7
11. சிவஞான சித்தியார் — ஐந்தாம் சூத்திரம்-செய் — 9.
12. திருத்தொண்டத் தொகை – செய் — 4,
13. சுந். தேவாரம் 7 - 48 - 1.
14. திருத்தொண்டத் தொகை - பாடல் — 1
15. சுந். தேவாரம் 7-77-1.

நாட்டுக் கோட்டையார்

நகரத்தார்



சோழ மன்னனுக்கு நகரத்தில் கோட்டையும் இவர்களுக்கு அவ்வரசன் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் கோட்டையுமாக இருந்ததால் **நாட்டுக்கோட்டையார்** என்றும்

புகார் நகரத்தில் நீண்ட நெடுங்காலம் தனவணிகர் நிலைபெற் றிருந்ததால், பாண்டியநாட்டிற்கு வந்தபின் அதன் அறிகுறியாக **நகரத்தார்** என்றும் பெயர்பெற்றனர்.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

நிழல் கண்டால் நில்லா வினை

டாக்டர். பழ. முத்தப்பன்
முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி-622 403.

சைவசமயத் தத்துவக் கருத்துக்கள் சைவத் திருமுறைகளின் அடிப்படையில் பதினான்கு சாத்திரங்களாக வரையறுக்கப் பெற்றன. சைவத் திருமுறைப் பாடல்களில் மிகவும் தொன்மையானவை - ஆதியானவை காரைக் காலம்மையாரின் அருட்பாடல்கள். பேயாராம் அம்மையார் பாடிய மூத்த திருப்பதிகங்கள்- திருஇரட்டைமணிமாலை,அற்புதத்திருவந்தாதி ஆகிய திருமுறைப் பதிகங்களின் பாடல் தொகை 144. இப்பாடல்கள் பிற்காலப் பதிக முறைக்கும், சிற்றிலக்கியவகைக்கும், தத்துவ விளக்கங்களுக்கும் அடிப்படையாக விளங்கின.

அம்மையின் பாடல்களில் காணப்பெறும் சைவசமயத்தத்துவக்கருத்துக்கள் எளிமையாகத் தெளிவாகக் காணப்பெறுகின்றன. அக்கருத் துகள் வரிசைப்படுத்தியோ அல்லது தொகுப் பாகவோ காணப் பெறவில்லை என்றாலும் அடிப்படையில் மாற்றம் இல்லாமலும், முரண் பாடுகள் இல்லாமலும் காணப்பெறுகின்றன. இத்தகு நிலையில் அம்மையின் பாடல் ஒன்றில் அமைந்த தத்துவ கருத்தமைப்பைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திரு இரட்டை மணிமாலை என்பது அம்மை திருக்கயிலை நோக்கிச் செல்லும் பொழுது பாடிய திருப்பதிகம் ஆகும்.

''ஆய்ந்த சீர் இரட்டை மாலை அந்தாதி
எடுத்துப்பாடி
....
காய்ந்தவர் இருந்த வெள்ளிக் கைலைமால்
வரையை நண்ண''

என்பார் சேக்கிழார். (53) கட்டளைக் கலித் துறைப் பாடல் முன்னும் வெண்பா பின்னுமாக அமைய அந்தாதியாகப் பாடப் பெற்றுள்ளது திரு இரட்டை மணிமாலைப் பதிகம். மொத்தம் 20 பாடல்களைப் பெற்றுள்ளது. இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்புக்கு மூல இலக்கியமாக விளங்குவது இவ்விரட்டை மணிமாலையாகும். பாடல் வகையில் மட்டும் அமையாது, சிற்றிலக்கிய நூல் அமைப்பில்- இரட்டை மணிமாலை அமைப்பில் இந்நூலே முதன்மையானதாகும்.

பாடல் தோறும் மூலப் பரம்பொருளாம் இறைவனின் சிறப்பு இலக்கணமும், பொது இலக்கணமும் இடம் பெற்றுள்ளன. இறை வனின் அருட் திறத்தால் ஆன்மாக்கள் பெறும் மலபரிபாகமும் - ஆங்காங்கே சுட்டப் பெறு கின்றன. பின்னால் எழுந்த சாத்திரங்கள் வகுத்துத் தந்துள்ள பன்னிரண்டு சாத்திர விளக்கங்கள் சிற்சில பாடல்களில் குறிப்பாகக் காட்டப்பெற்றுள்ளன.

மெய்கண்டார் காட்டும் அணைந்தோர் தன்மையாம் சீவன் முத்தர் இயல்பு தனி ஒரு பாடலில் மிகவும் சிறப்பாக இடம் பெற் றுள்ளது. இறைவனின் திருக்கழல் சேர இயலா வண்ணம் உயிர்களைத் தடுத்துக் கொண்டிருக் கிற மும்மல அழுக்கை ஞான நீரால் கழுவி வாழுகின்ற சீவன் முத்தர்கள் - சிவனடியார் களையும், சிவாலயத்தையும் முதல்வனாகக் கண்டு வழிபட்டு வாழ்வர் என்பது சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் தரும் பொரு ளாகும் இவ்வாறு வாழ்வதால் என்ன பயன் கிட்டும்? என்பதை அம்மையின் திரு இரட்டை மணிமாலை 11ஆம் பாடல் கூறுகிறது.

''கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
ஏதுமின்றித்
(வினைநிகர்)

தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கைம் மாமலர்த்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே''

என்பது அப்பாடல். முதல் இருவரிகள் சிவனடியாரைத் தொழுவதையும், பின்னிருவரிகள் சிவவடிவத்தைத் தொழுவதையும் காட்டுகின்றன.

அடியார்களைத் தொழுவது பற்றிக் குறிப்பிடுவதில் அம்மையார் பிற தெய்வத் தமிழ்க் கவிஞர்களிலிருந்து வேறுபட்டுக் காணப்பெறுகிறார். பிறர், அடியார்களின் திருக்கோலத்தையோ (சித்தியார். 322), அல்லது அடியார்களின் திருவடியையோ (போதம் 12சூ) தொழ வேண்டும் என்று கூறியிருக்க அம்மையோ சிவனடியார்களைப் பேணியவர்களது நிழலைக் காணுதலே சிவப்பேறு தரும் என்று குறிப்பிடுகிறார். இறைவனின் சேவடியைப் பேணுகின்ற அடியார்களின் நிழலைக் கண்டவர்க்கு நில்லாவினை என்பது அவர் தம் வலுவான கருத்து. மேலும் இறைவனின் திருமேனியைத் தொழும்போது மாமலர் தூவித் தொழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துவது அவர் சிறப்பாகும்.

இவ்வாறு அடியவர் நிழலும் — அரனின் திருவருளும் போற்றிப் பரவுவார்க்கு யாது பயன் கிட்டும் என்பதைத் தனி ஒரு சிறப்பாக இப்பாடலில் குறிப்பிடுகிறார். அம்மையாரின் அக்குறிப்பில் தத்துவக் கருத்து முழுமையாக இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

வினைக்கோட்பாட்டில் சைவசமயம் ஆழ்ந்த நம்பிக்கை உடையதாகும். வினைகளை மூவகை நிலைகளாகச் சைவசமயம் குறிப்பிடும். நல்வினை, தீவினைகளாகச் செய்யப் பெறும் வினைகள் தூல வினைகளாக நிற்கும்போது ஆகாமியம் என்றும், சூட்சுமமாக மறைந்து நிற்கும்போது புண்ணிய பாவம் எனப்பட்டுச் சஞ்சிதம் என்றும், சூட்சும வினை பயன் தரும் போது பிராரத்தம் என்றும் குறிக்கப் பெறும். இம்மூன்று வினை நிலைகளில் சஞ்சித வினை, பிராரத்த வினை என்ற இரண்டை அம்மை இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவ லிங்க வடிவத்தை மாமலர் தூவித் தொழுதால் தொழுவாரிடம் தொல்வினை நிற்காது என்பதை, ''மாமலர்த் தூய்த்தொழ நிற்குமோ தொல்வினை'' என்று பாடலில் குறிப்பிடுகிறார். தொல்வினை என்பது சஞ்சித வினையைக் குறிக்கும். அருணை வடிவேல் முதலியார் அவர்கள், சித்தாந்த வினாவிடை என்ற தம் நூலில் சஞ்சிதம் அபூர்வம், பழவினை, தொல்வினை, கிடைவினை எனச் சொல்லப்படும் என்பார்கள். (ப. 254.) எனவே வாழ்த்த வாயும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைப் புதுமலர்த் தூவித்தொழுகின்றவர் கட்கு முன் பிறப்புகளில் அனுபவித்ததுபோக — இப்பிறப்பில் அனுபவிக்க வேண்டிய எஞ்சிய வினைகள் இல்லையாகிச் சிவனருள் கிட்டும் என்பது பெறப்படுகிறது.

அதுபோலச் சிவனடியார்தம் நிழலைக் கண்டு தொழுவார்க்கு வினைநில்லா என்று பாடலின் முற்பகுதியில் அம்மை குறிப்பிடுகின்றார். இங்கு குறிப்பிடுவது அடைமொழியில்லா வினையான பிராரத்த வினையேயாகும்.

''பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி
னாலுணரு
மெய்த்தவரை மேவா வினை''

எனச் சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திர 2-ஆம் அதிகரண உதாரண வெண்பா குறிப்பிடும். சிவஞான முனிவர் — மேவா வினை என்பது பிராரத்த வினையைக் குறிக்கும் எனத் தம் சிற்றுரையில் குறிப்பிடுகிறார். பாடலில் இறைவன் சேவடி காணலுற்றார் தமைப் பேணலுற்றார் நிழல் என்று குறிப்பிடுவது இன்றைய நம் வாழ்வின் நோக்கில் காணும் போது நிழற்படத்தைக் குறிப்பதாகவும்

கொள்ளலாம். அதாவது நாயன்மார்கள் சிவனடியார்களைப் பேணிய தகைமை சான்றவர்கள். காலத்தால் முன்னவர்களாகிய அவர்களை நாம் நேரில் காணமுடியாது. என்றாலும் அவர்களின் நிழலாகிய நிழற்படங்களை, படிமங்களைப் போற்றி இன்று வணங்குகிறோம். எனவே நாயன்மார்களின் நிழலாம் வடிவங்களையும் — சிவலிங்க உருவத்தையும் இன்றும் நாம் அரனாகவே கருதி வழிபட்டால் சஞ்சிதமும், பிராரத்தமும் இல்லை என்பது அம்மையின் திருப்பாடலால் விளங்குகிறது எனலாம்,

மேலும், இறைவனின் பெருமைகளாக இப்பாடலில் இடம் பெற்றிருப்பனவாகிய கழல் என்னும் அணி அணிந்த திருவடி, எரிதழல் ஏந்திய திருக்கரம், செம்மை நிறம் கொண்ட திருமேனி, என்பவை இறைவனின் பொது இலக்கணங்களையும், நிகர் ஏதுமின்றி என்பது தனக்குவமை இல்லாத திறத்தை வலியுறுத்திச் சிறப்பு இலக்கணத்தையும் குறிப்பிடுகின்றன எனலாம்.

அதுபோல உயிர்களின் மலபரிபாகம் நீங்க வேண்டுமானால் அடியார்களைப் பேணுதலும், இறைவனை மாமலர்த் தூவி வழிபடுதலும் ஆகிய வாழ்க்கை முறைகளைக் கொள்ள வேண்டும் என்றும் பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு பாடலில் சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்தாகிய பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் தத்துவங்கள் எளிதாக அமைந்து அம்மையின் அருளமுது உயிர் அனுபவம் தருகிறது.

இலக்கணநெறியில் நகரத்தார்

'பொருள் வயிற்பிரிவு' — செல்வம் சேர்ப்பதற்காக என்று ஆண்டுக்கணக்கில் பிரிவதாகும். இம்முறை 'கொண்டு விற்கப் போவது' என அண்மைக் காலம் வரை நகரத்தார் மரபிலேதான் அழுத்தமாக இருந்தது.

'கொண்டுவிற்றல்' என்ற சொல்வழக்கு. நகரத்தார் தொடக்கத்தில் வணிகத்தின் பொருட்டே உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பிரிந்தனர் என்பதை உணர்த்தும்.



சொந்தமாகப் பாய்மரக் கப்பல் வைத்து, அரிசி, உப்புப் போன்றவற்றை இலங்கைக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் கொண்டு விற்றதை லெ. அழகுசுந்தரம்செட்டியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் முன்னோர் இலங்கைக்கு அங்ஙனம் கொண்டு விற்றனராம்.

பிரிவை மூன்றாண்டுப் பிரிவு ஓராண்டுப் பிரிவு எனப் பொருளிலக்கணம் விளக்கும். நகரத்தாரும் கடல் கடந்த பிரிவை மூன்றாண்டுக்கு ஒருமுறை என வழக்கப்படுத்திக் கொண்டனர். அதனை ஒரு 'கணக்கு' என்பர், "நான் மாந்தனைக்கு மூன்று கணக்குக் கொண்டு விற்கப் போனேன்" என்று என் தந்தையார் அடிக்கடி பெருமை பேசுவார், பர்மா பறிபோன பிறகு !

வெளிநாட்டிற்கு அங்ஙனம் பிரிபவர், ஒரு நல்ல நாள் பார்த்து வீட்டை விட்டு வெளியேறி வேறு ஒருவீட்டிலோ பொது இடத்திலோ தங்குவர். பிறகு போக்குவரத்துக்கு ஏற்ற நாளில் புறப்படுவர். மன்னர்கள் முன்பு போருக்குப் புறப்படும்பொழுது நல்ல நாள் பார்த்து' குடையையும் வாளையும் 'புறவீடு' விடுவர். அது குடை நாட்கோள் வாள்நாட்கோள் என்று கூறப்படும். மன்னர் பின்னோராகிய வணிகரும் நல்லநாள் பார்த்து, வணிகத்திற்குப் 'புறவீடு' செய்து, நாட்கோள் கடைப் பிடித்தமை இதனால் அறியப்படும். இவ்வாறே எண்ணிப் பார்த்தால், நகரத்தார் மரபின் பெருமை இனிக்கும். (அதற்குச் சற்றே இன்றைய நிலையை மறந்து விடுக)

மனக்கவலை தீர்க்கும் மருந்து

கணக்காயர், முனைவர் தமிழண்ணல்
முன்னாள் தமிழியல்துறைத் தலைவர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,

இறைவழிபாடு என்பது என்ன?

இறைவன் உலகிடை நிறைந்தவன். அவன் பேராற்றல் வடிவினன்; ஐம்பெரும் பூத மாய் அமைந்தவன், முற்றறிவினன், பேரின்பமயமானவன், குறைவிலா நிறைவினன், குற்றமில்லா நற்றவ வாழ்வினன்.

குறைபல உடைய நாம் நிற்றபல உடைய இறையை வழிபடுவது, பகுத்தறிவுப்படிக் காரண காரியப் பொருத்தமுடையதாகும். வாழ்க்கை முன்னேற்றம் அதனால் வாய்க்கும் என்பதுறுதி.

இனி 'வழிபாடு' என்பதும் இறையை நாமே நமக்குள் சிந்தித்துப் போற்றுவதாகும். இறைவன் நமக்குச் செய்துள்ள நன்மைகளுக்காக, நன்றியுணர்ந்து பாடிப் பரவுவதாகும். கோயிலில் ஐயர்மூலம் செய்யும் அருச்சனைகள் சடங்குகளாகும். சடங்குகள் உலகறிய வேண்டு மெனச் செய்வன. அவை ஓரளவே ஏற்கத்தக்கன. அவரவர் தாம்தாம் நினைந்துருகி வழிபடுதலே முதன்மையானதாகும்.

இறைவழிபாட்டின் பயன் யாது ?

இறைவழிபாடு பிறப்பறுக்கும் ; வீடுபேறுதரும். அவா அறுத்து, வினைப்பயனை நீக்கி மறுமையின்பம் தரும். பேரின்பம் நல்கும். இவை யாவும் கண்காணாதன ; உலகவாழ்வு நீத்த பின் நிகழ்வன ; இப்பிறப்பைவிட்டு மறுபிறப்பில் அடைய வேண்டியன.

இறை வழிபாட்டால் கண்காணும் பயன் ஏதுமில்லையா? இம்மையில் இன்றே அடையும் நன்மைகள் ஏதுமில்லையா? இறைவழிபாடு நடைமுறையில் அன்றாடம் பயன்தராதா?

திருவள்ளுவர் உட்பட்ட பல சான்றோர்கள், இறைவழிபாட்டால் கண்கண்ட இம்மைப் பயன்களையே கூடுதலாக வற்புறுத்தியுள்ளனர். இம்மையில் இன்பம்தரும் அது மறுமையிலும் நன்மைதரும் என்பது ஒருநம்பிக்கை. திருவள்ளுவர் இருமையிலும் இன்பம் உண்டாகுமென் பதை அடிக்கடி வற்புறுத்துவார். எப்படிப்பட்ட நிலையிலும் இம்மையை விடாத மறுமையையே அவர் போற்றுகிறார்.

இறைவழிபாட்டின் பயனை நாடுபவர்களை நான்குவகையாகப் பிரிக்கலாம் :

1) இம்மையை வெறுத்து, மறுத்து மறுமையையே நாடுபவர்கள்.
2) இம்மையை வெறுக்காமல் மறுமையில் ஆர்வம் காட்டுபவர்கள்.
3) இம்மைப் பயனையே வற்புறுத்துபவர்கள்.
4) இம்மையைப் போற்றி, மறுமையிலும் நன்மையுண்டாகுமென நம்புபவர்கள்.

முதல் பிரிவினர் வாழ்க்கையை அடிதென்ற அனுபவித்து, அதனால் வெறுப்புற்றுவிட்ட வர்கள். இரண்டாம் பிரிவினர் நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற பக்தர்கள். மூன்றாவது பிரிவினர் பகுத்தறிவு வழி இறைவழிபாட்டை அணுகுபவர்கள். திருவள்ளுவர், திருமூலர் போன்றவர்களை நான்காம் பிரிவில் சேர்க்கவேண்டும்.

மனக்கவலை தீர்க்கும் மருந்து

இறைவழிபாட்டால் பெரும் சிறப்புக்களில் செல்வம், நல்வாழ்வு, உடல்நலம் எனப் பல சொல்லலாம். அவற்றுள் மனக்கவலை போக்கும் மருந்தென்பதே அடிப்படையாகும். பிறபல பின்னடைவுகட்கு எல்லாம் மனக்கவலையே காரணமாகும். இறைவழிபாடு மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது, மன அழுக்கைக் கழுவுகிறது. மனத்துள் சேரும் குப்பைகளை ஆற்று கிறது. நாள்தோறும் வீட்டைச் சுத்தப்படுத்துகிறோம். ஏன்? நாளும் குப்பை குவிந்தவண்ண மிருக்கிறது, நான்கு நாள் வெளியூர் போய் வந்தால், வீடு எப்படிக் கிடக்கிறது? நாள்தோறும் சோப்புப்போட்டுக் குளிக்கிறோம். ஏன்? நாளும்—மணிக்குமணி, கணத்துக்குக்கணம் உடம்பில் அழுக்கேறுகிறது. அதனால் ஒருநாளைக்கு இருமுறை குளிப்பவர்கூட உண்டு. அவைபோல் நாளும் நம்மனத்தில் குப்பை சேர்கிறது. அழுக்குப் படிகிறது. திருவள்ளுவர் பொறாமையை 'அழுக்கு' என்றே குறிப்பிட்டார். 'அழுக்காறாமை' அவர்தந்த கலைச்சொல். 'துணிவெளுக்கு மண்ணுண்டு, மனம் வெளுக்க என்ன செய்வோம்?' என்று பாரதியார் பாடினார். மன அழுக் கைக் கழுவுவதால் மனக்கவலை தீர்கிறது. மனக்கவலை தீர்வதால், வாழ்வில் ஊக்கம் பிறந்து, நினைத்த எல்லாம் முடிகிறது. எடுத்த காரியத்தில் வெற்றிபெற, செல்வம் சேர, பதவிகளை அடைய என யாவற்றுக்கும் இறைவழிபாடு இவ்வழியாக உதவுகிறது.

இறைவழிபாடு என்பது இங்ஙனம் செய்யும் ஒரு மனப்பயிற்சி, உடற்பயிற்சி செய்வது உடல்வலிமைபெற, நலமடைய, நல்வாழ்வுபெற ! மனம் பயிற்சியும் மனவலிமைதரும், மனநலம் தரும், மனம்போல் வாழ்வுதரும் !

எனவே நம் முன்னோரில் பலர் இம்மைப் பயனையே முன்வைத்து, முதன்மைப்படுத்திப் பேசினர். இவ்வுண்மையை நாம் உணர வேண்டும்

திருமுருகாற்றுப்படை வெண்பா, முருகாற்றுப்படையை நாளும் ஓதினால், ''முற்கோல மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித் தான் நினைத்த எல்லாம் தரும்'' என்று கூறுகிறது.

திருமுருகாற்றுப்படையில். ஆற்றுப்படுத்துபவன் கூறும் நன்மைகள் யாவை?

''புலம்பிரிந்து உறையும் செல்வு நீ நயத்தனையாயின், இன்னே பெறுதி நீ முன்னி'' வினையே என்பதால், நினைத்ததை உடனே அடையும் வலிமை வாய்க்கும் எனக் கூறப்படுகிறது.

> ''இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
> ஒருநி ஆகத் தோன்றப் பெறலரும் பரிசில் நல்குமதி''

என்பதால், கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில், தன்னிகரின்றி வாழும் பெருஞ்செல்வம் பெரு வாழ்வு வாய்க்கும் என்பதே குறிக்கப்படுகிறது. பெறலரும் பரிசில் நல்கும், என்பதற்கு வீடுபேறு என்று மட்டுமே பொருள் கொள்ளுதல் இயலாது. இருள்நிறக் கடல் நீரால் சூழப்பட்ட என்பதும், ஒரு நீ ஆகத் தோன்ற என்பதும் இவ்வுலகில் நிகரின்றி விளங்கித் தோன்றுவதையே குறிக்கின்றன, 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்பதை இங்கு ஒப்பு நோக்குக.

குறள் கூறும் உண்மை

திருக்குறளில் துன்பம் தீர்தலும் மனக்கவலை ஒழிதலுமே முக்கியமாக, இறைவாழ்த்தில் கூறப்படுகின்றன.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல
தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்ற குறள்கள் மீண்டும் மீண்டும் சிந்திக்கற்பாலன. பிறவிக் கடல் கடப்பதெனத் தத்துவப் பொருள்களே சொல்பவர்கள், இப்பிறவியிலேற்படும் அன்றாடக் கவலைகளைத் தீர்ப்பதை மிகச் சாதாரணமானவை எனக் கூறுவது பொருந்தாது. இச்சிறு குளத்தைக் கடக்காதவன் பெரிய கடலைக் கடப்பது எவ்வாறு? அடிப்படைப்பயன் அன்றாட வாழ்விலிருந்துதான் தொடங்குகிற தென்பதை இவர்கள் புறக்கணித்ததால், இவர்களுடைய தத்துவங்களும் உலகிடை ஒட்டாது ஒழிந்தன.

திருஞான சம்பந்தர் வாக்கு

திருஞான சம்பந்தர் வாக்காலும் இதன் நுட்பத்தை உணர்ந்து தெளிவுபடலாம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்அஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

நல்ல வண்ணம் மண்ணில் வாழலாம் என வற்புறுத்திவிட்டு, அங்ஙனம் வாழ்பவர்க்கு, எண்ணில் — சிந்தித்தால், நல்ல கதிக்கு — நல்ல மறுமை இன்பத்திற்கு, யாதும் குறைவில்லை. என்பது பாட்டிடை ஓடும் பொருள். நல்ல கதியை அடுத்ததாக வைத்தது, மண்ணுலக வாழ்வின் முதன்மையும் பெருமையும் கருதியே என்பதை, இறுதி இரண்டடிகளும் கூட மெய்ப்பிக்கின்றன.

இம் மனப்போக்குத்தான் திருவள்ளுவர் உள்ளிட்ட நம் தமிழ்ச் சான்றோர் தம் கருத்தாகும். இதை உணர்ந்து, இறைவழிபாட்டில் ஈடுபட்டு, மனக்கவலை தீர்ந்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

நகரத்தார் பற்றி

அமெரிக்கப் பேரறிஞரின் கருத்து

பொதுவாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாகச் சோழநாட்டிலும் இன்று நாம் காணும் சிறந்த கோயில்களை வாழவைப்பவர்கள் நகரத்தார்களே. வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாயும் பகுதிகளில் வளமான நிலங்களை வாங்கி, இக்கோயில்களுக்குச் செல்வம் சேர்த்தவர்கள் நகரத்தார்களே. கோயில் நிலங்களை மேற் பார்ப்பதிலும் கோயில் நிதிகளைப் பன்மடங்காகப் பெருக்குவதிலும் நகரத்தார்களுக்கு இருக்கும் திறமை ஈடுஇணையில்லாதது. ஊதுவத்தி யானது தன்னைப் பொசுக்கிக்கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பது போல் நகரத்தார்கள் பலர் எத்தனையோ இடையூறுகளைத் தாங்கியும் இன்னல்களைச் சமாளித்தும் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை உள்ளபடி சொன்னாலும் கற்பனை போலவே தோன்றும்.

— டாக்டர். பிலிப் சீகெல்மென்
நகரத்தார் ஆராய்ச்சியாளர்.

என்ன ஜெயம் கொண்டார் ?

சிவகங்கை அருட்கவிஞர்
பேராசிரியர் கு. செ. இராமசாமி எம். ஏ.,
தமிழ்த்துறைத்தலைவர் ம. இரா. அரசினர் கலைக்கல்லூரி, மன்னார்குடி.

காளமேகப் புலவரை, ''வசை பாடக்காள மேகம்'' என்று கவிதையுலகு பாராட்டும். இவர் 15-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். காளமேகத்தின் பிரதிபிம்பமாக, 18–ஆம் நூற்ருண்டில், இன்னெரு கவிவாணர் தோன்றினர். அவர்தான் பாடுவார் முத்தப்பசெட்டியார். காளமேகப் புலவரைப் போலவே, இப்புலவர் பெருமானும், வசைபாடி வசைபாடி இசைதேடிக் கொண்டார்.

காரைக்குடிக்கு அருகே உள்ள கீழைச் சிவல்பட்டியில், தனவணிகர்களான நாட்டுக் கோட்டை நகரத்தார் குலத்தில், அழகப்ப செட்டியார்—இலட்சுமி ஆச்சி தம்பதிகளின் தவ மகனுய்ப் பிறந்தார் இந்தக் கவிமகன். ஆக்கவும் அழிக்கவும் வல்ல வாக்குவன்மையால், முத்தப்பர் பெரும்புகழ் தேக்கினர்.

அவ்வப்போது தோன்றும் கோபதாபங்களையே பெரும்பாலும் ஆசுகவிகளாய்ப் பொழிந்து வந்த முத்தப்பர், தமது 58-ஆவது வயதில், செம்மையான கட்டுக்கோப்போடு ஒரு சிற்றிலக்கியம் பாடினர். அதுதான் ஜெயங்கொண்டார் சதகம்.

நகரக் கோவில்களுள், ஒன்ருன நேமம் கோவில் ஜெயங்கொண்ட சோழீசர் மீது பாடப் பெற்ற இச்சதகம், கதையும் பழமொழியுமாய்க் கலந்து பாடப் பெற்றது. இது அரங்கேற்ற மான போது முத்தப்பரின் ஆசுகவித் திறமையை வெளிப்படுத்தும் அரிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

மகரத் தலை நாளான தைப்பொங்கல் திருநாளில், நேமம் கோவிலில் நடைபெற்ற அரங்கேற்ற விழாவுக்கு மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர், செவ்வூர் அழகுப் புலவர், வெண்பாப் புலிக் கவிராயர், சுந்தர முதலியார், வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவர், ஊனையூர்ப் பாரதியார் முதலிய புலவர் பெருமக்கள் வந்திருந்தனர்.

''காடுவெட்டிப் போட்டு, கடிய நிலம்திருத்தி,
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் வீடுகட்கு,
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே.
என்றைக்கும் நீங்கா திரு''

என்ற புகழ் பெற்ற வெண்பாவைத் தொடர்ந்து மேலும் இரண்டு திருமகள் துதிகளை அரங் கேற்றினர். உறவின் முறையார் வேண்டுகோளுக்கு இணங்க, ஜெயங் கொண்ட சோழீயர் மீது, ஒரு பஞ்சவர்க்க பூஷணமும் பாடி அரங்கேற்றினர். இவை முடிந்தபின் சதகத்தின் காப்புச் செய்யுட்களையும், அவையடக்கச் செய்யுளையும் அரங்கேற்றினர்.

இந்நிலையில் ஊனையூர்ப் பாரதியார் எழுந்து நின்று, சபையோரையும் முத்தப்பரையும் சம்மதம் கேட்டுக் கொண்டு, வெண்பா யாப்பில் ஒரு வினஎழுப்பினார்.

''ஓங்குபஸ்மா சூரனைக்கண்டு ஓடிஒளிந் தார் விஜயன்
வாங்குதனு வால்பூசை வாங்கினர்—ஈங்கிருக்கும்
நன்நேமச் சோழீச னர்ஜெயங்கொண் டார்என்றல்
என்ன ஜெயம் கொண்டார் இவர்?''

''யார் தலையில்தான் கை வைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாக வேண்டும் என்று வரம் பெற்றவன் பஸ்மாசுரன். அந்தப் பஸ்மா சுரனைக் கண்டு இவர் அஞ்சி ஓடினர். ஒளிந்தார். அர்ச்சுனனிடம் வில்லால் அடிபட்டார். இப்படி அடிக்கடி தோல்விகளையே கண்டு வந்த இவரைப் போய் 'ஜெயங்கொண்டார், ஜெயங்கொண்டார், என்றல் என்ன ஜெயங்கொண்டார்? யாரை ஜெயங் கொண்டார்?'' என்பது பாரதியார் பாடலின் கருத்து.

வினு எழுந்த மறு நொடியே முத்தப்பரிடமிருந்து விடை பிறந்தது ; அந்த விடையும் வெண்பா யாப்பில் இருந்தது !

''என்னஜெயம் கொண்டார் இவரென்றல், முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச் செய்த சோழீசர் – பின்னும்,
சிரித்து ஜெயங் கொண்டார் ! சித்தசனைக் கண்ணல்
எரித்து ஜெயங் கொண்டார் இவர் !''


''சுவாமி, இவர் என்ன ஜெயங் கொண்டார் என்று கேட்டீர்கள்? ஆயுதம் தொடாமலே ஜெயங் கொண்டவர் அல்லவா எங்கள் சோழீசர் ! திரிபுரங்களையும் ஒருமுறை சிரித்து ஜெயங் கொண்டார். சித்தசனுன மன்மதனைக் கண்ணல் எரித்து ஜெயங் கொண்டார். இவற்றல் இப் பெருமான் ஜெயங்கொண்டார் என்ற திருநாமம் பெற்றர்''என்பது பாடுவார் முத்தப்பரின் பாடல் கருத்து.

அட்சர லட்சம் பெறக் கூடிய, ''சிரித்து ஜெயங் கொண்டார் ; சித்தசனைக் கண்ணல் எரித்து ஜெயங் கொண்டார் இவர்'' என்ற பாடல் வரிகளைக் கேட்டவுடன், அங்கிருந்தோர் யாவரும் பரவசம் அடைந்து மகிழ்ந்தனர்.

''என்ன ஜெயம் கொண்டார் இவர்?'' என்ற வினவை ஊனையூர்ப் பாரதியார் வஞ்சப் புகழ்ச்சியாக எழுப்பியதால், தமிழுக்கு இத்தகைய பொருள் பொதிந்த கவிதை கிடைத்தது. ஆகவே பாடுவாரை மட்டுமா, பாரதியாரையும் சேர்த்தே அவையோர் பாராட்டினார்கள்!

செட்டிநாடு

ஊரும் பேரும்



நகரத்தார் மக்கள் சோழ நாட்டை விட்டுப் பாண்டிய நாட்டில் குடியேறியதும் பாண்டிய மன்னன் தன்னுடைய துறைமுகங்களுக்கு அருகிலுள்ள கர்னநாட்டை எல்லைப்படுத்திப் **பிரம்பூர்** என்றும் பாலையூர் நாட்டைக் **கேரளசிங்க வளநாடு** என்று பெயர் மாற்றியும் குன்றங்களை அடுத்துள்ள பாகங்களைக் **கல்வாசு நாடு** எனப்பெயரமைத்தும் தொண்ணூற்றாறூர் நகரத்தார், ஏழகப் பெருந்திரு நாட்டுக்கோட்டையார் எனும் பட்டங்களைச் சூட்டிக் கொடுத்தான்.

— பழ. அண்ணாமலை

''அறப்பணிகள் பொதுப்பணி; புதுப்பணியல்ல''

பாகனேரி அண. காளையப்பன் B.Sc., M.A; M.ED.
ஒ.வெ.செ. மேல்நிலைப்பள்ளி. மானாமதுரை.

பாரம்பரியச் சிறப்புமிக்க, வரலாற்றுப் புகழ்பெற்ற நகரத்தார் சமூகத்தினருக்கு அறப் பணியும், பொதுப்பணியும் புதுப்பணியல்ல. இப் பணிகள் அவர்களது குருதியோடு கலந்தவை. மக்களது குருதியில் (இரத்தத்தில்) சிவப்பு அணுக்களும், வெள்ளையணுக்களும் உள்ளன. ஆனால் நகரத்தார் சமூகத்தவர் உடலில் உள்ள குருதியில் இயல்பான அணுக்களோடு கல்விப் பணி, ஆலயப்பணி என்ற மேலும் இரண்டு அணுக்களும் உள்ளன என்று சொல்வது மிகப் பொருத்தமாகும்.

கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங் களுக்குச் சொந்தக்காரர்களும், வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாது வாரி வழங்கும் வள்ளல் தன்மை படைத்தவர்களும், சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும் நிறைந் துள்ள சமூகம் நகரத்தார் சமூகம்.

உலகிலேயே யூதர்கள்தான் அறிவாற்றல் மிக்கவர்கள். அந்த அறிவு ஆற்றலையும்— மிஞ்சுகின்ற அறிவு ஆற்றல் பெற்றவர்கள் நம் சமூக மக்கள். அனைவரும் படித்தவர்களாக உள்ள, வல்லரசு நாடான அமெரிக்க நாட்டில் கூட அதிக எண்ணிக்கையில் நம் சமூகத்தவர் பணியாற்ற முடிகிறது.

ஆலயப்பணி

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று ஔவைப்பாட்டி கூறியுள்ளார். இறைவழிபாடு என்பது நகரத்தார் சமூகத்தவர் வாழ்வோடு இணைந்த ஒன்றாகும். உடன் பிறந்த ஒன்றாகும்.

நகரத்தார் சமூகத்தவர் வாழ்க்கைமுறையே ஒன்பது கோவில்களைச் சார்ந்தே அமைந்துள் ளது. ஒன்பது கோவில்களும் நகரக் கோவில்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒன்பது நகரக் கோவில்களில் பிள்ளையார் ஆட்சி புரியும் பிள்ளையார்பட்டிக்கோவிலும் ஒன்றாகும். 2000ம் ஆண்டுகளாகப் பிள்ளையாரைச் சிறப்பாகவழி பாடு செய்வதற்காகப் பிள்ளையார் நோன்பு நம் சமூகத் தவரால் கொண்டாடப்பட்டு வருகிறது. நகரத்தார் இல்லங்களில் நடைபெறும் எந்த விழாவானாலும் சாமிக்குப் படைப்பு என்ற வழி பாட்டுடனே ஆரம்பமாகிறது. இவையெல்லாம் நமது வாழ்க்கைமுறை தெய்வத்தோடுஇணைந்த வாழ்வு என்பதை வெளிப்படுத்துகின்றன.

இறைவழிபாடு மன அமைதியைத் தருகிறது. அமைதியான உள்ளத்திலே இறைவன் வாழ்கிறான். காலையிலும், மாலை யிலும் இறைவனை வழிபடுபவரது உள்ளமும் ஒரு கோவிலாகும். இறைவன் பக்தர்களிடம் காட்டும் எல்லையற்ற கருணையே அருளாகும். ஆற்றுநீர் கடலில் கலந்து விட்டால் திரும்ப ஆற்றுக்குள்வராது. அதுபோன்று இறைவனது அருள் பக்தர்களுக்குக் கிடைத்து விட்டால் அது பக்தர்களை விட்டு என்றும் நீங்காது. பன்னிரண்டு ஆண்டுகள்தினமும் இறைவனைச் சென்று வழிபட்ட பலனை ஒரு குடமுழுக்கு விழாக் காண்பதன் மூலம் அடையமுடியும். நகரத்தார் சமூகத்தினர் வாழும் ஊர்களில் அடிக்கடி குடமுழுக்குப் பெருவிழா நடை பெற்று வருகிறது. இது நம் நகரத்தார் சமூக மக்களிடம் உள்ள ஆழ்ந்த இறை வழிபாட்டு உணர்வை வெளிக்காட்டுவதாக உள்ளது.

மதுரை நகரில் உள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் கடந்த பல ஆண்டுகளாக நம் சமூகத்தவர்களே அறங்காவலர் குழுத் தலைவர்களாக இருந்து வருவதும், இராமேஸ் வரம் கோவிலைக்கட்டிய தேவகோட்டை நகரில் வாழும் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர் களை இராமேஸ்வரம் கோவில் பரம்பரை அறங் காவலர்களாக அரசு நியமித்து வருவதும் நம் சமூகத்தவரது ஆலயப்பணிகளை வெளி உலகுக்குக் காட்டுவனவாக உள்ளன.

கல்விப்பணி.

மனிதனை மனிதனாக்குவது கல்வி. இத்தகைய கல்விச் செல்வம், மக்களுக்குக் கிடைக்கப் பல கல்வி நிறுவனங்களை நம் சமூகத்தினர் நிறுவிச் சிறப்பாக நடத்தி வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். தமிழக மக்களின் கல்வித்தரம் உயர, இந்தியாவிலேயே தமிழகம் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப் பெற நம்மவரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் பெரிதும் உதவியுள்ளன.

பொதுப்பணி :-

நகரத்தார் சமூகத்தினருக்குப் பொதுப்பணி புதுப்பணியல்ல. சென்னைநகர முதல் மேயராகவும், தமிழக அமைச்சரவையில் இடம் பெற்றும் பொதுப்பணியாற்றிய செட்டிநாட்டு அரசர் மாண்புமிகு மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்களும், இந்தியத் திருநாட்டின் உள்துறை இணை அமைச்சராகப் பணியாற்றியவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களும் நம் சமூகத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய தமிழக அமைச்சரவையில் வீட்டு வசதித்துறை அமைச்சராக இடம் பெற்றுள்ள மாண்புமிகு S. ரகுபதி அவர்களும் நம் நகரத்தார் சமூகத்தைச்சேர்ந்தவர்கள், என்பது குறிப்பிடத்தக்கது.

காரைக்குடியில் 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பொதுப்பணியாற்றி வந்த காலஞ் சென்றராய. சொக்கலிங்கம் செட்டியாரும், சட்டமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியவரும், கம்பர் மணிமண்டபம் கட்டியவரும் ஆனகம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்களும் தெற்கு வட்டகையில் முதலில் B. A. பட்டம் பெற்றவரும், அறப்பணிச் செல்வரும் ஆகிய பாகனேரியைச் சேர்ந்த வே. மாணிக்கம் செட்டியாரும், இரண்டு முறை சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தின் சேர்மனுக இருந்த ஒக்கூரைச் சேர்ந்த திரு. சோம. இராமனுதன் செட்டியார் அவர்களும் பொதுப் பணியிலும், நகரத்தார் சமூகப் பணியிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இன்னு செய்தார்க்கும் இனியவை செய்கின்ற பண்பு நம் சமூக மக்களிடையே உள்ள காரணத்தால் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சென்றதே இல்லை, சிறைக் கூடங்களைக் சந்தித்ததும் இல்லை. அறிந்ததும் இல்லை. சிறைச் சாலைச் சீர்திருத்தக் கமிட்டியில் தலைவராக, உறுப்பினராக இருந்து சிறைச்சாலைகள் மேம்பாட்டிற்கு ஆலோசனைகள் வழங்கிய வரலாறு மட்டுமே உண்டு.

கல்கத்தா, அலகாபாத் போன்ற நகரங்களில் உள்ள நகரவிடுதிகளை நாம் அடிக்கடி அங்குச் செல்லாத காரணத்தால் அவற்றை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி அப்பெருநிதியைக் கொண்டு உதவி கேட்டு வரும் நம் சமூகத்தவருக்கு உதவி செய்தால், மேலே குறிப்பிட்ட விடுதிகளிலிருந்து நம் சமூக மக்களுக்குக் கிடைக்கும் பலனைவிட அதிகப் பலன் கிடைக்கும். இது தொடர்பாக நமது நகரத்தார் சமூகத்தின் முன்னுேடித் தலைவர்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

படித்திருப்பதால் ஏற்படும் பெருமைகளைவிட, பணிபுரிவதால் ஏற்படும் பெருமைகளைவிட நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லும் போது நமக்குப் பெருமையும், புகழும் ஏற்படுகின்றன.

மதுரை நகர விடுதிக்கு மதுரை நகரின் மையப் பகுதியில் வானளாவிய, வலுவான, கலை நுட்பத்தோடு கூடிய பெரிய மாளிகையை உருவாக்கப் பாடுபட்ட அனைவரையும் இருகரம் கூப்பி வணங்கி, மதுரை நகரத்தார் சங்கம் தொடர்ந்து இது போன்ற விழாக்களைக்காண அருள்மிகு மீனுட்சி அம்மனை வேண்டி விரும்பிப் பிரார்த்திக்கிறேன்.

குபேரனுக்கும் கடன் கொடுக்கும் நகரத்தார்!

நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன்
பகருகடன் கேட்கவரும் பாங்கு !

— பாடுவார் முத்தப்பர்

நகரத்தார்களின் சாலை அறப்பணி

டாக்டர் தெ. சொக்கலிக்கம், எம். ஏ., பி.ஒ. எல்., பியெச்டி,.
இணைப் பேராசிரியர், அழக்கப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-3.

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள், திருக் கோயில் திருப்பணி செய்து பெரும் புகழ் பெற்றவர்கள். கோயில்பணி, சமயப் பணிகளில் ஆர்வங்காட்டிய நகரத்தார்கள், மக்கள் நல வாழ்வுக்குரிய பணிகள் பலவற்றையும் செய் தனர். அவர்கள் கல்விநிலையங்கள் (பல்கலைக் கழகம், கல்லூரி, மேல்நிலைப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, துவக்கப் பள்ளி) அமைத்தும் மருத்துவச் சாலைகள் நிறுவியும் அறம் செய்துள்ளனர். இவை நிறுவியவர்களின் குடும்பத்தினரால், இடை விடாது தொடர்ந்து இன்றும் நடத்தப் பெற்று வருகின்றன. அவர்கள் இந்த அறங்களை அறிந்து கொள்ளுதற்கு அந்த இடங்களில் தக்க கல்வெட்டுக்களையும் நிறுவியுள்ளனர். மேலும் இன்று வரை அவற்றுடன் தொடர்பு கொண்டு உள்ளனர். இவற்றைப் போல நகரத்தார்கள் பல்வேறு ஊர்களை இணைக்கும் கற்சாலையும் போட்டிருக்கின்றனர். இந்த அறப்பணியை நகரத்தார்கள் தனி ஒருவராகவும், ஒரு குடும்பத் தினராகவும் செய்துள்ளனர்.

கி.பி.1953-இல் 'வித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், 'நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு' எழுதினார். அவர் அந்நூலில் நகரத்தார்களின் பல்வேறு அறங்களை முயன்று திரட்டி எழுதியிருக் கிறார். அப்பெரியார், நகரத்தார்கள் எட்டு இடங்களில் சாலை அமைத்துப் போக்கு வரவுக்கு உதவியமையையும் அதற்குச் செல வான தொகையையும் குறித்திருக்கிறார்கள் அவர்கள் குறிக்காது விடுபட்டுப்போன சாலை அறங்களும் உள்ளன

சுற்றுப்புறமும் சாலை வசதியும் :

நகரத்தார்களின் திருக்கோயில் பணியை உலகம் அறிந்து போற்றுகின்றது; ஆனால் அவர்கள் சாலை அமைத்த அறப்பணி உலகம் அறியாதது. இன்று அரசுபொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை என்று பல்வேறு பிரிவு களை நிறுவி ஓர் ஊருக்கும் மற்றோர் ஊருக்கு மிடையே சாலை அமைத்துத் தொடர்ந்து காத்து வருகிறது. ஆனால் ஒரு சமுதாயத்தார் தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள ஊர்களுக்கு நல்ல கற்சாலை அமைத்தனர்.

மணத் தொடர்பு :

ஒரு குடும்பத்தினர் அயலூரில் தங்கள் பெண் மக்களைக் கட்டிக் கொடுத்தும் பல பெண்களை அங்கிருந்து தங்கள் மகன்களுக்குத் திருமணம் செய்தும் கொண்டிருந்தால், அந்த இரண்டு ஊர்களுக்குமிடையே அக்குடும்பத் தினர் தங்கள் செலவில் சாலை போட்டனர். உறவினர் வீடுகளுக்கு அடிக்கடி போய் வருவ தற்காக இந்தச் சாலைகளைப் போட்டனர். கீழ்ச்சிவல்பட்டியிலிருந்து குருவிக் கொண்டான் பட்டி வரையுள்ள சாலையைக் க. தெ. குடும் பத்தினர் தங்கள் பொதுச் செலவில் அமைத் தனர். வண்டிப்பாதையை மண் பாதையாக்கி இவர்கள் கற்சாலையாக்கினர். உறவு காரண மாகக் கற்சாலை அறப்பணியில் நகரத்தார் ஈடுபட்டமைக்கு இது நல்ல சான்று.

குலதெய்வத் தொடர்பு :

குலதெய்வக் கோயிலுக்கு எளிதாகவும், விரைவாகவும் போய் வழிபாடு செய்ய நகரத் தார்கள் சாலை அமைத்தனர். திருப்பத்தூர், தேவகோட்டைப் பெரிய சாலையிலிருந்து இளங்குடி அய்யனார் கோயிலுக்கு ரூபாய் பத்தாயிரம் செலவில் கற்சாலை போட்டனர். கீழ்ச்சிவல்பட்டியிலிருந்து குன்றக்குடி வரை, கீழச்சிவல்பட்டிச் சூரைக்குடிக் கோயிலார் கற் சாலை அமைத்தனர். அச்சாலையின் தொடக்

கத்தில் கீழச்சிவல்பட்டியிலும் அச்சாலையின் முடிவில் குன்றக்குடியிலும் இரண்டு வளைவுகள் கட்டப்பட்டன. கீழச்சிவல்பட்டி—விறாமதியிலுள்ள அழகிய வளைவு (முருகப்பா ஆர்ச்) இவ்வாறு கட்டப்பட்டது. குன்றக்குடியிலுள்ள வளைவு புயலில் விழுந்துவிட்டது. இதுதான் குன்றக்குடியில் முதன்முதல் கட்டப்பட்ட வளைவாகும்.

நன்றி மறவாமை :

மகிபாலன்பட்டியிலிருந்து கண்டவிராயன் பட்டி வரை தேவகோட்டை அ. கண. வீரப்ப செட்டியாரால் சாலை அமைக்கப்பட்டது. வீரப்ப செட்டியார், மகிபாலன்பட்டியில் பிறந்து தேவகோட்டைக்குச் சென்றவர்கள். அன்னார் பிறந்த மண்ணை மறவாமல் சிறந்த சாலையை இருபதினாயிரம் ரூபாய் செலவில் அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். பிறந்த இடத்துத் தொடர்பு, சாலை அறப்பணியில் ஈடுபாட்டை ஏற்படுத்தி மக்கள் நலம் பெறச் செய்யப்பட்டிருக்கிறது. தன்னலம் கருதாப் பண்பு போற்றற்பாலது.

இவ்வாறு பல்வேறு காரணங்களால், நகரத்தார்கள் அமைத்த சாலைகள், காலந்தொறும் புதுப்பிக்கப் பெற்று விட்டன. முதன் முதல், இச்சாலைகளைப் போட்டவர்கள் யார் என்பதே இன்று மக்களுக்குத் தெரியவும் இல்லை; மறந்தும் போய் விட்டது. சிலர், சாலையின் தொடக்கத்தில் தங்கள் விலாசத்தை வெட்டிக் கல்நாட்டினர். திருப்பத்தூர்-கண்டவிராயன்பட்டி விலக்கிலுள்ள நடு கல்லில் '1922-இல் தெ. சி. நா'. என்று குறிப்புள்ளது. இச்சாலை தெ. சி. நா. சொக்கலிங்கம் செட்டியாரின் அறப்பணியாம். இங்ஙனம் குறிப்பது எல்லா இடங்களிலும் இல்லை.

சாலையும் பாலமும் :

நகரத்தார்கள் சாலை அமைக்கும் போது, பாலங்கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டால் பாலங்களும் கட்டிச் சாலை அமைத்தனர். இராமச்சந்திரபுரத்துக்கும் இராயவரத்துக்கும் நடுவே உள்ள உமையாள்புரம் சாலை, இராமச்சந்திரபுரம் தீ. நா. முத்தையா செட்டியாரால் போடப்பட்டது. அச்சாலையில் வரும் பெரிய பாலமும் அவர்கள் கட்டியது.

பேரூர்த் தொடர்பு :

தங்கள் ஊர், அருகிலிருக்கும் பெரிய ஊருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கருதி நகரத்தார்கள் அமைத்த சாலைகளுமுண்டு. சிறுகூடல்பட்டி கவியரசு கண்ணதாசன் பிறந்த ஊர். இவ்வூர் திருப்பத்தூர் — புதுக்கோட்டைச் சாலையிலிருந்து கிழக்கே இருக்கின்றது. இச்சாலையைச் சிறுகூடல்பட்டி கரு. சி. பழ. பழனியப்பச் செட்டியார் போட்டார். பட்டமங்கலம் வீர. அ. அடைக்கப்ப செட்டியார், பட்டமங்கலத்திலிருந்து கண்டரமாணிக்கம், திருக்கோட்டியூர் வரை சாலை அமைத்துள்ளார். இதனை இராமநாதபுரம் முத்துவிஜய ரகுநாத சேதுபதி 29–10–22-இல் திறந்து வைத்தார்கள். சண்முகநாதபுரம் நகரத்தார்கள் இங்கிருந்து மேற்கே அமராவதிப் புதூர் வரையிலும் கிழக்கே கண்டதேவிச் சாலை வரையிலும் ஐந்து கல் அளவு சாலை போட்டனர். இச்சாலை 10-4-1922-இல் திறக்கப் பெற்றது.

பக்கத்தூர்த் தொடர்பு :

இவ்வாறன்றித் தங்கள் ஊருக்கும் பக்கத்தூருக்கும் தொடர்பிருக்க வேண்டும் என்று கருதியும் சாலைகள் போடப்பட்டன. பூங்குடி கூராண்டான் செட்டியார் வகையினரால் ஒக்கூருக்கும் பூங்குடிக்கும் மூன்று கல் தொலைவு சாலை போடப்பட்டது. வ.பழ.சா. குடும்பத்தார் வேந்தன்பட்டியிலிருந்து மேலைச் சிவபுரி வழியாகப் பொன்னமராவதி வரை மூன்று கல் அளவு கற்சாலை அமைத்திருக்கின்றனர். வேகுப்பட்டி மே. கு. ராம. தங்கள் ஊரிலிருந்து கொப்பனாபட்டி முடியக் கற்சாலை போட்டிருக்கின்றார்கள். தாழம் பட்டிக் குடியிருப்பிலிருந்து பேரையூர் வரை நற்சாந்துபட்டி பெ. இராம. இராமன் செட்டியார் கற்சாலை நிறுவியுள்ளார்கள்.

பழமைப் பணி:

கண்டவிராயன்பட்டிக்கும் தெக்கூருக்கும் இடையே உள்ள சாலையைக் கருமுத்து குடும்பத்தார் கி.பி. 1898-இல் அமைத்தனர். சாலை அமைக்கும் அறத்தில் இதுவே காலத்தால் முற்பட்டதாகும்.

இவையன்றி இன்னும் பல்வேறு ஊர் களுக்கு நகரத்தார்கள் சாலை அமைத்து இருக் கிறார்கள். தாங்கள் அமைத்த சாலை களைத் தொடர்ந்து பேணிக்காத்திட வைப்பு நிதி ஒதுக்கி வைத்தவர்களுமுண்டு. ஆனால் இன்று சாலைகளும் பல்வேறு மாற்றங்கள் அடைந்துவிட்டன ; சாலை நிறுவிய அறவோர் களும் மறக்கப்பட்டுவிட்டனர். அறம் செய்த குடும்பத்தினருக்கே, 'இந்தச் சாலை நம் குடும்பத்தினரால் முதற்கண் போடப் பட்டது' என்ற உண்மை தெரியவில்லை.

பெயர் சுட்டா நாகரிகம் :

திருக்கோயிற் பணி, குருபூசை மடம், வேதபாடசாலை, தேவார பாடசாலை போன்ற அறங்கள் செய்யப் பெற்றமையையும் செய்தவர் களையும் அறிய வாய்ப்புள்ளது. சாலை ஓரத் தில், சாலை அறம் செய்தோர்பெயர் பொறித்து நாட்டியிருப்பின் உண்மை மறையாது. கற் சாலை போட்டு அறம் செய்தவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் சாலைகளில் தங்கள் பெயரை எழுதி வைத்து வெளிப்படுத்தவில்லை. அக்காலத்தில் சாலை அறம் தெய்வத்திருப் பணி போலப் புனிதமானதாகக் கருதப்பட வில்லை. சமயம், கல்வி, மருத்துவம், தண்ணீர் பந்தல் போன்ற அறங்களைச் செய்வதே பேரறமாகக் கருதப் பெற்றது. அக்காலத்திய நகரத்தார்கள் தங்கள் பெயரைத் தெருவில் எழுதி வைத்திருப்பது பண்பாட்டுக் குறைவு என்றும் இழி சொல்லுக்கு இடனாகும் என்றும் மாமன் மைத்துனன் கேலிக்கு ஆளாக வேண்டும் என்றும் கருதினர். எனவே தான் சாலை அறம் செய்த சான்றோர்கள் தங்கள் பெயரைச் சாலைகளில் பொறித்து வைத்திலர். (என்ன அயித்தான்! உங்க பேர் ரோட்டில இருக்கு? என்று கேட்பர்). சாலை அமைக்கும் அறம், நூல்களாலும் பாராட்டப்படவில்லை.

சுமை தாங்கி :

சாலை நிறுவுவதோடு அமையாது, சாலை யில் போய் வருவோர்க்கு உதவும் அறப்பணி களிலும் நகரத்தார்கள் ஈடுபட்டனர். அத்த கைய அறச் செயல்களில் ஒன்று 'சுமை தாங்கிக் கல் நிறுவுதல்'. முப்பது ஆண்டுகளுக்கு முன் வரை இப்பணி, மிகத் தேவையான பணியாகக் கருதப் பெற்றது. நகரத்தார்களன்றிப் பிற சாதியினரும் சாலைகளில் ஆங்காங்கே தலைச் சுமையை இறக்கி வைத்து ஓய்வெடுத்தபின் மீண்டும் தூக்கி வைத்துக் கொண்டு வருவ தற்குத் தோதாகச் சுமை தாங்கிக் கற்களை நட்டிருந்தனர். யார் உதவியும் இன்றித் தானே ஏற்றிக் கொள்ளச் சுமை தாங்கிக் கற்கள் இன்றியமையாதவை.

சுமை தாங்கிக் கற்கள் ஒரே அளவான மூன்று கற்களால் அமைந்தவை. இந்த அறத் தைச் செய்யப் பெரும் பொருட் செலவும் ஏற் படாது. குறைவான செலவில், மிக அழகாகச் சுமைதாங்கிக் கற்களை நிறுவி விடுவர். பலரும் மிகுதியாகப் போய் வரும் ஒற்றையடிப் பாதை கள், முச்சந்திகள், நாற் சந்திகள் ஆகிய பகுதி களில், சுமை தாங்கிகள் ஒன்றுக்கு மேல் காணப் படுவது முண்டு. சுமைதாங்கிக் கற்களில் நிறுவி யவர்கள் பெயர்கள் காணப்படும்.

குறியீடு :

கருவுற்று நிறை மாதமாக இருந்து பிள்ளை பெற முடியாமல் இறந்துபோன பெண் களின் (பிள்ளையாகிய சுமையைத் தாங்கிய படியே இறந்தவர்கள்) நினைவாகச் சுமை தாங்கிக் கற்கள் அமைக்கப்பட்டிருக்கும். மிதி வண்டிகள், இருசக்கரவண்டிகள் பெருகிய இந் நாளில், சுமைகளைச் சிற்றூர்களிலிருந்து கொண்டு வருவது எளிமையான செயலாகும். போக்குவரவு வசதிகள் மிகக் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் காய்கறிகள், தானி யங்கள், புளி, விறகு போன்றவற்றைத் தலைச் சுமையாகவே ஐந்துகல் தொலைவு கொண்டு வர வேண்டுமானால் குறைந்தது மூன்றிடங் களிலேனும் சுமையை இறக்கி வைத்துத் தூக்க வேண்டும். அதற்குச் சுமைதாங்கிக் கற்கள் பயன்பட்டன. எனவே சுமைதாங்கி என்பது அக்காலத்து மக்கள் சுமையைத் தூக்கிக் கொண்டு வருதலை எளிமையாக்கிக் கொள்ளக் கண்டுபிடித்ததாகும்.

மக்கள் பயன்படுத்திய சுமைதாங்கிக் கற்கள், மழையாலும் காற்றாலும் வீழ்ந்து விட்டன; பல உடைக்கப்பட்டு விட்டன. நகரத் தார்களால் சுமைதாங்கிக்கற்கள் பல நிறுவப் பட்டிருக்கின்றன. நகரத்தார் மரபைச் சார்ந்த பெண்கள் தங்கள் செலவிலேயே சுமைதாங்கிக் கற்கள் பலவற்றை நிறுவியுள்ளனர்.

தண்ணீர்ப் பந்தல் :

போவதற்கும் வருவதற்கும் சாலைகள் அமைக்கப்பட்டன; சாலையில் வரும்போது சுமையின் வலியை ஆற்றி ஒய்வு பெறச் சுமை தாங்கி நிறுவினர். வழிநடைக்களைப்பையும் பாரம் தாங்கிய சோர்வையும் போக்கச் சாலைகளில் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்தனர். இது சாலைப் போக்குவரவில் நிலையான அறமாகும். தண்ணீர்ப் பந்தல் வைத்தவர்கள். அதனையே பட்டப்பெயராகவும் பெற்றனர்.

தண்ணீர்ப்பந்தல், அறம்.தொன்றுதொட்டு நடைபெற்று வருவதாகும். அளவில் சனம் செலவு ஒழியா வழிக்கரையிலும், மூன்று, நான்கு சாலைகள் ஒருங்கு கூடுமிடங்களிலும், ஊரின் எல்லைகளிலும் தண்ணீர்ப்பந்தலை நகரத்தார்கள் நிறுவினர். வழி நடையாள்கள் தங்கிடவும் குடிக்க நீர்மோரும் நன்னீரும் இங்குக் கிடைத்தன. இவ்வாறு ஆண்டு முழுமையும் இந்தத் தண்ணீர்ப் பந்தல்கள் செயற்பட்டன.

திருவிழாக் காலங்களில் மட்டும் நடத்தும் தண்ணீர்ப் பந்தல்களும் உண்டு. இவை விழாக் காலத்தில் மட்டும் நடக்கும். ஆண்டுமுழுமையும் இயங்கும் தண்ணீர்ப் பந்தல்கள் கற்கட்டிடங்களில் செயல்பட்டன. இங்குப் பணியாளர்களுக்குத் தங்கவும் வசதி இருந்தது. செட்டியார்களைப் போல ஆச்சிமார்களும் தங்கள் சிறுவாட்டுப் பணத்திலும் சீதனப்பணத்திலும் தண்ணீர்ப்பந்தல்கள் நிறுவிப்புண்ணியம் தேடினர். கோயில் திருப்பணி போலத் தண்ணீர்ப் பந்தலறமும் பேரளவுக்குச் செய்யப்பட்டது. இன்று பல தண்ணீர்ப் பந்தல் கட்டிடங்கள் குடியிருப்புகளாக மாறிவிட்டன.

நகரத்தாரிகளின் தண்ணீர்ப் பந்தல் அறம் தனி ஆய்வுக்குரியது; பல கோடி ரூபாய்க்குச் செய்யப்பட்டுள்ளது. செட்டிநாட்டில் ஊரை விட்டுத் தள்ளிச் சாலைகளிடையே காணப்படும் கட்டிடங்களில் பல, நகரத்தார்களின்தண்ணீர்ப் பந்தல்களாகவே இருக்கும். (திருப்பத்தூர்—வயிரவன்பட்டிச் சாலையில் வயிரவன்பட்டி முச்சந்தியிலும், திருப்பத்தூர் சிவல்பட்டிச் சாலையில் அரிவரம் இறக்கத்திலும், விறாமதி பந்தய எல்லையிலும் நகரத்தார்களின் தண்ணீர்ப்பந்தல்கள் உள்ளன. இவையன்றி வேறு பலவுமுள). இந்தத் தண்ணீர்ப்பந்தல்கள் வழிநடை மக்களின் நீர் வேட்கையை நீக்கின. இங்கு மிளகாய்ப் பொடி போட்டு மாங்காயும் கொடுக்கப்பட்டது.

அறத்தின் செலவு மதிப்பு :

நகரத்தார்கள் நிறுவிய சுமை தாங்கிக் கற்கள் மிகுதி ; அவற்றுக்குச் செலவான தொகைகள் குறைவு. ஆனால் அவற்றைக் காட்டிலும் தண்ணீர்ப் பந்தல் அறத்துக்குச் செலவிடப்பட்ட தொகையும் மிகுதி ; நிறுவப்பட்ட தண்ணீர்ப்பந்தல்களும் மிகுதி. நகரத்தார்கள் போட்ட சாலைகள் ஏனைய இரண்டை நோக்கக் குறைவுதான் ; எனினும் அவை தன்னலத்தோடு பொதுநலமும் பயந்தவை.

நகரத்தார்கள் சாலை அமைக்கும் அறம், இந்தியவிடுதலைக்கு முன்னரே செய்யப்பெற்றன. கி.பி. 1956-இல் நகரத்தார்கள் செய்த சாலை அறத்தின் மதிப்பீடு ஏறத்தாழ இரண்டு லட்சமாகும். நகரத்தார்களின் திருக்கோயில் திருப்பணியே இன்று நினைக்கப்படுகின்றது, சாலை அறப்பணி அனைய அரிய பணிகளைக் கட்டாயம் நகரத்தார்களுக்குப் பத்திரிக்கையாளர்கள் நினைவூட்டுதல் வேண்டும்.

நகரத்தார் கோயிற்கலை

அரசமரபினருக்குப் பிறகு கோயிற்கலைகளை வளர்த்தும் காத்தும் வந்த பெருமை நகரத்தார்களுக்கு உரியது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு முதல் நகரத்தார் வளர்த்த கோயில்கலைகளை 'நகரத்தார்கலை' எனக் கூறலாம்.

மா. சந்திரமூர்த்தி
தொல்பொருள் ஆய்வுத்துறை

தனவைசிய நகரத்தார்கள்:

கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம்

பேராசிரியர் டாக்டர் வி. மு. பழனியப்பன்
தாவரவியல் துறை, மலேயாப் பல்கலைக்கழகம், மலேசியா.

தமிழ்நாட்டின் கிழக்கு—தெற்குப் பகுதிகளில் நெடுங்காலமாக மிகுந்த கட்டுக் கோப்புடன் வாழ்ந்து வந்துள்ளனர் தனவைசிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எனும் செட்டியார்கள். இவர்களது வருங்காலம் எவ்வாறு இருக்கும் என்பதைக் கடந்தகாலம் முதற் கொண்டு தற்காலம் வரை நிகழ்ந்துவருவனவற்றை அடிப்படையாக வைத்துக் கணித்துக் கூற இயலும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தபோதும் பின்னர்ப் பாண்டிய நாட்டிற்கு வந்து குடியேறிய போதும் நடந்தனவற்றை வரலாற்றுக் குறிப்புக்கள் ஓரளவிற்குத் தெளிவாகவே காட்டுகின்றன. தஞ்சாவூர்ச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரால், 1894-இல் வெளியிடப்பட்ட, பூங்கொன்றை வேலங்குடியின் கல்வெட்டுக்களிலிருந்து தயாரிக்கப்பட்ட துலாவூர் மடத்துச் சாசனம், பிற்கால வரலாற்றை மிகத்தெளிவாகக் காட்டுகின்றது. இந்நூலில் உள்ள பல விவரங்கள் நமக்குப் பெரிதும் உதவக்கூடிய வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்தில், ''இரத்தின தன மகுட பூபால வைசியர்கள்'' என்ற பெயரைக் கொண்டிருந்தனர் செட்டியார்கள். இவர்களில் ஒரு பகுதியினரைப் ''பாண்டிய நாட்டில் குடியேறி அதனைச் செழிக்கச் செய்யுங்கள்'' என ராசபூஷண சோழமன்னன் வேண்டினான். அப்போது, ''நாங்கள் 8000 குடும்பத்தாரும் காவிரிப் பூம்பட்டினத்தில் மூன்று தெருக்களில் குடியிருந்து வருகின்றோம், நாங்கள் யாவரும் ஒன்றாகத்தான் இருப்போம். தனித்தனியாகப் பிரிந்து வாழ ஒப்பமாட்டோம்'' என்று சொல்லியிருக்கின்றனர். அதன்படி, யாவருமே ஒன்றாகப் பாண்டிய நாட்டின் ஒங்காரக்குடிக்குச் சவுந்தரபாண்டியராசனுடன் வந்து சேர்ந்தனர். இது நடைபெற்ற காலம்: சாலிவாகன சகாப்தம் 6721, கலியுக ஆண்டு 3808, பிலவங்க ஆண்டு, வைகாசித் திங்கள், 21-ஆம் நாள்.

வேளாளர் குலத்து நிலங்களில் அமைந்துள்ள அரியூர்நகரம், சுந்தரபட்டணம், சோபசாந்திபுரம் என்ற இளையாத்தக்குடி நகரம் ஆகிய ஊர்களில் இவர்கள் குடியேறினார்கள்.

''நாங்கள் பிரிந்து வாழமாட்டோம்'' என்று காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தபோது கூறிய மூன்றுதெருச் செட்டியார்களும் இப்போது ஒன்றுகூடி, ''மூன்று வகுப்புக்களைச் சார்ந்த வேளாளர் குலத்துப் பெண்களைத் திருமணஞ் செய்து கொண்டிருக்கும் காரணத்தால், இனி மேலும் நாம் யாவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ முடியாது. எனவே, பிரிந்துவிடுவோம்'' என முடிவெடுத்தனர்.

இம்முடிவிற்கு ஏற்பக் காவிரிப்பூம்பட்டினத்தில் மேலத்தெருவில் வாழ்ந்து வந்த, ஆறு பரம்பரையினர் அரியூர் நகரத்தில் இருப்பது என்று ஒதுங்கிக் கொண்டுவிட்டனர். இவர்கள் 'அரியூரார்''என்ற பெயரையும். பிரான்மலைக் கோவிலையும் வைத்துக் கொண்டனர். இவர்கள். பிற்காலத்தில் அரியூர்ப்பட்டணம் கலவரத்தில் அழிந்து போனமையால், மலையாளத்திற்குச் சென்று, மரகதப்பிள்ளையாரையும் வைத்துக் கொண்டு, கோட்டாற்றங்கரை எனும் ஊரில் குடியேறி வாழ்பவர்களாயினர்.

இன்றையக் கேரளத்திற்குச் சென்று இவர்களை யாராவது தேடிக் கண்டு பிடிக்க விரும்பி னால் அவர்கள் தேடிக் காணவேண்டிய சான்று யாதெனில், இன்றையச் சைவ வேளாளர் குலத்தையும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களையும் சார்ந்த பெண்களுடையஉணவு சமைக்கும் பாணியேயாகும். அதிலும் மிகக் குறிப்பாக வெள்ளைப்பணியாரஞ் செய்தல் இவர்களிடையே பொதுவாகவும் ஒன்றுபோலவும் இருக்கும் இன்றையச் சைவவேளாளர் குலத்துப் பெண்கள், ஆச்சிமாரைப் போலவே வெள்ளைப்பணியாரம் உட்பட மற்றயாவற்றையும் சமைப்பதால் இதுவே மேற்குறிப்பிட்டதற்குச் சான்றாகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தின் தெற்குத்தெருவிலிருந்து வந்துள்ள நான்கு பரம்பரையினர் சுந்தர பட்டணத்தில் இருப்பதாகக்கூறி ஒதுங்கிவிட்டனர். இவர்கள் ''சுந்தரத்தார்'' என்று அழைக்கப்பட்டனர். இவ்விரு பகுதியினர்க்கும் இப்போதுள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் களுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று தெரிகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தின் கீழத்தெருவிலிருந்து வந்துள்ள ஏழுவழியார்கள் இளையாத்தக் குடி நகரத்தில் இருப்பதாக ஒதுங்கிக் கொண்டனர். இவ்வூரின் கோவிலையும் தமதாக்கிக் கொண்டனர். இவர்கள் தான் இன்றைய நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகின்றனர்.

இளையாத்தக்குடியில் ஏழு நகரத்தார்களும் நெறிவழுவாமல் வாழ்ந்துவரும்போது இவர் களிடையே இருந்துவந்த ஒற்றுமை சீர்குலைந்தது. ஒரு சிலர்மட்டும் ஒற்றுமையாக இருக்கத் தான் வேண்டுமெனக் கூறி, அமைதியாக இருந்தனர். இவர்களை விடுத்த மற்ற அனைவரும் எட்டு வகைக் கூட்டத்தினராகப் பிரிந்துகொண்டுவிட்டனர். இது நடை பெற்ற காலம் சாலிவாகன சகாப்தம் 634 கலியுக ஆண்டு 3813.

இவ்வாறு பிரிந்தவர்கள் (1) அதிவீரபாண்டியபுரம் எனும் மாற்றூர்க் கோவிலையும், (2) வைரவன்பட்டிக் கோவிலையும், (3) சொர்ணபுரம் எனும் இரணியூர்க் கோவிலையும், (4) நந்திபுரம் எனும் பிள்ளையார்பட்டிக் கோவிலையும், (5) மதுநந்திபுரம் எனும் நேமங் கோவிலையும், (6) அதி வீரபாண்டியபுரம் என்றும் பிரமபுரம் என்றும் அழைக்கப்பட்ட இலுப்பைக்குடிக் கோவிலையும், (7) பெதரிகாபுரமாகிய சூரைக்குடிக் கோவிலையும், (8) கெந்தகாபுரியாகிய வேலங்குடிக் கோவிலையும் கொண்டவர்களாகப் பிரிந்து வாழ்ந்துவந்துள்ளனர்.

''தாங்கள் பிரிந்துவாழச் சம்மதப்படவில்லை'' என்ற எண்ணத்தோடு ஒதுங்கியிருந்த மற்ற வர்கள் இளையாத்தக்குடிக் கோவிலைச் சார்ந்தவர்களாக வாழத் தொடங்கினர். இதுவே ஒன்பதாவது கோவிலாயிற்று.

இவ்வரலாற்றுக் காலத்தில்தான், பூங்கொன்றை நாட்டு வேலங்குடியில் (இன்றைய மகிபா லன் பட்டிக்கு அருகில் இது காடாக இருப்பதாகக் கூறப்படுகிறது), சாலிவாகன சகாப்தம் 1083, கலியுக ஆண்டு 4262-இல், மாணிக்கப் பெருந்தெருவில் வசித்துக்கொண்டிருந்த, நேமங் கோவிலைச் சேர்ந்த முத்துவீரப்பச் செட்டியார் மகன் அருணசலம் என்பவருடைய 5 வயது மகள் முத்துமீனாளைக் காருண்யபாண்டியராசன் எடுத்துச்சென்றான். இதனால் அக்குழந்தையை இறையுலகஞ் சேர்ப்பித்துவிட்டு, அங்குள்ள நகரத்தார்கள் வேற்றூர்க்குச் சென்று வாழ்ந்தனர்.

இதற்கும் பிற்காலத்தில் - சாலிவாகன சகாப்தம் 1465-இல், கலியுக ஆண்டு 4644-இல், நாட்டரசன்கோட்டையில், கொள்ளைக்கலகத்தின்போது சில ஆச்சிமார்களின் கற்புக்குக்கேடு நிகழ்ந்தமையால், அவர்களையும் இறைவனடி சேர்ப்பிக்க நேர்ந்தது, இதன் பின்னர் வெளியூர் ஏதும் மாறிச் செல்லாமல் இவ்வூரார் அங்கேயே தொடர்ந்து வாழ்ந்துவந்தனர் என்பதும் வரலாற்றுக் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களது வரலாற்றிலிருந்து நாம் உணருபவற்றுள் முக்கியமான விவரங்கள் யாவையெனில் (1) ஒரே குலமாக இருந்தோர், காவிரிப்பூம்பட்டினத்தில் மூன்று சாதிகளைச் சேர்ந்தோர்களாகப் பிரிந்தனர் என்பதும், (2) ஏதாவது ஒரு காரணத்தினால், சில நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை, இடம்பெயர்ந்து வெளியூர்களுக்குச் சென்று அங்கு நன்முறையில் குடியேறி வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும், (3) பிற்காலத்தில், ஏழுவழியாராகிய இந்நாட்டுக்கோட்டை நகரத்தார் எனும் செட்டியார்கள், ஒன்பது கோவிலைச் சார்ந்தவர்களாகப் பிரிந்தாலும், வெவ்வேறு சாதியினராகப் பிரியாமல் தொடர்ந்து கட்டுக்கோப்பாக இன்றுவரை இருந்து வருகிறார்கள் என்பதுமேயாம்.

இதற்குப் பின்னர்ச் சில நூற்றாண்டுகளாக, இச்செட்டியார்கள் திரவியந் தேடும்பொருட்டு, திரைகடலுக்கு அப்பாலுள்ள பல்வேறு நாடுகளுக்கெல்லாஞ் சென்று தமிழகத்திற்குத் திரும்புவோராயிருந்து வந்துள்ளனர். (இம்முறையினையே பிற்காலத்து வெள்ளைக்காரர்களும் தற்செயலாக மேற்கொண்டு வாழ்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்) இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அங்கேயே குடியிருந்துவிடாமல், வேளாளர்பூமியாகிய செட்டிநாட்டிற்கே திரும்பி, அங்குதான் எப்போதும் வாழவேண்டும் என்ற சாதி முறை நியாயங்களின்படி அண்மைக் காலம்வரை வாழ்க்கை நெறிமுறை நிகழ்ந்து வந்திருக்கின்றது. ''தீர்த்த யாத்திரை, சுவாமி தரிசனம் நீங்கலாக வேறெந்தக் காரணத்தை முன்னிட்டும் பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுவதில்லை'' என்றவாறான சாதிமுறை நியாயங்கள், ஆதிமுதற்கொண்டு இருந்துவந்ததற்கு ஒப்பப் பூங்கொன்றை வேலங்குடியில் நிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளன.

இனி, இன்றைய நிலைமை என்னவெனக் காண்போம். பழங்காலத்துச் சாதிமுறை நியாயங்களில் பெரும்பாலானவை இன்றும் மீறப்படாமல்தான் இருந்து வருகின்றன. ஆயினுங் கூடக் காலத்திற்கு ஒப்பக் குடும்பத்தினரைத் தங்களுடன் அழைத்துச் சென்று, தாங்கள் திரவியந் தேடும் ஊர்களில் வைத்துக் கொள்ளுந்தன்மை கடந்த ஏறத்தாழ 40 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது கடந்த 30 ஆண்டுக்காலத்தில் இத்தன்மை பெரிதும் மிகுந்துள்ளது.

இந்நிலையில் மிகவும் வியப்பதற்குரிய நிகழ்வு என்னவெனில், ஏறத்தாழ எல்லாத்தன வைசிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களுமே, தாங்கள் எந்நாட்டில் பிறந்தவர்களாக இருந்தாலும் தத்தமக்கு உரிய, செட்டிநாட்டில் உள்ள சொந்த ஊரை மறந்துவிடாது, தாய்வீடு போல அனைத்துத் தொடர்புகளையும் வைத்திருப்பதுதான்!

கடந்த ஏறத்தாழ 50 ஆண்டுக்காலத்தில் இடையில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவு காரணமாகச் செட்டிநாட்டில் உள்ள கோட்டைகள் போன்ற வீடுகளில் சில பலவாறாகக் கேடுற்றபோதும், பெரும்பாலானவை நன்றாகவே இருந்துவருகின்றன. மேலும் ஆராய்ந்தால் கடந்த ஏறத்தாழப்பத்தாண்டுகளாகச் செட்டிநாட்டு ஊர்களில், வெளிநாடுகள்—வெளி ஊர்களில் வாழும் நகரத்தார்கள், பழைய வீடுகளைப் புதுப்பித்தும் புதியனவாக வீடுகளை கட்டியும் வரும் தன்மை புலப்படுகின்றது. வெளியூர்களில் உள்ளோர் பற்பல விழாக் காலங்களின்போது தத்தம் ஊர்களுக்குச் சென்று வருவதாலும், ''பங்காளிகள் பங்கேற்பது'' எனும் நியதிமுறை மாறுபடாமல் இருப்பதாலும், திருமணத் தொடர்புகளாலும் செட்டியார்களிடையே உள்ள கட்டுக்கோப்பும் நியாயமுறைகளும், ஊர்ப்பற்றும் நிலைத்திருக்கும் தன்மை மாறுபடாதிருக்கின்றது.

இதற்கிடையே வெளிநாடுகளில் உள்ளோர்க்குச் செட்டிநாட்டுத்தொடர்பு இப்போதைக்குத் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதுபற்றி யாருமே ஐயுறமுடியாது. அதேபோல, அது சற்றுக் குறைவாகவே இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

கேளாத கடனும் கூடாத உறவும் பாழாகும் என்பது முதுமொழி. இவ்விரிந்த உலகின் பல்வேறு பகுதிகளுக்குமாகப் பரந்து கிடக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வருங்காலத்தில் ஏதாவது ஒரு காரணத்தால் செட்டிநாட்டிற்கு அடிக்கடி வாராது இருப்பார்களேயானால், அவர்களுக்குள்ள இருவழித் தொடர்புகள் அனைத்தும் விடுபட்டுப்போகும் நிலைமை உண்டாகும். இதனைத் தவிர்க்க வேண்டுமானால், உலகளாவிய நிலையில் செய்திக் கடிதம் ஒன்று அனைத்து நகரத்தார்க்கும் கிடைக்கும்படி செய்யவேண்டிய தேவை ஏற்படும். இவ்வழி ஒன்றுதான் காலத்திற்கு ஏற்புடையதாகவும் இருக்கும். இதன்வழிச் சமூகம் பிளவுபடாமல் திகழமுடியும் என்ற நம்பிக்கையும் கூடிவாழ விரும்புவோர்க்கு ஏற்படும்.

இனி நாட்டுக் கோட்டை நகரத்தார்களது வருங்காலம் எவ்வாறு இருக்கும் எனச் சிந்தித்துப் பார்ப்போம்.

அண்மைக் காலமாகக் குழந்தைகளுக்குப் பெயரிடும் பாணியிலும் ''அம்மா, அப்பா, அக்கா, மாமா'' போன்ற உறவு முறைகளைக் குறிப்பிடும் வழக்கிலும், ஆங்கில மொழிக்கு அதிக முக்கியத்துவங் கொடுக்கும் பாங்காலும், உடுத்தும் பாணியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களாலும் செட்டியார்களிடையே பெரியதொரு நாகரிக மாற்றம் ஏற்பட்டுள்ளது உண்மைதான். ஆயினுங்கூடத் ''தாம் ஒரு தனவைசிய நகரத்தார் என்ற உணர்விலோ ''தாம் இன்ன கோவிலைச் சார்ந்தவர்'' ''இன்ன ஊரைச் சேர்ந்தவர்'' என்ற பற்றிலோ ஒரு சிறிதும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. எனவே, இனி வருங்காலத்தில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் உலகின் எந்தவொரு நாட்டிலிருந்தாலும் இந்தச் சமூகத்தின் கட்டுக்கோப்பு இப்போதைக்குக் கலையாது என்பதை ஓரளவிற்காகவாவது துணிந்த முடிவாகக் கொள்ளலாம்.

ஆயினுங்கூடக், கலப்புத் திருமணங்கள் மிகுதியாகுமானல் எந்த ஒரு வகுப்பாருடைய அடையாளமும் இல்லாது போகுந்தான். திருமணத்தையொட்டிய மிகுதியான பொருளாதார எதிர்பார்ப்புக்களாலும், இயலாமையாலும் இத்தகைய கலப்புத் திருமணங்கள், ஆங்காங்கே சற்றே மிகுதியாவது போலத் தோன்றினாலுங்கூடப், புள்ளிவிவரப்படி நோக்கினால், இது சீர்குலைவை ஏற்படுத்திவிட்டது என்று இன்றைய நிலையில் கொள்ளுவதற்கில்லை. ஆனால், இந்நிலைமை மேன்மேலும் பெருகினால், அது எந்த அளவிற்கு இந்தச் சமூகத்தைச் சீர்குலைக்கும் என்பதை யாவராலும் ஓரளவிற்கு உணரமுடியுந்தான். அப்படியானால், பாடுவார்முத்தப்பச் செட்டியாரது வாக்குக்கு ஒப்ப, ''சங்கரஜாதியாக'' ஆகும் காலம் வந்துவிட்டது எனக் கொள்ள வேண்டி வரலாம், உலக நியதி இதுவானால் யார்தான் என்னசெய்யமுடியும்? நகரத்தார் வணங்கும் இறைவன் தொடர்ந்து அருள்பாலிப்பானாக.

(பின் குறிப்பு: சாலிவாகன சகாப்த ஆண்டிற்கும் கலியுக ஆண்டிற்கும் சமமான கிருஸ்த்துவ ஆண்டைக் கணக்கிட்டு. அதனையும் ஆங்காங்கே சேர்த்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்).

ஒன்பது கோவில்

இளையாத குடி, மாற்றூர், இரணியூர், சூரர்குடி,
களையாத நன்நேமம், கருதுஇலுப்பை, வேலர்குடி,
வளையாத பிள்ளையார், வாழ் மருதூர் வயிர வனூர்
திளையாத ஒன்பதுகோவில் திருவணிக மண்டலமே

— பாடுபவர் முத்தப்பர்
வணிக மண்டல சதகம்

சிங்கப்பூர் நகரத்தார் செந்தமிழ்ப்பணி

டாக்டர் சுப. திண்ணப்பன்
நன்யாங் தொழில் நுட்பப்பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்'' என்று உரைத்தார் திருவள்ளுவர். தமிழ்மறையாம் திருக்குறளைத் தரணிக்குத் தந்து வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையார் இட்ட கட்டளையைத் தலைமேற் கொண்டு நகரத்தார் பெருமக்கள் தாங்கள் திரைகடல் ஓடித்திரவியம் தேடிய நாடுகளில் எல்லாம் பலவகையான அறச்செயல்களைச் செய்தது மட்டுமன்றிச் சிவ நெறியையும் பரப்பினர் ; செந்தமிழ்ப் பணிகளும் செய்து சிறப்புற்று விளங்குகின்றனர். இந்த வகையில் நகரத்தார்கள் சிங்கப்பூரில் செய்த நற்றமிழ்ப்பணி பற்றிக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தென்கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூர் சின்னஞ்சிறிய தீவு. இயற்கை வளத்தை நம்பி இராது, மக்கள் வளத்தை மட்டுமே நம்பி முன்னேறி இருக்கும் நாடு. பலமொழியினர், பல இனத்தவர், பல சமயத்தினர் வாழும் நாடு. இந்நாட்டின் மக்கள் தொகை 2.7 மில்லியன். இவர்களில் சீனர் 77.7 விழுக்காட்டினர் ; மலாய்க்காரர் 14.1 விழுக்காட்டினர் ; இந்தியர் 7.1 விழுக்காட்டினர், இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழரே ஆவர் சிங்கப்பூரின் அதிகாரத்துவ மொழிகளாகச் சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் விளங்குகின்றன. சிங்கப்பூரில் தேசிய மொழி மலாய் மொழி, அரசின் நிருவாகமொழியாக ஆங்கிலம் அமைந்துள்ளது.

1819இல்தான் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த ஸர் ஸ்டாம் போர்டு ராபிள்ஸ் சிங்கப்பூருக்கு வந்து ஆங்கிலேயர் ஆட்சியை நிறுவிச் சிங்கப்பூர் வளர்ச்சிக்கு வித்திட்டார். ''மலேயாவின் தோற்றம்'' என்னும் வரலாற்று நூலைத் தமிழில் எழுதிய சுங்குரும்பை பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்களின் கருத்துப்படி, சிங்கப்பூருக்கு நகரத்தார்கள் 1838இல் குடியேறியதாக அறிய முடிகிறது. நகரத்தார்கள் தங்களுக்குரிய வங்கித் தொழிலை—''கொடுத்து வாங்கும் தொழிலை'' மார்க்கெட் ஸ்திரிட்டில் மிகச் சிறப்பாக நடத்தி வந்தனர். அங்குப் பல கிட்டங்கிகள் இருந்தன. டாங்க் (Tank) ரோட்டிலுள்ள தண்டாயுதபாணி கோயிலை நகரத்தார்கள் 1859இல் கட்டியுள்ளதாக அதன் கல்வெட்டுக் கூறுகிறது. நகரத்தார்கள் சித்தி விநாயகர் கோயில் ஒன்றும் கட்டி உள்ளனர். தைப்பூச விழாவை இவர்கள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தண்டாயுதபாணி கோயிலில் சிவன் கோயிலும் தனியே உள்ளது. இதற்கு ஆகம நெறிப்படி பூசைகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் (1983) தண்டாயுதபாணி கோயிலுக்கு ராஜகோபுரம் கட்டிக் குடமுழுக்குச் செய்தனர். செட்டியார்கள் திருமணமண்டபம் ஒன்றும் தனியே உள்ளது. இப்போது சிங்கப்பூரில் நகரத்தார்கள் வங்கித் தொழில் மட்டுமன்றி ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். மேலும் பலர் வங்கிகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் தனியார் தொழில் நிறுவனங்களிலும் கல்வி நிலையங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். ஏறத்தாழ 300 குடும்பத்தினர்கள் இப்போது சிங்கப்பூரில் இருக்கின்றனர் என்று கூறலாம். 1928 முதல் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கம் டாங்க் ரோட்டில் இயங்கி வருகின்றது. சிங்கப்பூரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நகரத்தார்கள் ஒருவகையில் உறுதுணையாக இருந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. சிங்கப்பூரில் சைவமும் தமிழும் தழைத்து வளர்ச்சி அடைந்ததற்கும் நகரத்தார்கள் பலவகையில் பங்காற்றியுள்ளார்கள் என்பதையும் யாரும் மறைக்க முடியாது.

கோயில் வழி

நகரத்தார்கள் கோயில் வழிக் குடியினர் என்று பாராட்டுவார் குன்றக்குடிஅடிகளார். சிங்கப்பூரில் நகரத்தார்கள் தாங்கள் எழுப்பிய தண்டாயுதபாணி திருக்கோயில் வழிப் பல வகைத் தமிழ்ப்பணி செய்து வருகின்றனர். மலேசியா சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்கு முன்னோடி நூலாக-முதன் நூலாகத் திகழ்வது யாழ்ப்பாணம் சதாசிவ பண்டிதர் என்பவர் 1887இல் இயற்றி வெளியிட்ட ''சிங்கை நகர் அந்தாதி'' என்பதாம். இந்த நூல் சிங்கப்பூர் டாங்ரோட்டில் கோயில் கொண்டிருக்கும் தண்டாயுதபாணியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூலாகும் என்றால் நகரத்தார் கண்ட முருகன் பெருமையைக் கூற வேண்டுமாஎன்ன? இப்பெருமான்தான் மலேசிய மண்ணில் தமிழ் இலக்கிய விதை ஊன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறான். இந்நூலில் ரதபந்தம், நாகபந்தம் முதலிய சொல்லலங்காரக் கவிகளும் உள்ளன. இந்நூல் முழுவதையும் சிங்கப்பூர் நகரத்தார்கள் 1983இல் வெளியிட்ட தண்டாயுதபாணி கோயில் குடமுழுக்கு விழா மலரில் வெளியிட்டுள்ளனர். அம்மலர் சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார், மெ. சிதம்பரனார், வச்சிரவேல் முதலியார் ஆகிய தமிழ் அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளைத் தாங்கி வந்தது.

சிங்கைக்கு வருகின்ற தமிழறிஞர் பெருமக்களைக் கோயிலுக்கு வரச்செய்து அவர்களுக்கு நல்விருந்தோம்பிச் சிறப்புச் செய்வதை நகரத்தார்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். அவர்களைக் கொண்டு கோயிலில் சமயச் சொற்பொழிவுகளும் இலக்கியச் சொற்பொழிவுகளும் அவ்வப்போது நடத்திச் சிங்கைத் தமிழ் மக்கள் செந்தமிழ் நலம் நுகருமாறு செய்வதில் நகரத்தார்கள் பெருமகிழ்ச்சி அடைந்து வருகின்றனர். 1965 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகை அளித்த தமிழ் அறிஞர்களை வரவேற்று விருந்தோம்பி மகிழ்ந்தனர். மேலும் அந்த ஆராய்ச்சி மாநாட்டிற்கு நன்கொடையாக ஒரு கணிசமான தொகையைச் சிங்கப்பூர் நகரத்தார்கள் வழங்கினர். 1983இல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவினை ஒட்டிச் சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார், டாக்டர் சரசுவதி இராமநாதன், செஞ்சொற்கொண்டல் கீரன், திருக்குறள் முனுசாமி ஆகியோர்களின் சமய இலக்கியத் தொடர் சொற்பொழிவுகள் நடைபெற ஏற்பாடு செய்தனர். வில்லிபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், கந்தபுராணம் ஆகிய இலக்கிய இன்பம் நுகரவழி செய்தனர். உள்ளூர்க் கவிஞர்களைக் கொண்டு ஒரு கவியரங்கம் நடத்தினர்.

நகரத்தார் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் இலட்சார்ச்சனை, தைப்பூசம் ஆகிய விழாக்களை ஒட்டி இறைவழிபாட்டுப் பாடல்கள் தொகுப்பு அடங்கிய இலவச நூல்கள் வெளியிடப்படுகின்றன. காரைக்குடி நகர சபைத் தலைவராக இருந்த அருணாசலம் செட்டியார் ''பெரியபுராணப் பேரமுதம்'' என்னும் நூல் இலவச வெளியீடு செய்துள்ளார்.

சிங்கப்பூரில் தமிழருச்சனையைத் தொடங்கி வைத்த பெருமை நகரத்தார்களையே சாரும். தண்டாயுதபாணி கோயிலில் நாள்தோறும் நடைபெறும் பூசைகளிலும், கார்த்திகை, முதலிய சிறப்பு வழிபாட்டு நாட்களிலும் தமிழ் அருச்சனை 1983 முதல் நடைபெற்று வருகின்றது. இதனைத் தொடர்ந்து சிங்கப்பூரில் சௌத்பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோயில், டெப்போ ரோடு உருத்திர காளியம்மன் கோயில் ஆகிய இடங்களிலும் தமிழருச்சனை நடைபெற்று வருகின்றது.

திருமுறை வழி :-

பக்தி இலக்கியமாகிய திருமுறைகளைப் பரப்பும் பணியில் நகரத்தார்கள் செய்துவரும் பணி பாராட்டுக்குரியது. நகரத்தார்களுக்குரிய தண்டாயுதபாணி கோயிலில் திருமுறைகளை நாள்தோறும் ஓதுவதற்காகக் காரைக்குடி முத்து அரு.சா.அரு. காவேரி ஆச்சிபெயரால் ஓர் அறக்கட்டளை உள்ளது. இதன்வழிச் சென்ற 60 ஆண்டுகளாக நல்ல திருமுறை இசைவாணர்களாகிய ஓதுவார்பெருமக்களைக் கொண்டு மாலையில் ஒருமணி நேரம் திருமுறைப்பாடல்கள் பாடும்பணி — முருகப் பெருமான் திருமுன்னர் ஓதும்பணி — நடைபெற்று வருகின்றது. இப்போது இங்கு தேவார வகுப்புகளும் நடை

பெற்று வருகின்றன. மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவைப் பாராயணமும் கூட்டுப் பிரார்த்தனையாகக் காலையில் ஓதப்பெறுகின்றன. பண்சுமந்த பைந்தமிழ்த் திருமுறைப் பாடல்களைப் பரப்பும் பணியிலும் சிங்கை நகரத்தார்கள் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர். இப்பணி இந்து அறநிலைய வாரியத்தைச் சார்ந்த கோயில்களிலும் வீரமா காளியம்மன் கோயில், வடபத்திர காளியம்மன் கோயில் ஆகியவற்றிலும் இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்து அறநிலைய வாரியத்தைச் சேர்ந்த ஆர்ச்சர்டு ரோடு சிவன் கோயிலில் மேலாண்மைக் குழுத் தலைவராகப் பணியாற்றிய திரு ச. தெய்வநாயகம் அவர்கள் சிங்கப்பூர்ச் சைவப் பெருமக்கள் வழிபாட்டின் போது பஞ்சபுராணம் பாடுவதற்குதவும் வகையில் பஞ்சபுராணப் பாடல்களைக் கையடக்கப் பதிப்பாக வெளியிட வழிசெய்தார்கள். மேலும் திருமுறைப் பாடல்களை ஓர் ஒலிப்பதிவு நாடா வழி வெளியிட்டு விற்க ஆவன செய்தார்கள். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'. என்னும் அப்பரடிகளின் திருவாக்கைக் கோயிலின் இலட்சிய முழக்கமாக ஆக்கினார்கள். ருத்திர காளியம்மன் கோயில் மேலாண்மைக் குழுத் தலைவராகப் பணியாற்றிடும் பேராசிரியர் டாக்டர் ராம. கருணாநிதி அவர்கள் தங்கள் கோயில் பூசை நேரங்களில் தாமே பஞ்சபுராணம் பாடும் பழக்கமுடையவர்கள். அவர்கள் சிங்கப்பூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் திருமுறை மாநாட்டிற்குச் செய்துவரும் உதவிகள் பல. சிங்கப்பூரில் இதுவரை 12 திருமுறை மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இந்தத் திருமுறை மாநாட்டுப் பணிகளிலும் நகரத்தார்கள் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இக்கட்டுரையாளர் அதன் ஆலோசகராகவும் நூல்கள் கையேடுகள், ஒலி நாடாக்கள் வெளியீட்டுக்குழுத் தலைவராகவும் தொடக்க முதல் இருந்து வருகிறார். சிங்கையில் பல இடங்களில் சமயச் சொற்பொழிவுகளும் இலக்கியச் சொற்பொழிவுகளும் செய்து வருகிறார். திருமுறைகளைப் பரப்பும் பணியில் ஆர்வத்துடன் முன்னிற்பவர் திருவாளர் மு. சங்கரலிங்கம். திருமுறைமாநாட்டின் துணைத்தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றி மாணவர்களுக்குத் திருமுறை ஓதும் போட்டி, பேச்சுப் போட்டி நடத்தி வருகின்றார். திருமுறைமாநாடு தொடர்ந்து சிங்கையில் இடையறாது நடைபெற வைப்பு நிதியை 5000 வெள்ளி நன்கொடையாக அளித்துத் தொடங்கி வைத்த பெருமை திரு ப. அருணாசலம் அவர்களையே சாரும். டாக்டர் கருணாநிதி அவர்களும் 5000 வெள்ளி இந்நிதிக்குக் நன்கொடை அளித்துள்ளார்கள். மற்ற நகரத்தார்களும் இந்தநிதிக்குக் கணிசமான நன்கொடை அளித்துள்ளார்கள். திருமுறைமாநாடு சிறப்பாக மூன்று நாட்கள் நடக்கத் தங்கள் திருமண மண்டபத்தைக் கொடுத்துதவி வருகின்றனர் தண்டாயுதபாணி கோயில் நிருவாகத்தினர்.

திருமுறை ஆசிரியர்களாகிய நால்வர் பெருமக்கள், சேக்கிழார் ஆகியோர்களின் குருபூசை விழாக்களும் தண்டாயுதபாணி கோயிலில் நடைபெறுகின்றன. இவ்விழாக்களின் போது அடியார்களின் வாழ்க்கை வரலாற்றையும் திருவருட்பாடல்களையும் ஓதுவார்களைக் கொண்டு படிக்கச் செய்வது மரபாக இருந்து வருகின்றது. மேலும் இப்போது இராமாயணம் முழுதும் படிக்கும் நிகழ்ச்சி கோயிலில் ஆண்டு தோறும் புரட்டாசியில் நடைபெறுகின்றது.

திருமுறையின் சாரமாகத் திகழும் சைவ சித்தாந்தத்துறை ஒன்று மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் ஏற்படுத்தும் பணிக்கு நகரத்தார்கள் நன்கொடை வழங்கியுள்ளனர்.

வணிகநிலைய வழி

வங்கித் தொழில் நிலையிலிருந்து கொண்டு தமிழ்ப்பணி புரிந்த நகரத்தார் பெருமக்களில் தலைமையானவர்கள் இருவர். ஒருவர் அருள் நெறிச் செல்வர் வயி. சண்முகம் செட்டியார் ஜெ.பி. அவர்கள். மற்றவர் காரைக்குடி இராம. பெரியகருப்பனார் அவர்கள். வயி.சண்முகனார் அவர்கள் சிங்கைக்கு வருகை தந்த தமிழறிஞர்களை எல்லாம் விருந்தோம்பிய பெருந்தகையாளர். தமிழுக்கு ஊறு நேர்ந்த போதெல்லாம் 'தமிழ்முரசு' ஆசிரியர் தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களுடன் தோளோடு தோள் நின்று தமிழ்ப்பணிக்கு உறுதுணையாக இருந்த பெருமகனார். இவர் அருள்நெறிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டியவர்.

இராமபெரி அவர்கள் காரைக்குடி இராம சாமி தமிழ்க் கல்லூரியை நிறுவிய செந்தமிழ்ச் செல்வர். சிங்கை வந்த தமிழறிஞர்களை நல்விருந்தோம்பிச் சிறப்பளித்து மகிழ்ந்த செம்மல். 'சிங்கப்பூரில் தமிழ் நலம், தமிழர் நலம் என்றால் எல்லாருடைய எண்ணத்திலும் முன்நிற்பவர்; முதலிடம் பெறுபவர் இவர்' என்பர் சோமலெ.

'வயிச', 'இராமபெரி' ஆகிய இருவரை யும் செந்தமிழ்ப் பணிசெய்வதில் இரட்டையராக விளங்கிய பெருமக்கள் என்று பாராட்டுகிறார் சோமலெ. சிங்கப்பூர்த் தமிழர் இயக்கம், சிங்கப் பூர்த் தமிழர் சீர்திருத்தச் சங்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இவர்கள் செய்த தமிழ்ப்பணி நீள நினைந்து போற்று தற்குரியது. இவர்களின் பெருமுயற்சியால் மலயாப்பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை நிறுவுவதற்குப் பெருந்தொகையைச் சிங்கை நகரத்தார்கள் வழங்கினர்.

தமிழ்க்கல்விவழி

தமிழ்க்கல்வி என்னும் தொடரைத் தமிழ் மொழிக்கல்வி, தமிழ்வழிக்கல்வி, தமிழ்பற்றிய கல்வி என மூவகையாக நோக்கலாம். இம் மூவகை நிலையிலும் தமிழ்ப் பணியாற்றி யவர்கள் சிங்கை வாழ் நகாத்தார்கள். தமிழ் மொழிக்கல்வி என்பது தமிழ்மொழியைப் பயிற்றுகின்ற கல்வியாகும். சிங்கப்பூர் அரசின் இருமொழிக் கொள்கையினால் இப்போது சிங்கப்பூரில் தொடக்கநிலையில் சுமார் 10 ஆயிரம் மாணவர்களும், உயர்நிலையில் சுமார் 5 ஆயிரம் மாணவர்களும், புகுமுக வகுப்பு நிலையில் சுமார், ஆயிரம் மாணவர் களும் தமிழ் பயில்கின்றனர். இவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் தொகை சுமார் 460. இந்த ஆசிரியர்களை உருவாக்கும் பணி சிங்கையில் தொடக்கத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குரியதாக இருந்தது. பிறகு கல்விக் கழகத்திற்குரியதாயிற்று. இப்போது 1991 முதல் நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தேசியக் கல்விக்கழகத் திற்கு உரியதாகவுள்ளது.

இந்நிறுவனங்களின் தமிழ்த்துறை விரி வுரையாளர்களாக நகரத்தார் அறிஞர்கள் பணி யாற்றியுள்ளார்கள். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்விக்கழகம் ஆகியவற்றின் தமிழ்த் துறைத்தலைவராகப் பல ஆண்டுகள் பணி யாற்றிய திரு ச. தெய்வநாயகம் அவர்கள் சிங்கையில் தமிழாசிரியர்கள் பலரை உருவாக் கிய பெருமகனார் ஆவார். பணிக்கு முந்திய பயிற்சி, பணியிடைப் பயிற்சி ஆகிவற்றின் வாயி லாகப் பலருக்கு ஆசிரியப் பயிற்சி அளித்தவர் இப்போது சிங்கையில் தமிழாசிரியராகப் பணி யாற்றுபவர்களில் மிகுதியானவர்கள் இவரால் உருவாக்கப்பட்டவர்களே. இவர் 1971–ஆம் ஆண்டில் தமிழ்கற்றல் -கற்பித்தல் தொடர் பாகக் கருத்தரங்கு ஒன்றினைக் கல்வி அமைச்சுடன் சேர்ந்து நடத்தினார். 1972–ஆம் ஆண்டில் இலக்கியக்கலை பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தினார். மேலும் தமிழ் இலக்கியக் கலாசார மன்றம் என ஒன்றை நிறுவி அதன் வழித் தமிழாசிரியராக வருவோர் இலக்கிய நலம் பாராட்டவும், படைப்பாற்றலைப் பெருக் கிக் கொள்ளவும் வகை செய்தார். இவர் பணியைப் பாராட்டிச் சிங்கப்பூர் அரசு இவருக்கு விருது அளித்துப் பாராட்டியுள்ளது.

கல்விக் கழகத்தில் 1982-முதல் இக்கட்டுரை யாளர் பணியாற்றத் தொடங்கினார். 1987 இல் திரு ச. தெய்வநாயகம் அவர்கள் ஒய்வு பெற்ற பின் தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றத் தலைப்பட்டார். இப்போது தேசியக் கல்விக் கழகத்தின்தமிழ்த்துறைத் தலைவராகப் பணி யாற்றி வருகிறார். சிங்கையில் தமிழ் மாணவர் களின் உச்சரிப்புத் திறனை மேம்படுத்துவதற் காகச் ''செந்தமிழும் நாப்பழக்கம்'' என்னும் நூல்களும், ஆசிரியர்கையேடும், ஒலிநாடாக் களும், ஒளிஊடுருவித்தாள்களும் உருவாக் கினார். திருவாளர்கள் ச. தெய்வநாயகம், நா. கோவிந்தசாமி ஆகியோருடன் சேர்ந்து தமிழ் வரிவடிவப் பயிற்சிக் கையேடு ஒன்று வெளியிட்டார்; தமிழாசிரியர் தரத்தை மேம் படுத்தும் பயிற்சி வகுப்புகள் உருவாக்கிடும்பணி யில் உதவினார். சிங்கப்பூர்ப்பாடத்திட்ட மேம் பாட்டுக் கழகத்தின் பாடநூலாக்கக் குழுக்கள், பயிற்று கருவிகள் உருவாக்கக் குழுக்களுக்கு மதியுரைஞராகப்பணியாற்றினார். தமிழ்கற்றல், கற்பித்தல் ஆய்வு தழைக்கவும் உறுதுணையாக இருந்தார். தமிழில் மேனிலைப்பட்டங்கள் பெற வழிகாட்டியாகப் பணியாற்றியுள்ளார். இவரின் தூண்டுதலாலும் வழிகாட்டுதலினாலும் சிங்கப்பூர்த்தமிழாசிரியர்கள் அனைத்துலகச்

கருத்தரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் படித்தனர். மேலும் அண்மையில் நடைபெற்ற முதல் உலகத்தமிழாசிரியர் மாநாட்டின் மதியுரைஞராகவும் இவர் பணியாற்றினார். தமிழ்க்கல்வியில் சிங்கை அடைந்த முன்னேற்றத்தை அமெரிக்கா, இங்கிலாந்து, தமிழகம், மொரிஷியஸ், மலேசியா முதலிய நாடுகளில் பரப்பியவர். அண்மையில் டாக்டர் இலக்குமி மீனாட்சி சுந்தரம் தேசியக்கல்விக் கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

தமிழ்ப்பாட நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் திருவாளர்கள் மு. சங்கரலிங்கமும் திரு. நா. கருப்பையாவும் பெரும்பங்காற்றினர்.

சிங்கைத் தமிழ்க்கல்வி உலகில் சிறப்பிடம் பெறுபவர்களில் ஒருவர் காலஞ்சென்ற நா. கருப்பையா ''இவர் 1957 முதல் 1980 வரை 23 ஆண்டுகள் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சரின் தலைமைச் செயலகத்தில் தமிழ்ப்பள்ளிகளின் மேலாய்வாளராகவும், தமிழ்க் கல்வி வளர்ச்சி அதிகாரியாகவும் தமிழ்ப்பாடத்திட்ட மேம்பாட்டு அதிகாரியாகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். அதன் பின்னர்ச் சிங்கப்பூர் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1972இல் ஜப்பான் சென்று வந்தார். தமிழில் தொடக்க நிலைப் பள்ளிகளுக்கான, சிங்கையின் வரலாறு, வாழ்க்கை நலக்கல்வி ஆகிய பாட நூல்களின் தொடர் வெளியாவதற்குப் பொறுப்பாக இருந்தார். பாடத்திட்டம் உருவாவதற்கும் தமிழாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களைப் போலச் சமநிலை ஊதியம் பெறுவதற்கும் வழி செய்தார்.

சிங்கையில் தமிழ் ஆசிரியர் பயிற்சி தொடங்குவதற்கும் ஆங்கிலப்பள்ளிகளிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் தமிழ் மொழி கற்பிப்பதற்கும் வலுவான அடித்தளம் அமைத்தவர் இவரே. (சோமலெ : 1984) இவரது தமிழ்ச்சேவையைப் பாராட்டிச் சிங்கப்பூர் அரசாங்கம் இவருக்கு விருது வழங்கியுள்ளது.

தமிழ்ப்பாடத்திட்ட உருவாக்கப் பணியில் மேற்கண்டோருடன் மெ.திரு. அரசு. டாக்டர் ராம.கருணாநிதி ஆகியோரும் ஈடுபட்டுள்ளனர். தமிழ் மொழி பயிற்றும் ஆசிரியர்களாக நா.சிதம்பரம், மு.சங்கரலிங்கம், சீனி நாகம்மை, நாரா. கல்யாணி, செ. மங்கையர்கரசி, மீனாள் தேவராசன் ஆகியோர் பணியாற்றுகின்றனர். சிங்கப்பூரில் மலயாப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் செயலாளராகத் திரு. ப. அருணாசலம் பணியாற்றினார்.

தமிழ் வழிக் கல்வி என்னும் நிலையில் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களைத் தமிழ்வழிப் பயிற்றும்ஆசிரியர்களுக்குப் பயிற்சி நல்கும் பணியில் திருவாளர்கள் எஸ். தியாகராசா, மு. சங்கரலிங்கம், ச. தெய்வநாயகம் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இந்து அறநிலை வாரியம் நடத்தும் சரஸ்வதி பாலர் பள்ளிக்குப் பொறுப்பாளராக திரு. க. கண்ணப்பன் பணியாற்றுகிறார். சிங்கப்பூரில் தமிழ் கற்பிக்கும் ஒரே பாலர்பள்ளி இப்பள்ளி ஆகும்.

தமிழ் பற்றிய கல்வி தமிழ் இலக்கியம், பண்பாடு, கலை ஆகியவற்றைப் பரப்பும் பணியாகும். இப்பணியில் மேற் குறிப்பிடப்பட்ட பலரும் பணி செய்துள்ளனர்.

கணிளி வழித்தமிழ் கற்பிக்கும் பணிக்குதவியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் இக் கட்டுரையாளர், பேராசிரியர் ரகுபதி சுப்பிரமணியம், அரு. சுப்பையா ஆகியோர்.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை வழித் தமிழ்மொழி இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தவும் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் உதவியவர்கள் திரு. கா. சண்முகம் (இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்) பழ. சுந்தரராசு முதலியோர்.

திருக்குறள் விழா ஏற்பாட்டுக் குழுவில் இடம் பெற்றுத் திருக்குறள் சிறப்பைப் பரப்பியவர்களில் திருவாளர்கள் முத்துப் பழநியப்பன், PSP. சண்முகம், வழக்கறிஞர் சித. பெரிய கருப்பன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இலக்கிய வட்டம் என ஒன்றைத் தொடங்கி மாதந்தோறும் இலக்கிய நலன் நுகர்வுக்கு வழி வகுக்கும் முயற்சியிலும் நகரத்தார்கள் ஈடுபட்டுள்ளனர்.

புலவர் ராமசாமி கவிதைகள் எழுதுபவர். சிற்றிலக்கியப் புலமை மிக்கவர். புதுக்கவிதை எழுதுபவர்களும் சிலர் உள்ளனர். மரபுக் கவிதை எழுதும் பெண்களும் உள்ளனர். மீனா சேது நாராயணன் இவர்களுள் ஒருவர். மேலைச்சிவ புரிச் செந்தமிழ்க் கல்லூரிக் கட்டிட நிதிக்குக் கணிசமான நன்கொடை சிங்கை நகரத்தார்கள் வழங்கி உள்ளனர்.

மொழி பெயர்ப்பு வழி

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல்'' தமிழுக்கு ஆக்க மூட்டும் பணி. இப்பணி வழிச் சிங்கையில் தமிழ் சிறக்கப் பாடுபட்டவர்களில் நாடாளுமன்ற மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றிய எஸ். நாராயணன், வானொலியில் பணியாற்றிய மெ. திரு. அரசு, மு. சங்கரலிங்கனார். இப்போது பணியாற்றும் மா. கண்ணப்பன், தமிழ் முரசின் துணையாசிரியராகப் பணியாற்றிய மெ. சிதம்பரனார், வங்கித் துறையில் பணியாற்றும் மு. முத்துப்பழநிப்பன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். மேடைச் சொற்பொழிவுகளை உடனுக்குடன் மொழி பெயர்ப்பதில் மேன்மை கண்டு விளங்குபவர் நா. சுப்பிரமணியம். இவர்கள் முயற்சியால் நல்ல கலைச் சொல் உருவாக்கம் நடைபெற்றுள்ளது. கலைச் சொல் உருவாக்கக் குழுக்களில் பணிபுரிகின்ற நகரத்தார்களும் உள்ளனர்.

அறிவியல் தமிழ் வழி :

அண்மையில் அறிவியல் தமிழ் என ஒன்று உருவாகி வருவதை நாம் அறிவோம். இதனை வளர்க்கும் பணியிலும் நகரத்தார்களுக்குப்பங்குண்டு. வானொலியில் 'அறிவியல் உலகம்' நிகழ்ச்சிப்பகுதிகளில் அறிவியல் குறிப்புகளைத் தமிழாக்கித் தருபவர்கள் திரு.சங்கரலிங்கனார், தியாகராசன், தே.மீனாள் ஆகியோர். டாக்டர் இளஞ்சேரன், டாக்டர். வெள்ளையப்பன் ஆகியோர் மருத்துவ ஆலோசனைக் குறிப்புகளை வானொலி வாயிலாக நல்ல தமிழில் வழங்கி வருகின்றனர். பொறியியலாளர் நாரா. நாராயணன் பொறியியல் கருத்துகளை வானொலி, தொலைக்காட்சிப் பேட்டிகளில் தருவார்.

வானொலி, தொலைக்காட்சி வழி :

சிங்கையில் தமிழ் வளர்க்கும் பணியில் சிறந்து நிற்பது வானொலியும் தமிழ் முரசு நாளிதழுமே. வானொலி வாயிலாகத் தமிழ் பரப்பும் பணியில் ஈடுபட்டவர்களில் தலையாயவர் மெ. திரு. அரசு. இவர் எம்.ஏ. பட்டம் பெற்றவர். இவர் நாள்தோறும் ஒரு குறள் கூறித் தொடங்கும் பணியை வானொலியில் அறிமுகப்படுத்தினார். திருக்குறள் விளக்கக் கட்டுரைகள் பல தமிழ் நேசனில் எழுதினார். இலக்கிய விருந்து, இலக்கிய நாடகங்கள் பலவற்றை எழுதி ஒலிபரப்பினார். சிங்கப்பூர்ச் சிறுகதைகள் பற்றித் திறனாய்வு செய்துள்ளார். மலேயாவில் வடமொழித்துறை தொடங்கப் பரிந்துரைக்கப்பட்ட போது அதனை எதிர்த்துத் தமிழ்த்துறை தொடங்குவதற்கு முதற் குரல் எழுப்பித் தமிழர்களைக் கிளர்ந்தெழச் செய்தார் (சோம. லெ). சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபட்டார். இவர் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழகப் புலவர்குழு பதக்கமும் பாராட்டுதலும் வழங்கிற்று.

செய்திப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய திரு. சங்கரலிங்கம், நடப்பு விவகாரப் பிரிவில் பணியாற்றும் மா. கண்ணப்பன் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சோம. நாராயணன், தொலைக்காட்சியில் நிகழ்ச்சி உருவாக்கப் பணியாற்றும் மீனா முத்து கிருஷ்ணன் ஆகியோர் தமிழ்ப்பணியும் பாராட்டுக்குரியது. நகரத்தார் இளைஞர்கள் சிலர் பகுதி நேர நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணியாற்றுகின்றனர். வானொலியில் அறிவிப்பாளராகப் பணியாற்றிய நகரத்தார் மரபு முதற் பெண்மணி அருண் நாச்சம்மை ஆச்சிஆவார். இக்கட்டுரையாளரின் 'எல்லோருக்கும் ஏற்ற தமிழ்' 'எளிய தமிழ்' என்னும் மூன்று ஆண்டு, ஐந்து ஆண்டுத் தொடர் நிகழ்ச்சிகள் தமிழ்மொழியறிவைச் சிங்கைத் தமிழர்க்கு ஊட்ட உதவின. திரு ச. தெய்வநாயகம் அக்காலத்தில் வானொலியில் இலக்கிய நாடகங்கள் எழுதினார்.

செய்தித்தாள் வழி :

சிங்கையில் தமிழ்வேள் கோ. சாரங்கபாணி அவர்களினால் தொடங்கப் பெற்ற தமிழ்

முரசு நாளிதழ், சிங்கையில் தமிழ் பரப்புப் பணியில் தலையாயதாய்த் திகழ்வது. இதன் துணையாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர் மெ. சிதம்பரனார். சிங்கப்பூரில் வாழ்ந்த சிறந்த தமிழ் அறிஞர், ஆய்வாளர் ; இலக்கணப் பெரும்புலவர் ; நல்ல மொழி பெயர்ப்பாளர் ; பல தமிழ்ச் சொற்களை உருவாக்கியவர். உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரைகள் படைத்தவர். தமிழ்முரசின் துணையாசிரியராக 1954 முதல் 1962 வரை முருகு-சுப்பிரமணியன் பணியாற்றினார். நல்ல தமிழ் நடையை உருவாக்கியவர் ; சிங்கப்பூரில் பல படைப்பிலக்கிய வாதிகள் உருவாக வழி வகுத்தவர் ; கதைப் போட்டி, கவிதைப் போட்டிகளை நடத்தியவர். மேலும் வானொலி வாயிலாக இலக்கிய உரைகளை நிகழ்த்தியவர். அண்மையில் மீனாள் தேவராசன் தமிழ் முரசில் சிறிதுகாலம் பணியாற்றினார்.

அரசியல் வழி :

அரசியல் சார்ந்துநின்று நாடாளுமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றியவர் காலஞ்சென்ற செல்லப்பா ராமசாமி. இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் திரு. கா. சண்முகம். இவர்கள் நாடாளுமன்றத்தில் தமிழ்மொழி ஒலிக்கக் காரணமாக இருந்தவர்கள்; சில வேளைகளில் தம் உரைகளைத் தமிழில் நிகழ்த்தியவர்கள். 1963இல் பொத்தோங் பாசிர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய திரு. செல்லப்பா ராமசாமி அவர்களின் பரிந்துரையினால் சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் கல்வி அமைச்சோடு தமிழாசிரியர் சம்பளம், தொழில் நிலைமை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. கல்வி அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்திய குழுவுக்கு உறுதுணையாகச் செல்லப்பா ராமசாமியும் சென்றார். இதனால் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் தேறிய பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு 'நார்மல்' பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பளத்திட்டமும் செகண்ட்ரி கிரேட் ஆசிரியர்களுக்குப் புதிய சம்பளத்திட்டமும் கல்வி அமைச்சால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. புதிய சம்பளத்திட்டத்தின் பயனை அடையும் பொருட்டு 1964-65 ஆகிய ஆண்டுகளில் உயர்நிலை நான்கு வகுப்புத் தேர்வுக்கு ஆசிரியர்களைத் தயார் செய்வதற்குத் தமிழாசிரியர் சங்கம் வகுப்பு நடத்தியது. இவ்வகுப்பில் ஆசிரியர்களாகத் திருவாளர் மு. சங்கரலிங்கம், தியாகராசன் முதலியோர் பணியாற்றினர்.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் மதியுரைஞராகத் திரு. செல்லப்பா இராமசாமி 1964 ஒட்டிய காலப்பகுதியில் பணியாற்றித் தமிழாசிரியர்கள் சம்பள உயர்வு, நிரந்தரச் சேவை பெறப் பெரிதும் பாடுபட்டார். (வீராசாமி : 1992)

சமூக அமைப்புகள் வழி :

தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம், தமிழர் பேரவை, சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றம் முதலிய சமூக அமைப்புகளின் வழிச் சார்ந்து நின்று தமிழ்ப்பணியாற்றும் நகரத்தார்கள் சிலர் உள்ளனர். திரு. கண. கண்ணப்பன் இந்து அறநிலைய வாரியத்தின் வழிநின்று கல்விக் குழுவின் தலைவராகப் பணியாற்றுகிறார். சரஸ்வதி பாலர்பள்ளி வாயிலாகத் தமிழ் பரவுவதற்குப் பல வழிவகைகளைச் செய்து வருகிறார். இவரும் கட்டுரையாளரும் சிங்கப்பூர் உயர்நிலைக் கல்வி இந்து சமய நூல்கள் உருவாக்கும் பணிக்கு உதவினர். சிங்கப்பூர் போதை புழங்கிகளின் புனர் வாழ்வுச் சங்கத்தில் திரு. ராம.கருணாநிதி, திரு. நாரா நாராயணன் தலைவர்களாகப் பணியாற்றி அதன் வழித்தமிழ் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துதவினர்.

கலை நிகழ்ச்சி வழி :

கலை நிகழ்ச்சிகள் வழிக் கன்னித் தமிழ் வளர்க்கும் பணியிலும் நகரத்தார்கள் ஈடுபட்டுள்ளனர். பல ஆண்டுகளுக்கு முன் அருண் மகிழ்நன் முன்னின்று இந்தியக்கலை விழா நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தார். மக்கள் சமூக இந்தியர் நற்பணிக் குழுக்களின் சார்பில் இன்னும் பலர் கலைநிகழ்ச்சி வழித் தமிழ் வளர்க்கின்றனர். இவர்களில் நாரா.நாராயணன், கரு.பழநியப்பன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். நகரத்தார் இளையர்கள் ஆண்டுதோறும் கலை நிகழ்ச்சி நடத்

துவர். உமா கண்ணப்பன் பரத நாட்டிய வழிச் சிங்கையில் தமிழ்க்கலை பரப்பும் நங்கையா வார். இசை, துணைக்கருவி, பேச்சுப் போட்டி, கவிதை எழுதுதல் வாயிலாக இளையர்கள் பலர் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளனர்.

சிங்கையில் நகரத்தார்கள் கோவில் வழியும் திருமுறை வழியும், வணிக நிலைய வழியும், தமிழ்க்கல்வி வழியும், மொழி பெயர்ப்பு வழியும், அறிவியல் தமிழ் வழியும், வானொலி தொலைக் காட்சி வழியும், செய்தித்தாள் வழியும், அரசி யல் வழியும், சமூக அமைப்பின் வழியும், கலைநிகழ்ச்சிகள் வழியும் தமிழ்ப் பணியாற்றி வரும்தகைமையை இக்கட்டுரையில் கண்டோம்.

வாழ்க, வளர்க சிங்கை நகரத்தார் தமிழ்ப்பணி!

துணை நூல்கள்

1. சோமலெ, செட்டிநாடும் தமிழும் சென்னை : வானதிபதிப்பகம் 1984.
2. பெ. மு. மு. முத்துப்பழநியப்ப செட்டியார், மலேயாவின் தோற்றம், பினாங்கு, மெர்க் கண்டைல் அச்சியந்திரசாலை 1938
3. வீராசாமி ''சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் நடந்துவந்த பாதைத்'' முதல் உலகத் தமிழாசிரியர் மாநாட்டு மலர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் 1992,

---

இலக்கிய நெறியில்

நகரத்தார்

நம் அக இலக்கியப்படி மனைவி கணவனைப் பிரிந்து, பல மாதங்கள் — ஆண்டுகள் ஆற்றியிருப்பதும், அவ்வாறு பிரிந்திருக்கும் காலத்துப் புனைதல், மகிழ்ச்சியான செயல்களில் கலந்துகொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்த்தல், கணவன் மீண்டதும் அனைத்தையும் மேற்கொள்ளுதல் யாவும், நகரத்தார் மரபிலேதான் மிக அழுத்தமாகக் காணப்படும் பழக்கவழக்கங்களாகும்.

சிலப்பதிகாரம் 'மங்கல வாழ்த்துப் பாடல்' ஒரு நகரத்தார் மரபுத் திருமண அழைப்பிதழ் போல உள்ளது.

'மாநகர்க்கு ஈந்தார் மணம்' என்று காவிரிப்பூம்பட்டினத்தி லுள்ளார்க்குத் திருமண அழைப்பு விடுப்பது 'ஊர்க் கல்யாணம் சொல் வது' என்ற மரபை உணர்த்துகிறது.

'அகலுள் மங்கல அணி எழுந்தது' என்பது, மாங்கல்யத்தை நகர்வலம் செய்வதாகும். இன்றும் திருப்பூட்டுவதற்காக திருமாங்கல் யம், கழுத்துரு, மாலை போல்வனவற்றுடன் ஊர்வலமாகச் செல்வது, குறிப்பிடத்தக்க பெரும் சிறப்புச் சடங்காகவுள்ளது.



மணமகன் வள்ளுவப்பை சுமந்து வருவது, தலைமகன் தானே தேடிய பொருளைப் பரிசமாகக் கொண்டுவருவதை நினைப்பூட்டு கிறது.

கண்ணகியைக் கோவலன் மாதா வேறுவைப்பது, இன்றும் புதிய மணமக்களை மாமியாரே முன்னின்று வேறு வைப்பதை உணர்த்து கிறது.

மாதரிவீட்டில், கண்ணகி தான் சமைத்த உணவைத் தன் கணவனுக்குத் 'தாலப் புல்லின்' தடுக்குப் போட்டுப் பரிமாறுவது, இன்றும் காணப்படும் 'தடுக்குப்போடும்' மரபையே உணர்த்துகிறது.

இங்ஙனம் எண்ணிப் பார்த்தால், பிரித்தானியர்களைப் போலப் பழம் மரபுகளை எளிதில் விட்டுவிடாத — என்றும் கட்டிக் காக்கின்ற தமிழர்கள் நகரத்தார்களே என்பது விளங்கும்.

மலேசியா வாழ் நகரத்தாரின் தமிழ்ப்பணி

முனைவர் இலக்குமி மீனாட்சிசுந்தரம், சிங்கப்பூர்

தோற்றுவாய் :

நகரத்தார் இனம் பழஞ்சிறப்புடைய இனமாக விளங்கியது போன்று நகரத்தாரின் பைந் தமிழ்ப்பணியும் பழமைமிக்கது. 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்று பரந்த மனப்பாங்குடன் பாடல் பாடிய கணியன் பூங்குன்றனார் செட்டிநாட்டுப் புலவரே என்பது அறிஞர் பலரின் துணிபு. பொதுமைக்குரல் எழுப்பிய புலவரை ஓரினத்தைத் சார்ந்தவர் எனக் குறுகிய எல்லைக்குள் அடக்கிப் பார்ப்பது பொருந்தாது. ஆயினும் தமிழினத்தின் மாண்புக்கும், புதுமைச் சிந்தனைக்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பூபாளம் இசைத்த புலவர் நகரத்தாரினத்தில் பிறந்தவர் என்று கூறும் வேளையில் இனத்தின் பெருமை மெருகேறுகிறது. இங்ஙன் சங்க காலந்தொட்டு இக்காலம் வரையில் நகரத்தாரின் தமிழ்ப்பணி இடையீடின்றித் தொடர்கிறது.

செந்தமிழ்ப்பற்றுக் கெழுமிய நகரத்தாரின் தமிழ்ப்பணியைச் சாசனங்களும் உறுதிப்படுத்து கின்றன.[1] செட்டிநாடும் செந்தமிழும் என்னும் நூலில் அறிஞர் சோம. லெ. அவர்களும் விரிவாக விளக்குவர். நகரத்தாரின் நற்றமிழ்ப்பணி தமிழகத்தில் மட்டுமன்றி அயல்நாடுகளிலும் சிறப்பான முறையில் தொடர்ந்தது. பர்மா, மலாயா, இந்தோனேசியா, இலங்கை முதலிய நாடுகளில் பொருளாதார வளத்தைப் பெருக்கியதோடன்றித் தமிழையும் தழைக்கச்செய்தனர். நாட்டுணர்வும், மொழியுணர்வும், சமயஉணர்வும் சாலப்பெற்ற நகரத்தார் இனத்தைச் சென்ற விடமெல்லாம் செந்தமிழ் வளர்த்த சீரானர் எனச் சாற்றுதல் தவறன்று. கன்னித்தமிழுக்குக் கவின்மிகு தொண்டாற்றிய இவர் திறம் கட்டுரைக்குந் தகையதன்று.

இக்கட்டுரை மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு மட்டுமே எழுதப்பட்டது.

நகரத்தார் தமிழையும் சைவத்தையும் இரு கண்ணெனக் கருதும் மாண்பினர். ஆகலின் அன்னாரின் சமயப்பணியையும் தமிழ்ப்பணியையும் பிரித்துப் பார்ப்பது பொருந்தாது, நகரத்தார் 'திருநெறிய தமிழை' வளர்த்து வருந்திறம் என்றென்றும் நினையத் தக்கது.

நகரத்தாரின் தமிழ்ப்பணியைக் கீழ்க்கண்ட அணுகுமுறைகளின் வழியே மதிப்பிடலாம்.

1. படைப்பிலக்கியத் துறையில் நகரத்தாரின் தமிழ்ப்பணி.
2. தமிழ்க்கல்வியின் வழியே தமிழ்ப்பணி
3. தமிழ் மொழியை வளர்ப்பது மற்றும் வளப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவது.
4. மக்கள் தொடர்புச் சாதனங்களாகிய பத்திரிகைத்துறை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் வழியே தமிழ்ப்பணி புரிவது.
5. படைப்பிலக்கியவாதிகளை ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்வது,
6. நூல் வெளியீட்டுத்துறை வழிப் பணிபுரிவது.
7. தமிழாசிரியர்களாகப் பணிபுரிவது.
8. ஆய்வுத்திறம் வாய்ந்த அறிஞர்களாய்ப் பணிபுரிவது,

9. தமிழருக்கான இயக்கங்கள் வழியே தொண்டு செய்வது. இவை தவிர, மலேசியா வாழ் நகரத்தாரின் தமிழ்ப் பணியைத் தனியொருவரின் பங்கு என்னும் கோணத்திலும் அணுகலாம். 'மனமிருந்தால் மார்க்கமுண்டு' என்னும் முதுமொழிக் கிணங்க உள்ளத்தே தமிழுணர்வு பிறங்கியதால் நகரத்தாரின் தமிழ்ப்பணி பல்லாற்றானும் ஓவாது வெளிப்பட்டது; தழைத்தோங்கியது.

படைப்பிலக்கியம் பலகண்ட பண்பாளர் :

'மலாயாவின் தோற்றம்' என்னும் அரிய கட்டுரை நூலை-வரலாற்று நூலை எழுதியவர் சுங்குரும்பை பி.என்.எம். முத்துப்பழனியப்ப செட்டியார். இந்நூல் இவ்வான்றோரின் கடும் உழைப்பினால் மலாயா நாட்டின் மாண்பை எடுத்துரைக்கும் பெருநோக்கோடு எழுதப்பட்ட தாகும். 1938-இல் வெளியிடப்பட்ட ஒப்புயர்வற்ற இந்நூல், ஆய்வுக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட கட்டுரை நூலாகும். அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகிய பொருள் களைப் பற்றிய உண்மையான வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு விளங்கும் இந்நூல் பி. என். எம், முத்துப்பழனியப்ப செட்டியாரின் இலக்கியப் பயிற்சியை, நகைச்சுவை நலத்தை வெளிக்காட்டுகிறது.

மலாக்கா உ. அரு. அருணாசலஞ் செட்டியார் 'தமிழறம் பேணுந் தகைமையாளர்' என்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டவர். நாநலம் என்னும் நலனுடைமையை மிகுதியாகப் பெற்ற சிறந்த பேச்சாளர் இவர். 1937—38 ஆம் ஆண்டுகளில் 'உத்தமநாதன் அல்லது சத்தியபுரி ஜமீன்தார்' என்னும் நாடகநூலை எழுதினார். இதுபோன்றே 'காரைக்காலம்மையார்', 'இந்திரா B.A' ஆகிய நாடகங்களை எழுதி மேடையேற்றினார். 'பினாங்கு தண்ணீர் மாமலை ஸ்ரீ தண்டாயுதபாணி அருட்பாடற்றிரட்டு' என்னும் நூலும் மலாக்கா அருணாசலஞ் செட்டியாரின் கைவண்ணமே! தமிழாசிரியராய்ப் பல மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார் அருணாசலனார். இவருடைய பணியைத்,

''தாய்நாடுந் தென்மொழியும் தாமோங்கத் தொண்டாற்றும்
நேயனரு ணாசலமும் நேர்குணமும்— வாய்மையுஞ்சேர்
இல்லாளுஞ் சேய்சுற்றம் யாவருமே என்றென்றும்
நல்லாராய் வாழ்ந்திடுவர் நன்று''[2]

என்று போற்றுவர் பி. திருநாவுக்கரசு.

சுப. நாராயணன்

மலேசியத் தமிழ் இலக்கிய உலகு 'கந்தசாமி வாத்தியாரான' சுப. நாராயணன் அவர் களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளது. தி. ஜ. ர. நடத்திய சக்தி இதழின் ஆசிரியராய் 1948 இல் விளங்கிய சுப. நாராயணன், சக்தியை விட்டு விலகி மஞ்சரி இதழின் ஆசிரியரானார். 'ஆரியப் புல்லுருவி', 'மதம் பிடித்த மடாதிபதிகள்' ஆகியவை தமிழகத்தில் சுப. நாவின் கைவண்ணத்தில் மிளிர்ந்த கட்டுரை நூல்கள். 'கவிதை — கலை — விமர்சனம்' என்னும் திறனாய்வு நூலையும், 'கற்பளித்த கன்னி' என்னும் புதினத்தையும், 'பேசத்தெரியுமா?' என்னும் நூலையும் மலேசியாவில் எழுதியுள்ளார்.

கொஞ்சுதமிழ் மட்டுமன்றிக் குவலயமார் ஆங்கிலமும், பேசரிய பிரெஞ்சும் சுப. நாவிடம் கொஞ்சி விளையாடின. மும்மொழிப்புலமை கொண்ட முத்தமிழ் வல்லவராம் சுப. நா. மலேசியத் தமிழிலக்கியம் என்ற ஆலமரம் உருவாக வித்தாகத் திகழ்ந்த வித்தகர் ஆவார். சுப. நாவின் முயற்சிகள்தாம் மலேசியத் தமிழ் மாளிகையின் அடிக்கற்கள். இம்மாளிகையில் 'அகோரநாத் பண்டிதராகவும்', 'பிடாரிக்கண்ணுவாகவும்', 'பஸ்மாசுரப் பாவலராகவும்' கற்பனை அவதாரங் களில் உலவியர் சுப. நா.

கவிதை, சிறுகதை, கட்டுரை, நெடுங்கதை எனப் படைப்பிலக்கியத்தின் ஒவ்வொரு துறையும் செழிக்கப் பயிற்சி கொடுத்த பண்பாளர் சுப. நா. கதை வகுப்பு என்பது சுப. நா தமிழ்நேசனில் நடத்திய ப்யிற்சிப் பட்டறையாகும், இப்பட்டறையில் உருவாக்கப்பட்ட புடம் போடப்பட்ட எழுத்தாளர்கள் பலர். சுருங்கச் சொல்லின் மலேசியத் தமிழ் எழுத்தாளர் பரம் பரை உதயமானது கந்தசாமி வாத்தியாரின் கதை வகுப்பினால்தான். 26–11–1950 முதல் 1951 வரை ஒன்பது மாத காலம் கதை வகுப்பு நடந்தது. தமிழ்நாட்டு எழுத்தாளர்களையே அதுகாறும் வாழ்வித்துவந்த மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட ஏற்பாடு செய்தார். மலையக எழுத்தாளர்களுக்குச் சுப. நா. கொடுத்த ஊக்கமும் ஆக்கமும் என்றென்றும் நினையற்பாலன. குறைவான காலமே நடந்த கதைவகுப்பு நிறை வான பலனைத் தந்தது.

கதைவகுப்பின் செயற்பாட்டைச் சுப. நா.

> ''மலாயாவில் தமிழ் எழுத்தாளர் இல்லையென்ற
> கருத்துப்பட முன்னாள் தமிழ்நேசன் ஆசிரியர்
> ஆதி. நாகப்பன் 1949 வாக்கில் தலையங்கம்
> எழுதினார். அவர் லண்டன் சென்ற பிறகு நானும்
> வானம்பாடியும் சேர்ந்து 1950—51இல் எழுத்தாளர்
> வகுப்பு நடத்தினோம்''[3]

எனக் குறிப்பிடுவர். அன்னார் குறித்தவாறு பெயர்தான் கதைவகுப்பு என்றிருந்ததே தவிர அஃது எழுத்தாளர் வகுப்பாகத்தான் இயங்கி வந்தது. இவ்வகுப்பின் முடிவில் தேர்வு நடத்தப் பட்டு 'மேதை'; 'தேர்ந்த;' 'சிறந்த'; 'நல்ல' 'ஆர்வ' எழுத்தாளர்கள் இனங்கண்டுகொள் ளப்பட்டனர், கருத்துத் திருட்டும், எழுத்துத்திருட்டும் வன்மையாகச் சாடப்பட்டன; அம்பலப் படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியத் தமிழ் மக்கள் விமரிசனக்கலை பற்றிய அறிவு பெறவும் வழிகாட்டினார் சுப.நா. மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எளிய பேச்சுத் தமிழை எழுத்து நடையில் அறிமுகப்படுத்தினார். ஆயினும் இவருடைய விமர்சனப் பார்வை விமர்சனத்தின் எல்லைகளை உள்ளடக்கியிருந்தது. தமிழ் முரசு நடத்திய ரசனை வகுப்பு விமர்சனக்கலைக்கு வித்தாகும்; சுப. நாவின் தமிழ்ப்பணிக்குத் தக்க சான்றாகும்.

சொல்லுதல் யார்க்கும் எளிது ; ஆயின் சொல்லிய வண்ணம் செயல்படுவது அரிது. மலேசியாவில் தமிழிலக்கியங்கள் பெருக வேண்டும் என்னும் வேணவாக் கொண்ட வித்தகர் சுப.நா. சொல்லியதோடமையாது, படைப்பிலக்கியங்கள் பெருகவும்தாமே முன்மாதிரியாயாய்ச் செயலாற்றினார். வானொலி நாடகங்கள் பலவற்றைப்படைத்தார். இவருடைய் 'கம்பராமாயண ஆராய்ச்சி' என்னும் ஆய்வுக் கட்டுரை தமிழ் முரசில் வெளிவந்ததைப் பலரும் அறிவர். 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தலும்' தமிழ்ப்பணியே! 'சீனமும் சீனமக்களும்' என்னும் நூல் சுப.நா. வின் மொழிபெயர்ப்புத் திறமைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். 1950-களிலேயே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்துக்குக் குரல் கொடுத்தவர் சுப. நாராயணன் ஆவார்.

முருகு சுப்பிரமணியன்

முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியனின் தமிழ்ப்பணி பத்திரிகைத் துறையில் விரிவாகக் கூறப்பெறும். ஆயினும் படைப்பிலக்கியவாதி என்ற முறையில் அவர் படைத்த பலப்பல சிறுகதைகளும், நாடகங்களும் முருகுவின் படைப்புத்திறனை வெளியிடுவதாம்.

''தனையீன்ற சமுதா யத்தின் தரத்தினை உயர்த்த வேண்டி
நினைப்பெல்லாம் தேக்கி யிந்த நெடும்புவி நிலைகளெல்லாம்
முனைப்புற்றுத் தீட்டிக் காட்டி முன்னேற்றப் பாதை போட்டுத்
தனையதற் கர்ப்பணிக்கும் தமிழெழுத் தாளன் நண்பன்''

எனக் கவிவாணர் ஐ. உலகநாதன் கூறிய இலக்கணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற உயர்ந்த எழுத்தாளர் முருகு சுப்பிரமணியன் ஆவார்.

முத்தமிழ் வித்தகரின் நல்ல எழுத்தாற்றல் காரணமாகவே பத்திரிகைப் பொறுப்புகள் தாமாக அவரை நாடி வந்தன. தமிழ்முரசு, தமிழ்நேசன் ஆகிய பத்திரிகைகளின் ஏற்றமிகு ஆசிரியராகப் புகழ்க்கொடி நாட்டியவர் முருகு ! இவருடைய 'நீதிவெண்பாவின் நெறிமுறைகள்', 'தமிழ்கூறு நல்லுலகம்' ஆகிய இரு நூல்கள் மட்டுமே இன்று அரிதின் கிடைப்பன ; எஞ்சிய நூல்கள் (ஏறத்தாழ 18) பேணப்படாது மறைந்தன. நீதிவெண்பாவின் நெறிமுறைகள் என்னும் நூல் நீதிவெண்பா என்னும் அறஇலக்கியம் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பாகும். சென்னையில் 1968ஆம் ஆண்டு நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினைப் பற்றி எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு 'தமிழ் கூறு நல்லுலகம்' என்னும் நூலாக வெளிவந்தது.

கா. இராமநாதன் அவர்கள்

சைவப்பெரியார் கா. இராமநாதன் நற்றமிழ் வளர்த்த நகரத்தார் பெருமக்களுள் சிவம் பெருக்கும் சீலராய்த் திகழ்ந்தார். சைவப்பணியைச் சிறப்பாகச் செய்தது போன்றே தமிழ்ப் பணியையும் தளராது செய்தார். 'மலாயாத் தமிழ்ப் பண்ணை' என்னும் அமைப்பு உருவாகப் பெருந்துணை புரிந்தார். இதன் நிறுவனர் மலாக்கா உ.அரு. அருணாசலஞ் செட்டியார். எளிய தமிழில் நகைச்சுவை உணர்வுடன் கட்டுரை படைக்கும் திறம் கைவரப் பெற்றவர் கா. இராமநாதன். இவரெழுதிய பயண நூல் 'நான் கண்ட மலாயா' என்பதாகும். மலாயா நாட்டின் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், மொழிகள் ஆகிய பல செய்தி களைக் கூறி மலாயா நாட்டை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார். சாதாரண மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்கும் கொள்கைகளையும், நெறி முறைகளையும் இந்நூல் விளக்குகிறது.

தமிழ்மொழியின் வாயிலாகச் சமயத்தை வளர்க்கப் பதினோரு கட்டுரை நூல்களைப் படைத்துள்ளார் சைவப்பெரியார். 1) ஏன் பிறந்தோம்? (1953) 2) ஆழமும் அகலமும் (1955) 3) நாரத பக்தி சூத்திரம் (1958) 4) பார்ப்பது எதை? 5) ஞானச்செய்தி (1960) 6) சைவத்தின் சிறப்பு (1961) 7) வேலன் விளையாட்டு (1962) 8) வாழ்க்கை (1965) 9) மலேயா—இந்தியா யாத்திரை (1965) 10) வாழ்க்கை 11) முருகன் நாமங்கள்.

முரு. இரத்தினம் செட்டியார்

புலவர் மாமணி, சைவசித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் இலக்கியப் புலமையாலும்,சமயப்புலமையாலும் தமிழ்ப்பணி புரிந்துள்ளார்கள். இலக்கிய, சமயச் சொற்பொழிவாற்றுவதில் (எளிய முறையில்) தன்னிகர் அற்றவர். இவரும் பல நூல்களை எழுதியுள்ளார். தடைகளும் விடைகளும் (1966); இதோ சைவசித்தாந்தம் தெரிந்து கொள் ளுங்கள் (1991) என்பன அன்னாரின் நூல்களுள் ஒரு சில.

சில கவிதை நூல்களையும் மலேசியா வாழ் நகரத்தார் பெருமக்கள் படைத்துள்ளனர். சான்றாக வே. இராமநாதன் செட்டியார் 'ஸ்ரீமரத்தாண்டவர் வருகைப் பதிகமும் காவடிச் சிந்தும், என்னும் நூலைப் (1961இல்) பாடியுள்ளார். ராமனாத செட்டி என்பார் பாடிய 'நாச்சியார்புரம் நாச்சியாரம்மன் தோத்திரப் பதிகம்' என்னும் நூல் (1932) பினாங்கில் வெளி

வந்துள்ளது. குவாந்தானில் எழுந்தருளியுள்ள மரத்தாண்டவர் மீது பதிகம் பாடியவர் பாலகவி வயிநாகரம் என்னும் குறிப்பை நோக்க அன்னாரின் மலேசிய வருகையின்போது இந்நூல் பாடப்பட்டிருக்கவேண்டும் எனக் கூறலாம்.

நாடகக்கலையை வளர்ப்பதிலும் நாட்டங் காட்டியுள்ளனர் நகரத்தார். சான்றாக எஸ். ஆர். எம், பழனியப்பன் அவர்கள் வானொலிக்கும், தொலைக் காட்சிக்குமெனப் பல நாடகங்களை எழுதியுள்ளார். சா. ஆ. அன்பானந்தன் மலேசியாவில் தமிழ் நாடக வளர்ச்சி என்னும் கட்டுரையில் எஸ். ஆர். எம். பழனியப்பனின் நாடகங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவருடைய நாடகங்கள் நூல் வடிவு பெற்றில.

அலோர்ஸ்டார் ரெ. இராமசாமி அவர்களும் எண்ணற்ற இலக்கிய நாடகங்களைப் படைத்தவர். இவருடைய மொழியுணர்வை மதிப்பிட நல்ல அளவுகோலாக அமைவன இலக்கிய நாடகங்கள் ஆகும். இராமகாதையில் உள்ள பன்னீராயிரம் பாடல்களுக்குள் ஐந்நூற்று எண்பத்தெட்டுக் கவிதைகளைத் தேர்வு செய்து கதையின் செறிவு பழுதுறாமல், இலக்கியநயம் பொருந்திய விளக்கங்களை எழுதிக் 'கருத்தும் கவியும்' என்னும் பெயரில் மலேசிய வானொலியில் இவர் 1960 களில் சிறப்பாகப் படைத்தார்.

மரபு பிறழாமல் கவிதை புனைவதில் கைதேர்ந்தவர் ரெ. இராமசாமி. மலையகத்தில் மரபுக்கவிதைப் பயிர்செழித்து வளர்வதற்குக் கணிசமான அளவில் பங்காற்றியுள்ளார். அலோர் ஸ்டார் அருள்மிகு தண்டாயுதபாணி மீது பாடப்பெற்ற கவிதை நூல் 'இருபா இருபது அந்தாதி' என்பதாகும். 'இலக்கிய நாயகி சீதை' என்னும் கவிதை நூலும், 'சுவாமி சிவானந்தர் மலர் வழிபாடு' என்னும் நூலும் இவர் பாடியவை.

'எம்பாவை எழில்', 'பாரதியின் காதலி', 'கம்பரின் காவிய ஓவியம்', 'க, தி தரும் காதற்சுவை' ஆகிய உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். இவை நூல்நயம் பாராட்டும் போக்கிலும், ஆய்வுக் குறிப்புகள் ஒரு சிலவற்றைக் கொண்டும் இலங்குகின்றன.

தமிழ்க் கல்வியும் தகைசால் பணியும் :

> ''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> அன்ன யாவினும் புண்ணியங் கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''[5]

என்பது கவியரசர் பாரதியின் வாக்கு. இதனைவேதவாக்காய்ப் பின்பற்றியோர் நகரத்தார் பெருமக்கள். சென்றவிடமெலாம் கல்விப்பயிர் செழித்து வளரவேண்டும் என்பதில் கருத்தூன்றியவர்கள். தமிழகத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கல்விப் பணிக்கெனப் பொருட் செல்வத்தை வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களும் உள்ளனர். இத்தகையோருள் ஒருவர் செட்டியப்ப செட்டியார். இவர் ஈப்போவில் செட்டியார் தமிழ்ப்பள்ளி என்னும் பள்ளியை நிறுவினார். இப்பள்ளி தொடக்கத்தில் தனியார் பள்ளியாக இருந்து பின் அரசினர் பள்ளியாயிற்று. தமிழ்க் கல்விக்கென வெள்ளி மாநிலத்தில் (பேரா) விடிவெள்ளியாய்த் திகழ்ந்தது இப்பள்ளி ஒன்றேயாம்.

தமிழார்வத்தை மக்களிடையே வளர்க்க மலை நாட்டில் பல இலக்கிய வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டன. இத்தகு இலக்கிய வகுப்புகளில் பாடம் கற்பித்த பெருந்தகைகளாக மலாக்கா உ. அரு. அருணாசலம் செட்டியார், சைவப்பெரியார் கா. இராமநாதன் ஆகியோரைக் கூறலாம். சுப. நாராயணன் அவர்கள் நடத்திய வகுப்புகள் முன்னர்க் கூறப்பட்டன.

தமிழ்மொழி வளர்ச்சிக்கும், வளமுறுதற்கும் நகரத்தார் ஆற்றிய நற்பணிகள்:

தமிழ்மொழி வளர்தற்கும், வளப்பமடைதற்கும் பல அமைப்புகளை நிறுவிப் பணிபுரிந்துள்ளனர் நகரத்தார். மலாயாத் தமிழ்ப்பண்ணை என்ற அமைப்பை நிறுவித் தமிழ்மொழி வளமுறுதற்கு வழிசெய்தனர் மலாக்கா அருணாசலஞ்செட்டியாரும், சைவப்பெரியாரும். இவ்வமைப்பின் வழிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. 'கற்றலிற் கேட்டலே நன்று' என்னும் கோட்பாட்டின்படிக் கேள்விஞானத்தை ஊட்டினர்; தமிழன்பை வளர்த்தனர். தமிழறிவும், தமிழுணர்வும் மொழியைத் தழைக்கச்செய்யுமன்றோ?

சாதிக்கொரு சங்கம் அமைத்து ஒன்றுபட்டுச் செயலாற்றுவது தமிழர்தம் பெருவழக்கு. இவ்வண்ணம் நகரத்தாரும் சென்றவிடமெல்லாம் ஒன்றுபட்டுப் பண்பாட்டுணர்வுடன் செயல்படச் சங்கங்கள் அமைத்தனர். தொழில்முறையில் அமைந்த வர்த்தக சங்கங்களும் தாய் மொழியை மறக்கவில்லை. இச்சங்கங்களின் நிகழ்ச்சிகள் பல மொழியை மையமாய் கொண்டவையாயும், ஆக்ககரமாயும் அமைந்தன. இவற்றுள் தொலைநோக்கோடு சிந்தித்துச் செயல்படுவதில் கோலாலும்பூர் நகரத்தார் சங்கம் சிறந்து விளங்குகின்றது. அரசின் மொழிக் கொள்கையாலும், எதிர்காலத்தை வளமுடையதாக்க உதவும் அறிவியல், தொழில்நுட்பக்கல்வியாலும் இன்றைய நகரத்தார்குலச் சிறார்கள் பலர் தமிழ்மொழியைக் கற்பதில்லை. மொழி வாழ்ந்தால்தான் இனம் வாழும் என்ற எச்சரிக்கை உணர்வோடு தமிழைக் கற்பித்து வருகின்றனர் கோலாலும்பூர் நகரத்தார் சங்கத்தினர். இவ்வகுப்புகள் செந்தூல் செட்டியார்கள் கோயிலில் ஒவ்வொரு சனி, ஞாயிறன்றும் நடத்தப்படுகின்றன. வேலைவாய்ப்பு, வாழ்க்கைவசதி ஆகியவைகளுக்காகப் பிற துறைகளைக் கற்றாலும், தமிழனாக வாழத் தாய்த்தமிழைக் கற்பதும், கற்பிப்பதும் இன்றைய நிலையில் மிகவும் அவசியமான ஒன்று என உணர்ந்து அதற்கான செயல்திட்டங்களை நகரத்தார் சங்கம் நடைமுறைப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. தமிழ் நாற்றங்கால்களை உருவாக்குவதில் நாரியர் ஈடுபட்டுள்ளது தாய்த்தமிழின்பால் தாய்க்குலம் கொண்ட அக்கறையை வெளிக்காட்டுகின்றது.

தொடர்புச்சாதனங்களும் தொல்தமிழ்ப்பணியும் :

அறிவியல் வளர்ச்சி பரந்து விரிந்திருக்கும் உலகைச் சுருக்கிவிட்டது. இதற்கு முக்கியமான காரணிகளுள் பத்திரிகையின் தோற்றமும் ஒன்றாம். மலேசியாவில் நாளிதழ்த் துறையிலும் நல்லதொரு முன்னோடியாய்த் திகழ்ந்தது தமிழ்நேசன் நாளிதழாகும். தமிழ்நேசன் நாளிதழின் உரிமையாளராக விளங்கியவர் நா. முரு. மலையாண்டி செட்டியார். நேசனின் இயக்குநர் புலவர் மு. சேதுராமன்; நேசன் நிறுவன அதிகாரி ஆகியோரும் நகரத்தார் இனத்தவரே. (எம். நாகப்பன்), புலவர் மு. சேதுராமன் தமிழ்நேசனின் ஆசியராகவும் பணியாற்றித் தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றினார். மலேசியத் தமிழ்ப் பத்திரிகை உலகில் இவருடைய பணி சிறப்பிடம் பெற்றுள்ளது. ஆயினும் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் அனைத்துக் கோணங்களிலும் தமிழ் நேசன் தலை சிறந்த பத்திரிகையாக விளங்கியது. இதற்கான சிறப்புக் காரணங்களாக நாம் இரண்டினைக் கூறலாம்.

1) முருகுவின் திறமை—முதிர்ந்த பத்திரிகைத்துறை அனுபவம்; தமிழுணர்வு; சமுதாய அக்கறை; அஞ்சாநெஞ்சம்; உலகத்தோடொட்ட ஒழுகும் பண்பு ; புதியன படைக்கும் புரட்சி வேட்கை ஆகிய (முத்தமிழ் வித்தகரின்) தனித்தன்மைகள்.

2) முன்னவராம் கு. அழகிரிசாமி அமைத்துக் கொடுத்த தடம். பாதையில் சிக்கலில்லை என்றால் பயணத்தில் சிக்கலிராதன்றோ?

முருகு பத்திரிகை ஆசிரியராக மட்டுமன்றிப் படைப்பிலக்கியவாதியாகவும், ஆய்வுத்திறம் அமைந்த அறிஞராகவும் விளங்கினார். உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் மற்றும் பல கருத்தரங்குகள் ஆகியவற்றில் அன்னார் படைத்த கட்டுரைகள் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தடம் அமைத்துக் கொடுத்தன. வானொலியில் பல சொற்பொழிவுகளை ஆற்றினார். இவர் மைந்தர் திரு. செல்வம் வானொலியில் பணியாற்றி வருகிறார்.

நாளிதழ் மட்டுமன்றி வார இதழ், மாத இதழ் போன்றவற்றையும் நகரத்தார் பெருமக்கள் வெளியிட்டுத்தமிழுக்கு நற்றொண்டு ஆற்றியுள்ளனர். 'சிலம்பு' என்னும் மாதஇதழை 1960இல் கோலாலம்பூரில் என். எம். என். மலையாண்டி செட்டியார் வெளியிட்டுள்ளார்.[6] சோலை என்னும் மாதஇதழ் இலக்கிய இதழாக மலர்ந்தது. தி. சு. சண்முகம் நிறுவனராயிருப்பினும் சைவப்பெரியார் கா. இராமநாதன் இதற்கு ஆசிரியராக விளங்கினார். இவ்விதழ் கோலாலம்பூரில் 1950 களில் வெளிவந்தது. தமிழ்க்கொடி என்னும் மாத இதழையும், தமிழ்ப் பூஞ்சோலை (வார இதழா அல்லது மாத இதழா என்பது அறியுமாறு இல்லை) இதழையும் மலாக்கா உ. அரு. அருணாசலனார் நடத்தினார். தமிழ்க்கொடி 1939இலும், தமிழ்ப் பூஞ்சோலை 1946இலும் வெளிவந்தன. புதிய சமுதாயம் என்னும் இதழைத் தன் இறுதிக் காலம் வரை (10—4—82) நடத்தினார். இவ்விதழ் இருவார இதழாக ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வெளிவந்தது.

முன்னர்க் குறிப்பிட்டவாறு எஸ். ஆர். எம். பழனியப்பன் அவர்களின் நாடகம் தொலைக்காட்சியில் ஒளியேறியுது. தொலைக்காட்சியில் தமிழ் ஒளிபரப்பு மிகவும் குறுகிய நேரமே; மேலும் காலக்கட்டுப்பாடு உண்டு. ஆகலின் இத்துறையில் தமிழ்ப்பணிக்கு வாய்ப்பில்லை.

படைப்பிலக்கிய வாதிகளை ஆதரிப்பது :

முருகு சுப்பிரமணியன் பல புதிய, இளம் எழுத்தாளர்களை உருவாக்கினார். அவர்களை அறிமுகப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, அவர்களை நிறைய எழுதுமாறு ஊக்கினார். முருகு கொடுத்த ஊக்கத்தால் உயர்ந்த எழுத்தாளர் பலர்.

இராம. பெரியகருப்பன் செட்டியார் (காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி நிறுவனர்) விளம்பரம் விழையாது தூய்தமிழ்த்தொண்டாற்றிய தூயர்! இவர் 'மெய்யம்மை பதிப்பகம்' என்னும் பதிப்பகத்தைத் தமிழகத்தில் நிறுவி நல்ல, அரிய நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார். உலகளாவிய நிலையில் 'மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்' உருவாகக் கவிதைப் போட்டி (சிற்றிலக்கியப் போட்டி) நடத்தினார். இப்போட்டியில் பினாங்கைச் சேர்ந்த புலவர் சி. அன்பானந்தம் வெற்றி பெற்றார். மேற்படி நூலும் மெய்யம்மை பதிப்பக வெளியீடாக மலர்ந்தது.

மேலும், சிவானந்தம் என்பார் பாடிய பிள்ளைத்தமிழ் நூலினைச் (பினாங்கு தண்ணீர்மலை தண்டாயுதபாணி பிள்ளைத்தமிழ்) செப்பஞ் செய்து கொடுத்து, ஆசிரியருக்குப் பொருளுதவியும் நல்கினார் தமிழறம் பேணும் தகைமையாளரான மலாக்கா உ. அரு. அருணாசலனார்.

நூல் வெளியீட்டுத்துறையும் நுவலரும் பணியும் :

மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையில் 'நாட்டுக்கோட்டைச் செட்டியார் அறக்கட்டளை' என்னும் அமைப்பை நிறுவி அதற்கெனப் பத்தாயிரம் மலேசிய வெள்ளியை அன்பளிப்பாக வழங்கியவர் சைவப்பெரியார். இன்று அப்பணம் பெருகிப் பல இலட்சங்களாகியுள்ளது. பல தமிழ் நூல்கள் உருவாவதற்கும், பல கருத்தரங்குகள் நடத்துதற்கும்

இவ்அறக்கட்டளை உதவியுள்ளது. இந்திய ஆய்வியல் துறை வெளியீடுகள், இரண்டாம் (உலக) சைவசித்தாந்த மாநாட்டு மலர், அருள்நெறித் திருக்கூட்டப் பவளவிழா மலர் எனப் பல தமிழ்நூல்கள் வெளிவர இவ் அறக்கட்டளை பெரும்பங்காற்றியுள்ளது.

வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாவண்ணம் உதவும், விளம்பர வேட்கை இல்லாத செட்டியார்கள் தமிழ்நூல்கள் வெளியிடப் பேருதவி புரிந்துள்ளனர்.

ஆசிரியப்பணி, ஆய்வுப்பணி :

தமிழகத்தில் பெரும்பேராசிரியர்களாய் விளங்கிய செட்டியார்கள் மிகப்பலராவர். ஆயின் மலேசியாவில் ஆசிரியப்பணி (தமிழ்) புரிவோர் அருகியே உள்ளனர். பிறதுறைகளில் பேராசிரியர் களாய்ப் பணிபுரியினும் தமிழுணர்வும், தமிழுக்கு ஏதேனும் செய்யவேண்டும் என்ற ஆவலும் உடையவர்கள் சிலர். இவர்களுள் முனைவர் அழ. இராமையா (கல்வியியல்துறை, மலாயாப் பல்கலைக் கழகம்) முனைவர் வி.மு. பழனியப்பன் (தாவரவியல் துறை, மலாயாப் பல்கலைக் கழகம்) ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

இந்திய ஆய்வியல் துறையின் தலைவர் இராம. சுப்பையா மிகச் சிறப்பான பேராசிரியர். இவர் தமிழ்மொழிக் காவலர்; 'தமிழ் மலேசியானா' என்னும் தொகுப்பு நூலின் ஆசிரியர். இவர் கடும் உழைப்புடையார்; ஆகலின் இவ்வரிய தொகுப்பை வெளிக் கொணர்ந்தார். 'Sejarah Melayu' என்னும் மலாய் வரலாற்றை 'மலாக்கா மன்னர்கள் வரலாறு' என்று தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மும்மொழிப் புலமை (மலாய், ஆங்கிலம், தமிழ்) கொண்ட இவர் (இளவயதில்) விபத்தில் மாண்டார். இவர் பெயரால் இயங்கும் இராம சுப்பையா கல்விநிதி என்னும் நிதியமைப்பு ஏழைத் தோட்டப்புற மாணவர்களுக்குக் கல்வியில் உயர உதவித்தொகை வழங்கி வருகிறது. 'குறுகிய காலத்தில் நிறைவான தமிழ்ப்பணி செய்த தமிழ்த்தொண்டர் இராம சுப்பையா' என மலேசியத் தமிழ் உலகு இவரை என்றென்றும் நினைவுகூரும் !

முனைவர் சுப. திண்ணப்பன், முனைவர் திருமதி. இலக்குமி மீனாட்சிசுந்தரம் ஆகியோரும் மலாயாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய தமிழ் விரிவுரையாளர்களாவர்.

இயக்கங்களும் இன்றமிழர் நலனும் :

தமிழவேள் கோ. சாரங்கபாணி தமிழர் நலனுக்காக அயராது பாடுபட்டவர். அன்னாரின் சமூகப்பணிக்கு ஆதரவு நல்கித் தோளோடு தோள் கொடுத்து உதவிய தொண்டர் பெருமகனார் வயி. சண்முகம் செட்டியார்! தன்னுடைய சமூகமே (நகரத்தார்) தன்னைத் தனிமைப்படுத்திய போதும் தயங்காது, அச்சமூகத்தினரின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது மலையகத் தமிழர் நலனுக்காக அயராது பாடுபட்ட அருந்தொண்டர் சண்முகஞ் செட்டியார்! தமிழர் வாழ்ந்தாலன்றோ தமிழ் வாழும்? ஆகலின் தமிழரை வாழ்விக்கப் பல்லாற்றானும் பாடுபட்டு, நமக்கேன் வம்பு? எனஒதுங்கி நில்லாது அவர் செய்த பணிகள் அனைத்தும் தமிழை வாழ்விக்கச் செய்த பணிகளே! கோ. சாவின் முயற்சிக்கு ஆதரவு நல்கிய ஒரே ஒரு செட்டியார் சண்முகம் செட்டியார் என்று ஒப்பற்ற புகழைப் பெற்றவர்!

இறுவாய் :

படைப்பிலக்கியத்துறை, சமயத்துறை, கல்வித்துறை, தொடர்புச்சாதனத்துறை, நூல் வெளியீட்டுத்துறை, ஆய்வுத்துறை, கலைத்துறை எனத் துறைதொறும் தமிழ்த் தொண்டாற்றிய தூயர் நகரத்தார்! இவர்கள் துறைதொறும் ஆற்றிய தமிழ்ப்பணி நேற்றுடன் நில்லாது நாளையும் பெருகும் என நம்பலாம்! ஏனெனில் தமிழை மறவாச் சிந்தையரன்றோ நகரத்தார்?

மேற்கோள் விளக்கம்

1. S. Chandrasekar, The Nagarathars of South India, P—34
2. பெ. நா. மு. முத்துப்பழனியப்பன், மலாயா சரித்திரம், ப—166.
3. சுப. நாராயணன், சங்கமணி, மே தினமலர், 1950.
4. ஐ. உலகநாதன், சந்தனக்கிண்ணம், ப—27.
5. பாரதியார் கவிதைகள், ப—140.
6. இராமசுப்பையா, தமிழ் மலேசியானா, ப—58.

சமய நெறியில்
நகரத்தார்



நகரத்தார் கோயிலைச் சார்ந்துவாழும் குடிகளாகவே விளங்கு கின்றனர். ஒன்பது நகரக் கோயில்களைச் சேர்ந்த இருபத்து இரண்டு கரையாரும், தத்தம் கோயிலை வைத்தே தம்மை அடையாளம் காட்டு கின்றனர். பிறர் கோத்திரம், குடி என்பதை எவ்வெவ்வாறோ வகுத்துக் கொள்ள நகரத்தார்மட்டும். 'இவர் இளையாத்தக்குடிக் கழனிவாசல்' 'இவர் வயிரவன் கோவில்'என, இவ்வாறு கோயிலை வைத்துப் பிரிவு களைக் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் தத்தம் கோயிலுக்குத் திருவிளக்குவரி கட்டுகின் றனர். கோயிலில் பதிவு செய்து, கோயில் மாலை வந்து மணம் முடிக் கின்றனர். அதாவது இவர்களது பதிவு அலுவலகம் கோயிலேயாகும்.

தாம் நிலையாகவாழும் ஊர்தோறும் நகரக்கோயில் ஒன்றைப் பொதுவாகக் கட்டி, அதற்கு ஆண்டுதோறும் புள்ளி வரி கட்டி நடை முறைப்படுத்தி வருகின்றனர். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என ஔவை சொல்லிய வாக்கைக் கடைப்பிடித்து வருபவர் நகரத்தார்களேயாம்.

தாம் கொண்டுவிற்கச் சென்ற ஊர்தோறும், 'செட்டிமக்கள் கப்பலுக்குச் செந்தூரான்' துணை என்பதால், தண்டாயுதபாணி கோயில்களை அமைத்து வழிபட்டனர். கதிர்காமம் உள்ள இலங்கை யில் மட்டும் 'கதிரேசன் கோயில்' கட்டினர்,

இன்று அயல்நாடுகளில் எல்லாம் இந்து சமயக் கோயில்களைக கட்டுவதிலும், உள்நாட்டில் பழைய கோயில்களைப் புதுப்பித்தும் புதி தாகக் கட்டியும் குடமுழுக்கு நன்னீராட்டுச் செய்வதிலும் நகரத்தார் களுக்குப் பெரும்பங்கு உண்டு.

கோயில் வளர்ச்சியில் பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம்போல, நகரத்தார் காலம் என ஒன்று எழுதப்பட்டு வருகிறது.

கோயிலை நீதிமன்றமாகவும் சமுகப் பொது வளர்ச்சி நிலைய மாகவும் கல்வி கலை வளர்ச்சிக்கான உறைவிடமாகவும் பேணும் மரபுகள் நகரத்தார்களிடம் சிறப்பாகக் காணப்படுவதை, உலகமே வியந்து பாராட்டுகிறது.



சைவம் வளரத் தமிழ்வளரத் தாம்வளரும்
மெய்யன்ப ராக விளங்கும் நகரத்தார்
செம்மையுடன் வாழத் திருவளர்க்கும் தென்மதுரை
அம்மா! மீ னுட்சி! அருள்.

விஜயா பிரிண்டர்ஸ், 28, டவுன்ஹால் ரோடு, மதுரை-1.